97/2002

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

மார்ச் 27, 2௲ தொகுதி 10

எண் 2.

V2,1,31 P00
P00-90-2
2, 113

வெளியீடு 20-11-2000 Issued 20-11-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 27, 2000 – தொகுதி 90 – எண் 2

**Monday the 27th March, 2000 – Volume 90 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

*விலை ரூ. 3.00*] **[Price Rs. 3.00**

D
V211,31 P00
P00-90-2
222723

47 —
— 20021

**27-03-2000**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| *1. இரங்கற் குறிப்புகள்—* | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 51-52 |
| *2. வினாக்கள் விடைகள்—* | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 52-92 |
| *3. அறிவிப்பு—* | |
| மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் ஆற்றிய உரைக்கு உறுப்பினர்கள் தெரிவித்த நன்றியறிவிப்புத் தீர்மானம் கிடைக்கப் பெற்றமைக்கு ஆளுநர் மகிழ்ச்சி தெரிவித்தல் | 93 |
| *4. தகவல் கோரல்—* | |
| (அ) தமிழக மீனவர்களை பாகிஸ்தான் சிறையிலிருந்து மீட்டல் | 93-95 |
| (ஆ) தீப்பிடிக்காத வீடுகள் கோரி ரிசர்வ் வங்கி எதிரில் குடியிருப்போர் கோட்டை முன் சாலை மறியல். | 158-161 |
| *5. முன்பண மானியக் கோரிக்கைகள், 2000-2001, பேரவையில் வைத்தல்—* | |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 96-99 |
| *6. இறுதித் துணை நிதி நிலை அறிக்கை, 1999-2000, அளித்தல்—* | 99-106 |
| * மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 100-106 |

| | பக்கங்கள் |
|---|---|
| 7. வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம்— | 106-158 |
| திரு. சி. ஞானசேகரன் | 106-119, 132-133,151 |
| திரு. பீ.அ. வைத்தியலிங்கம் | 119-128 |
| திரு. ஜி. பழனிசாமி | 128-134, 136-139 |
| * திரு. தங்கம் தென்னரசு | 139-140, 143-151 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 151-158 |
| திரு. வ. வேலுசாமி | 161-171 |
| * திரு. ரா. சேதுநாதன் | 171-180 |
| * திருமதி எ.எஸ். பொன்னம்மாள் | 180-189 |
| 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 190-193 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 14, பிரமாதி - திருவள்ளுவர் ஆண்டு 2031
## 2000 மார்ச் 27, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம்வழுதி** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது."

நல்ல பண்பு இல்லாதவர்கள் அன்பு வெள்ளத்தில் நம்மை மூழ்கடிப்பதுபோல் தோன்றினாலும் அவர்களது நட்பை மேலும் வளர்த்துக் கொள்ளாமல் குறைத்துக்கொள்வதே நல்லது.

### 1. இரங்கற் குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரங்கற் குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. கோவை செழியன் அவர்கள் 14-3-2000 அன்றும், திரு. ஜே.எஸ். இராசு அவர்கள் 15-3-2000 அன்றும் மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் அவர்கள் காங்கேயம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1971 முதல் 1976 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

அதேபோல், திரு. ஜே.எஸ். இராசு அவர்கள் பெரம்பலூர் (தனி) தொகுதியிலிருந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967-71, 1971-76 மற்றும் 1980-84 ஆகிய ஆண்டுகளில் சிறிய முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

[பேரவைத் துணைத் தலைவர்] [2000 மார்ச் 27

இம்முன்னாள் உறுப்பினர்களின் மறைவால் அவர்களை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, ஒரு நிமிடம் அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 81, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**81—**

### ஆரம்பப் பள்ளி தொடங்குதல்

*30176—**திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கடுகூர், சந்திரபாளையம், முனயன்குறிச்சி, புத்தூர் ஆகிய கிராமங்களுக்கு ஆரம்பப் பள்ளி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அருகிலேயே பள்ளிகள் உள்ள காரணத்தால், புதிதாக பள்ளி தொடங்க அவசியம் எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. அமரமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வினா எண் 82, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



2000 மார்ச் 27]

**82—**

### 24 மணி நேர மருத்துவமனை

*14853—**திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலத்தில் இயங்கும் மருத்துவமனையை, 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனையாக மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் 1-1-1998 முதல் 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகின்றது. அவ்வாறு 24 மணி நேரம் செயல்படும் வகையில் கூடுதலாக மருத்துவர் மற்றும் துணை செவிலியர் பணியிடங்களும், அவசரகால ஊர்தியும், படுக்கை வசதிகள் மற்றும் ஆய்வுக்கூட உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கண்டமங்கலத்திலே எல்லா வசதிகளும் அமைக்கப்பட்டிருந்தாலும்கூட, ஏராளமான நோயாளிகள் கட்டுக்கடங்காத அளவிலே அங்கே இருந்துகொண்டிருக்கின்றார்கள். புதுவை மாநிலத்தையொட்டிய அந்தப் பகுதியில் ஏராளமான அளவில் இருக்கும் நோயாளிகளைக் குறைப்பதற்கு, அரசு, 'வருமுன் காப்போம்' என்ற திட்டத்தை அந்தப் பகுதியிலே நிறைவேற்றிடவும்,

"நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்"

என்ற குறளை எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பொறிக்கவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல, 'வருமுன் காப்போம்' திட்டத்தைத் தமிழகத்திலே சுமார் 10,000 இடங்களில்

நிறைவேற்ற இருக்கின்றோம். படிப்படியாக ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அந்தத் திட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியிலும் அந்தத் திட்டத்தினை விரைவில் நிறைவேற்றுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

*முற்பகல் 9-35*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், திருமக்கோட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, தனியார் தத்தெடுத்ததன் காரணமாக மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. 15 தினங்களுக்கு முன்னால்கூட, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பங்குகொண்டு கிட்டத்தட்ட 22 இலட்ச ரூபாய் செலவிலே கட்டடங்களும், குடியிருப்புகளுமாகக் கட்டித் திறந்து கொடுத்திருக்கிறார்கள். அந்த மருத்துவமனையை 24 மணி நேர மருத்துவமனையாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. அதைப் பரிசீலித்து, ஏதாவது சிறப்பு நேர்வாகக் கருதியாவது, அதை அனுமதிப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 250 இடங்களிலே 24 மணி நேரம் செயல்படுவதற்கான திட்டத்தினை இந்த அரசு அமல்படுத்தியிருக்கிறது. தனியார் சிலர் ஆரம்ப சுகாதார நிலையங்களை தத்தெடுத்து கூடுதலாகச் செலவு செய்தாலும்கூட, உடனடியாக 24 மணி நேர மருத்துவமனைகளை இந்த ஆண்டு ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 24 மணி நேர மருத்துவமனைகளை அரசாங்கம் ஆரம்பித்து அதற்கான மருத்துவர்களை, செவிலியர்களை மற்றும் தேவையான உதவியாளர்களை எல்லாம் நியமிக்கிறபோது, தலைமையிடத்திலே இருக்கக்கூடிய மருத்துவமனையிலிருந்து எடுத்துப் போட்டுவிடுகிறீர்கள். தலைமையிடங்களில் இருக்கக்கூடிய மருத்துவமனைகளிலேயிருந்து எடுப்பதால், அங்கே Doctors shortage மற்றும் Nurses shortage என்றெல்லாம் பிரச்சினை வருகிறது. ஆகவே 24 மணி நேர மருத்துவமனைகளை ஆரம்பிக்கிறபோது தலைமையிடங்களில்



இருக்கக்கூடிய மருத்துவர்களையோ, செவிலியர்களையோ எடுக்காமல் அதற்காக தனிப்பட்ட முறையிலே Tamil Nadu Public Service Commission மூலமாகவோ அல்லது மற்ற வகைகளிலோ, நிரந்தரமாக மருத்துவர்களை, மற்றவர்களை நியமிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? இப்போது தலைமையிடத்திலே இருக்கக்கூடிய vacancies fill-up செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 24 மணி நேர மருத்துவமனையை ஆரம்பிக்கும்போதே அந்த மருத்துவமனைக்குத் தேவையான டாக்டர்கள் மற்றும் செவிலியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். சில நேரங்களில் திடீரென்று ஒரு மருத்துவமனையிலே இரண்டு டாக்டர்கள் ஓய்விலே போய் விடுவார்களேயானால், அந்த நேரத்திலே ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குத்தான் தலைமை மருத்துவமனையிலிருந்து தற்காலிகமாக டாக்டர்கள் அங்கே அனுப்பப்படுகிறார்கள். பொதுவாக, 24 மணி நேர மருத்துவமனைக்குத் தேவையான டாக்டர்கள் Service Commission மூலமாக நேரடியாகவே தேர்வு செய்து நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய தலைமை மருத்துவமனையாக இருக்கிற அரசு பொது மருத்துவமனையிலே இப்போது இருதய சிகிச்சைக்குண்டான கருவிகள் எல்லாம் பழுதுபட்டு இருக்கின்றன, தகுந்த மருந்துகள் இல்லை என்று மிகப் பெரிய அளவிலே புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதனுடைய உண்மை நிலை என்ன என்பதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு விளக்குவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை பொது மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைக்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தேவைப்படுகின்ற அளவுக்கு நிதியை ஒதுக்கித் தந்து, அங்கே அறுவைச் சிகிச்சைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தனியார் மருத்துவமனையிலே ஓர் அறுவைச் சிகிச்சைக்கு ரூ.2,50,000 கட்டணம் செலுத்த வேண்டியிருக்கிறது. இதைக் கருத்திற்கொண்டு தமிழ்நாட்டில் மட்டுமின்றி, தென் மாநிலங்களில் இருக்கின்ற ஏழையெளியவர்கள் இருதய அறுவைச் சிகிச்சைக்காக பொது மருத்துவமனைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். எனவே அப்படி வருகின்ற அத்தனை பேருக்கும் அறுவைச் சிகிச்சை

[2000 மார்ச் 27

செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வது கொஞ்சம் கடினமாக இருக்கின்றது. இருந்தாலும்கூட, நம்முடைய தமிழகத்திலே இருக்கிற நோயாளிகளுக்கு முன்னுரிமை கொடுத்து வருகிறோம். அங்கே அவர்களுக்குத் தேவையான வால்வுகளை வாங்குவதிலே கொஞ்சம் பணப் பற்றாக்குறை ஏற்பட்டது. உடனடியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதற்குத் தேவையான பணம், 30 இலட்ச ரூபாய் அளவிற்கு ஒதுக்கீடு செய்து தந்து, இப்போது அந்த வால்வுகள் எல்லாம் வாங்கப்பட்டு, தொடர்ந்து அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 83, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**83—**

## மருத்துவர்களுக்குக் குடியிருப்பு

*16667—**திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் அரசு மருத்துவமனை வளாகத்தில் மருத்துவர்களுக்குக் குடியிருப்பு கட்டப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திண்டிவனம் அரசு மருத்துவமனையில் 70 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மருத்துவர் குடியிருப்பு தற்போது பழுதடைந்து காணப்படுவதால் இக்குடியிருப்பு வசிப்பதற்குத் தகுதியற்றது என்ற சான்றை பொதுப் பணித் துறையிடமிருந்து பெறும்படி விழுப்புரம் நலப்பணிகள் இணை இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். பொதுப் பணித் துறையினரால் "வசிக்கத் தகுதியில்லாத சான்று" வழங்கப்பட்டவுடன், புதிய குடியிருப்பு கட்ட உரிய கருத்துருவினை அனுப்பும்படி இணை இயக்குநர், விழுப்புரம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.



2000 மார்ச் 27]

முற்பகல் 9-40

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையில் குடியிருப்பு கேட்டோம். அதை விரைவில் கொடுப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். அதற்காக தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைக் குடியிருப்புகளில் மருத்துவர்கள் அவசியம் இருக்க வேண்டுமென்ற ஆணையை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கெங்கே அரசு மருத்துவமனையில் குடியிருப்புகள் இருக்கின்றனவோ அங்கேயே மருத்துவர்கள் தங்க வேண்டுமென்று ஏற்கெனவே அரசு ஆணை இருக்கிறது. திண்டிவனத்திலே இருக்கக்கூடிய இல்லம் பழுதுபட்டு இருக்கின்ற காரணத்தினால்தான் அங்கே டாக்டர்கள் தங்குவதிலே பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும், இந்த ஆண்டு புதிய இல்லம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 84, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**84—**

## மலையும் மலையைச் சார்ந்தப் பகுதி

*4570— **டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியத்தை மலையும் மலையைச் சார்ந்தப் பகுதி என அரசு அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பள்ளிப்பட்டு வட்டம், ஆர்.கே. பேட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் மலைக்குள் இல்லை. இக்கிராமங்களுக்குள் குன்றுகள்தான் உள்ளன. மொத்த நிலப் பரப்பில் 13 விழுக்காடு மட்டுமே மலைப் பகுதியாக உள்ளது. மேலும் மொத்த மக்கள் தொகையில் 8 விழுக்காடு மட்டுமே

[2000 மார்ச் 27

பழங்குடியினர் உள்ளனர். எனவே ஆர்.கே. பேட்டை ஒன்றியத்தை மலைப் பகுதியாக அறிவிக்க இயலாது.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலையும் மலையைச் சார்ந்த பகுதி என்று அறிவிப்பதற்கான கோட்பாடுகள் நீண்ட ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டவை. அவற்றைத் தளர்த்தி, இருக்கின்ற யதார்த்த நிலைமையைக் கணக்கிலகொண்டு மீண்டும் பரிசீலிக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆர்.கே. பேட்டை ஒன்றியத்தில் மொத்த மக்கள் தொகையான 1,10,381 பேரில், பழங்குடியினர் 731 பேர் மட்டுமே உள்ளனர். அதாவது 8 சதவீதம் மட்டுமே பழங்குடியினர் உள்ளனர். மொத்த நிலப்பரப்பில் 13 சதவீதம் மட்டுமே மலைப் பகுதியாக உள்ளது. பொதுவாக 75 சதவீதம் மலைப் பகுதியாக இருந்தால்தான் அதனை மலைப் பிரதேசம் என்று அறிவிக்க இயலும். 75 சதவீதம் மலைப் பகுதி என்பதை 50 ஆகக் குறைக்க அரசு ஆவன செய்யுமா என மன்ற உறுப்பினர்கள் சிலர் கேட்டார்கள். தமிழ்நாட்டில் நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மொத்தம் 30 வட்டங்கள் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு மத்திய திட்டக் குழு நிதி உதவி செய்து வருகிறது. 1999-2000 ஆண்டுக்கு ரூபாய் 1,160.45 இலட்சம் வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தினை ஆய்வு செய்த குழு இனி வேறு பகுதிகளை இத்திட்டத்தின்கீழ் சேர்ப்பதற்கு ஒத்துக்கொள்ளவில்லை என்று அறியப்படுகிறது. எனவே மலைப் பிரதேசமாக அறிவிப்பதற்கு 75 விழுக்காடு மலைப் பகுதி இருக்க வேண்டுமென்பதை 50 விழுக்காடாகக் குறைக்க இயலாது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 85, திரு. செங்கை சிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



2000 மார்ச் 27]

**85—**

## தொழில்நுட்பத் தகவல் மையம்

*26152—**திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் வேளாண் தொழில்நுட்பத் தக்வல் மையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக நிதி உதவியுடன் கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத் தலைமையிடத்தில் வேளாண்மைத் தொழில்நுட்பத் தகவல் மையத்தை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்பப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதற்கான தனிக் கட்டடம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்படும்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில்நுட்பத் தகவல் மையத்தினுடைய மதிப்பீடு எவ்வளவு? இதனுடைய நோக்கம் என்ன? வேறு எந்த மாவட்டத்திலாவது இம்மையம் தொடங்கப்பட உள்ளதா? அதனுடைய விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் தேசிய வேளாண்மைத் தொழில்நுட்பத் திட்டத்தின்கீழ் ரூபாய் 43.325 இலட்சத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் காலம் நான்கு ஆண்டுகள் ஆகும். முதலாம் ஆண்டு, 1998-99வது ஆண்டில் 16 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அத்தொகைக்கு 1999 ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதால், அத்தொகையை நடப்பாண்டில் மறுஒப்பளிப்பு செய்ய இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திற்கு பிரேரணைகள்

அனுப்பப்பட்டுள்ளன. இத்தொகை பெறப்பட்டவுடன் கட்டடப் பணிகள் தொடங்கப்படும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் என்ன என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் உழவர்களுக்கும் இடையேயுள்ள இணைப்பை மேலும் வலுப்படுத்துதல்; உழவர்களுக்கு பண்ணை ஆலோசனைப் பணிகளைத் தேவைக்கேற்ப வகுத்தல், வேளாண்மைக்கேற்ற முக்கிய இடுபொருள்களான விதைகள், நாற்றுகள் மற்றும் இதர இடுபொருள்களை உழவர்களுக்கு வழங்குதல், வேளாண் மக்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996-97 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள், டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்களுடைய தலைமையில் இஸ்ரேல் நாட்டுக்கு ஒரு குழுவை அனுப்பி, அந்தக் குழுவினுடைய பரிந்துரைகளை, தமிழகத்திலே நடைமுறைப்படுத்தி, பாசன மேம்பாட்டிற்கு பல்வேறு தொழில்நுட்பங்களையெல்லாம் புகுத்தி இங்கே செயல்படுத்துவதாக அறிவித்திருந்தார்கள். அந்தக் குழுவினுடைய பரிந்துரைகள் தமிழகத்திலே அமல்படுத்தப்பட்டனவா? அந்த விவரம் என்ன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய வினாவிற்கும் தொடர்பு இல்லையென்றாலும், இஸ்ரேல் நாட்டினுடைய தொழில்நுட்பத்தை நாம் பெற்று, அந்த அடிப்படையிலே இராமநாதபுரம், சிவகங்கை, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் அந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயிகளுக்கு உதவிடலாமா என்ற நோக்கத்தோடு ரூ. 2.36 கோடி செலவில் அந்தத் தொழில்நுட்ப ஆலோசனை பெறப்பட்டு, இப்போது துறையின் மூலம் அந்தந்த மாவட்டங்களிலே அவர்கள் அளித்த ஆலோசனைகளைப் பயன்படுத்துவதுபற்றி துறை பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.



**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மையத்தினுடைய நோக்கம் மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது. எனவே தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து விவசாயிகளும், உழவர்களும் பயன்பெறுகின்றவண்ணம், அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டத்தைத் தொடங்குகின்ற எண்ணம் அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே இந்தப் பயிற்சியைக் கொடுப்பதற்கான கட்டடங்கள் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் (I.C.A.R.) உதவியுடன் கட்டப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் இருக்கக்கூடிய விவசாயிகள் மற்றும் வேளாண்மை அலுவலர்களை எல்லாம் அழைத்து அவர்களுக்கு உரிய பயிற்சி தந்து அவர்கள் மூலம் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்வதுதான் இதனுடைய முக்கிய நோக்கம். அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 86, திரு. எஸ்.எஸ். பொன்முடி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**86—**

## கூட்டு விவசாயத் திட்டம்

**30662*—**திரு. எஸ்.எஸ். பொன்முடி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நவீன விவசாய முறையைச் செயல்படுத்த கூட்டு விவசாயத் திட்டத்தை அரசு தீவிரப்படுத்துமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் கூட்டு விவசாயத் திட்டத்தினை அரசு செயல்படுத்த எவ்வித சாத்தியக்கூறும் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் சிறு சிறு பகுதிகளாகச் சாகுபடி செய்வதால் மனிதப் பயன்பாடே இழப்பீடாகிறது. அது மட்டுமல்ல, கூட்டு முயற்சியை

மேற்கொண்டால் பெரிய அளவில் போதிய வசதிகளைச் செய்து கொள்ள முடியும். பழங்காலத்திலே பெரிய பெரிய பண்ணையை வைத்திருந்தவர்கள் அந்தப் பகுதியிலே அவர்களே வாய்க்காலை வெட்டிக்கொண்டதால் அந்தப் பகுதி சுத்தமான பகுதியாக இருந்துகொண்டிருந்தது. இன்று அவரவர் ஒரு ஏக்கர், அரை ஏக்கர் என்று வைத்துக்கொள்வதால், இதுபோன்று பரந்த தொலைநோக்குத் திட்டங்கள் இல்லையென்ற காரணத்தினால், கூட்டுறவு அடிப்படையிலே பல்வேறு விவசாயிகளை அந்தப் பகுதியிலே ஒருங்கிணைப்பதனால் ஒரே இடத்தில் பயிரிட முடியும். ஒரு நேரத்தில் நாம் தண்ணீர் கொடுத்தால் தண்ணீர் வேண்டாம் என்கிறான், இன்னொருவன் வேண்டும் என்கிறான். அந்தமாதிரி பிரச்சினையாகிவிடுகிறது. எனவே கூட்டு விவசாய முறை வந்தால், அந்த ஊரில் உள்ளவர்கள் ஒரே நேரத்தில் பயிரிடுவார்கள்; அறுவடை செய்வார்கள். எனவே இதுபோன்ற செயல்களினால் அரசுக்கும் இந்த நாட்டுக்கும் நன்மை ஏற்படும். ஆகவே இது குறித்து அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேளாண்மையைப் பொறுத்தவரை விவசாயிகள் நிலங்கள் 1999 ஆம் ஆண்டு கணக்கெடுப்புப்படி 52.3 விழுக்காடு பரப்பளவு நிலம் 89.1 சதவீதம் உள்ள சிறு, மிகச் சிறு விவசாயிகள் வசம் உள்ளது. மேலும், 40 சதவீத நிலம் 10.5 சதவீதம் உள்ள நடுத்தர விவசாயிகள் வசம் உள்ளது. மீதமுள்ள 7.7 சதவீத பரப்பு 0.4 சதவீதம் உள்ள விவசாயிகளான பெரிய நிலக்கிழார்களால் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளே தங்களுடைய நிலங்களைத் தாமாக அல்லது குத்தகைதாரர் மூலம் பராமரித்து வரக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. ஆகவே கூட்டு விவசாய முறை கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களை அறிவித்து இருக்கிறது. தற்போது விவசாயத் துறையிலே பட்டயப் படிப்பு படித்த பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே விவசாயப் படிப்பிலே பட்டயப் படிப்பு முடித்தவர்களையும் மற்றும் படித்த இளைஞர்களையும்



கொண்டு ஒன்றியம்தோறும் காய்கறி, பூ, கனி மற்றும் பணப் பயிர்கள் பயிரிடுகின்ற, மாதிரிக் கூட்டு விவசாயப் பண்ணைகளை அமைத்துத்தர அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓராண்டுக்கால பட்டயப் படிப்பு, எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு முன்பு தரப்பட்டது. அது கடந்த ஆட்சிக் காலத்திலேயே தேவையில்லை என்ற அளவுக்கு முடிவு செய்யப்பட்டு கைவிடப்பட்ட ஒன்று. படித்தவர்களுக்கெல்லாம் அரசாங்கம் வேலை கொடுப்பது என்பது இயலாது. அதேநேரத்திலே அவர்களைக்கொண்டு ஒரு பண்ணையை அரசின் சார்பிலே அமைத்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அத்தகைய நடவடிக்கை அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போன்று- அதாவது கூட்டு விவசாயத் திட்டம் என்று சொல்லவில்லை—1 ஏக்கர், 2 ஏக்கர், 3 ஏக்கர் என்று வைத்திருக்கின்ற சிறிய சிறிய விவசாயிகள் எல்லாம் தனித் தனியாக கிணறு வெட்டுவதற்கு ஆசைப்படுகின்றார்கள். அப்படி கிணறு வெட்டி விவசாயம் செய்வது என்றால், நிலத்தடி நீர் போதாமல் இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையை மனதிலே வைத்து 30 ஏக்கர் பரப்பளவில் உள்ள எல்லோரையும் ஒன்றாக இணைத்து ஒரு பெரிய கிணற்றை அரசாங்கமே வெட்டிக்கொடுத்து, அவர்கள் பாசனம் செய்து கொள்ளக்கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால், நிச்சயமாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அறிவார்களா? அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து கூட்டுறவு முறையில் சங்கங்கள் அமைத்து, அதிலே அந்த சிறு விவசாயிகள் எல்லாம் உறுப்பினர்களாகி, பொதுவான ஒரு கிணற்றைத் தோண்டி, அதன்மூலம் தங்களுடைய நிலங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று முன்வருவார்களேயானால், அரசாங்கம் அதற்கு வேண்டிய உதவிகளைச்

செய்ய முன்வரும். அரசாங்கமே அப்படிப்பட்ட முயற்சியிலே ஈடுபடவில்லை என்பதுதான் நான் சொன்ன பதில்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 87, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**87—**

### கல் குவாரி ஏலம்

*25193—**திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் வனத் துறைக்குச் சொந்தமான கல் குவாரிகளை ஏலம் விடாததால் சமூக விரோதிகள் அவற்றைப் பயன்படுத்துவதை அரசு அறியுமா?

(ஆ) அவற்றை ஏலத்திற்குக் கொண்டுவர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தாம்பரம் தொகுதியிலுள்ள கல்குவாரிகள், துறையின் பாதுகாப்பில் உள்ளதால் சமூக விரோதிகளால் கல் குவாரிகளை பயன்படுத்த வாய்ப்பில்லை.

(ஆ) கல் குவாரிகள் 500 மீட்டர் இடைவெளிக்குட்பட்டு உள்ளதால் அவற்றை மீளவும் குத்தகைக்கு விட மைய அரசின் இசைவாணை பெறத் தகுதியுடையதாய் இல்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதியில் பெரும்பாக்கம், நன்மங்கலம் பகுதியிலே அமைந்திருக்கிற வனத் துறைக்குச் சொந்தமான கல் குவாரிகளில் ஏற்கெனவே அரிசன Labour-Society-யினர் கல் உடைத்துக் கொண்டிருந்தார்கள். தற்போது அவர்கள் மத்திய அரசிடத்தில் அனுமதி பெற்று, நம்முடைய மாநில அரசு சட்டத்திற்குட்பட்டு, செங்கல்பட்டு வனச் சரகத்திற்கு உட்பட்ட 96 குவாரிகளுக்கு ஈடாக 150 ஹெக்டேர் நிலப் பரப்பினை மதன்மகாலிங்கபுரம், கொடிவலசா, பள்ளிப்பட்டு தாலுகாவைச் சேர்ந்த இடங்களில் வழங்கி, நன்மங்கலம், பெரும்பாக்கம் குவாரிகளில் மரம் வளர்ப்பதற்கு, அந்தப் பரப்பளவிற்கு ஏற்றாற்போல



செலுத்த வேண்டிய 62,700 ரூபாயினை, அந்த அரிசன Labour-Society செலுத்தி இருக்கிறது. அதை நம்பி வேலையில்லாப் பட்டதாரிகள் 37 இலட்ச ரூபாய் செலவிலே அங்கே Crusher அமைத்து இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிற அந்த இரண்டு மலைகளிலாவது அந்த அரிசன Labour-Society-யினர் கல் உடைக்க அனுமதி தருவார்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி சமூக விரோதிகளால் கல்குவாரிகள் பயன்படுத்தப்படுவது குறித்தது. துறையின் பாதுகாப்பில் இவை இருக்கிற காரணத்தால் சமூக விரோதிகளால் இவற்றிற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று சொன்னேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிப்பட்ட இரண்டு செய்திகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து என்னிடத்தில் எழுதிக் கொடுத்தால் நான் துறையிடம் கேட்டு பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், களக்காடு மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் வைரம், வைடூரியம் கிடைப்பதாகக் கருதி, கேரளாவிலிருந்து சமூக விரோதிகள் வந்து, ஆழமாக 5,6 அடி விட்டத்தில் வட்டம் வட்டமாகக் குழிகளை கள்ளத்தனமாகப் போடுகிறார்கள். ஏராளமான இடங்களில் இப்படிப் போட்டிருக்கிறார்கள். களக்காடு, ஏர்வாடி போன்ற பகுதிகளில்கூட இப்போது நில நடுக்கம் ஏற்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கக்கூடும் என்று நிலத்தியல் நிபுணர்கள் குறிப்பிடுகின்றார்கள். எனவே கள்ளத்தனமாக, கேரளாவிலிருந்து வந்து, மணலை அள்ளிச் செல்கின்ற அல்லது இப்படித் துளைபோட்டு, மலைக்குச் சேதாரம் ஏற்படுத்துகின்ற சமூக விரோதிகளைத் தடுத்து நிறுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி ஒரு காலத்திலே இந்த நிலைமை ஏற்பட்டதுண்டு. ஆனால் இந்த அரசு அவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தி உள்ளது. இன்றைக்கு அந்த நிலைமை இல்லை என்பதை உறுப்பினர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் ஏதாவது அங்கொன்றும் இங்கொன்றுமாக ஊடுருவல்

[2000 மார்ச் 27

இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டினால், அது குறித்து காவல் துறையிடத்திலே கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 88, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**88—**

**போக்குவரத்துப் பணிமனை**

*22519—**திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கனியூர் பகுதியில் அரசு போக்குவரத்துப் பணிமனை கட்டுவதற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணிமனை கட்டும் பணிகள் தொடங்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) போக்குவரத்துக் கழகத்தில் நிதி ஆதாரம் இல்லாததால் பணிமனை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி பேரூராட்சி மிகப் பெரிய நகரமாக வளர்ந்து வருகிறது. சார் ஆட்சியாளர் அலுவலகம், மாவட்டப் பதிவாளர் அலுவலகம், சேரன்மகாதேவி கல்வி மாவட்ட அலுவலகம், ஒன்றிய அலுவலகம், கூட்டுறவுப் பதிவாளர் அலுவலகம், நீதிமன்றம், பேருந்து நிலையம் போன்ற சகல வசதிகளையும் கொண்ட பெரிய நகரமாக வளர்ந்து வருகிறது. மேலும் இந்த ஊரிலிருந்து பாபநாசம் டெப்போ கிட்டத்தட்ட 30 கிலோமீட்டரில் இருக்கிறது. திருநெல்வேலி டெப்போ 30 கிலோமீட்டரில் இருக்கிறது. வள்ளியூர் டெப்போ 45 கிலோமீட்டரில் இருக்கிறது. மேலும் இந்தப் பகுதியிலே ஓடுகின்ற நகரப் பேருந்துகளெல்லாம் திடீர் திடீரென்று சாலையிலே ஆங்காங்கே break-down-ஆகி நிற்கின்றன. இந்தப் பகுதியிலே ஏற்கெனவே ஆர்ஜிதம் செய்யப்பட்ட, பணிமனைக்காக ஒதுக்கப்பட்ட நிலம் வெகு நாட்களாகப் பயன்படுத்தப்படாமல் இருக்கிற காரணத்தினால், உடனடியாக அந்த இடத்திலே பணிமனையை ஏற்படுத்தினால், அங்குள்ள பேருந்துகளை மேலும் நல்ல முறையிலே இயக்குவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து அங்கே பணிமனையைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா எனத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கனியூர் கிராமத்திற்கு அருகிலுள்ள பாபநாசம் பணிமனை 25.5 கிலோமீட்டர் தூரத்திலே இருக்கிறது. 22.7 கிலோமீட்டர் தூரத்திலே திருநெல்வேலியிலே 2 பணிமனைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்தப் போக்குவரத்துக் கழகத்திலே மொத்தம் இருக்கின்ற பேருந்துகள் 834. அங்கே 16 பணிமனைகள் இருக்கின்றன. ஒரு பணிமனைக்கு, கிட்டத்தட்ட 50 பேருந்துகள் என்ற அடிப்படையிலேதான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களை ஏற்று, போக்குவரத்துக் கழகத்தினுடைய நிதிநிலைமைக்கேற்ப, வருங்காலத்திலே இதற்கான முடிவுகளை எடுக்கலாம். 1990-லேயே 2 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு, அப்படியே இருக்கிறது. பல போக்குவரத்துக் கழகங்களில் இதுபோன்று நிலங்களை அவ்வப்போது வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நிதிநிலைமைக்கேற்ப அவ்வப்போது இதுபோன்ற பணிமனைகளை அமைப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டுக்கொண்டிருக்கிற பணிமனைகளான திசையன்விளை, திருநெல்வேலியிலே இயங்கி வருகின்ற கே.டி.சி. டெப்போ போன்ற பணிமனைகள் எல்லாம் எந்தவிதமான அபிவிருத்தியும் செய்யப்படாமல், ஓலைக் கூரையிலே, தரையிலே, கான்கிரீட் தளம்கூட அமைக்கப்படாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே திசையன்விளை, திருநெல்வேலியில் இருக்கின்ற கே.டி.சி. டெப்போ—தூத்துக்குடி சாலையில் இருக்கின்ற கே.டி.சி டெப்போ—போன்ற பணிமனைகளை அபிவிருத்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உதவி செய்து அந்தப் பணிமனைகளின் அபிவிருத்திக்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[2000 மார்ச் 27

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி புறநகர் மற்றும் நகரப் பணிமனைகளிலே உள்ள அதிகப்படியான பேருந்துகளைப் பராமரிபபதற்காக வி.என். சத்திரத்தில் 1991 ஆம் ஆண்டிலேயே 14.8 ஏக்கர் நிலம் வாங்கபபட்டிருக்கிறது. அதை அபிவிருத்தி செய்து, அங்கேயுள்ள பணிமனைகளில் அதிகமாக இருக்கிற பேருந்துகளை இங்கே பழுதுபார்ப்பதற்கான ஏற்பாடுகளை அந்தக் கழகம் செய்து வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 89, திரு. பால. ஆனந்தன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

*முற்பகல் 10-00*

**89—**

### பேருந்து முன்பதிவு

*30381—**திரு. பால. ஆனந்தன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசியிலிருந்து பெங்களூருக்கு இயக்கப்படும் தடம் எண் 444 பேருந்துக்கு வேலூரில் முன்பதிவு செய்யப்படுகிறது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வந்தவாசியிலிருந்து பெங்களூருக்கு இயக்கப்படும் தடம் எண் 444 பேருந்துகளுக்கு, வந்தவாசியில் முன்பதிவு செய்யப்படும் இருக்கைகள் போக மீதமுள்ள இருக்கைகளுக்கு வேலூரிலிருந்து முன்பதிவு செய்யப்படுகிறது. பேருந்துத் தடம் எண் 444ஐ-இல் 24 இருக்கைகளும், தடம் எண் 444இ-இல் 39 இருக்கைகளும் பதிவு செய்யப்படுகின்றன. இவ்விருக்கைகள் முழுவதையும் முன்கூட்டியே பயணிகள் பதிவு செய்துவிடுகிறார்கள். மேலும் பயணிகளின் அடர்வு தடம் எண் 444ஐ-இல் 119.7 சதவீதமும், தடம் எண் 444இ-இல் 110 சதவீதமும் காணப்படுகிறது. மேலும் வந்தவாசியிலும், வேலூரிலும் முன்பதிவு செய்யும்



2000 மார்ச் 27]

முறை பயனுள்ளது என்பது மட்டுமல்லாமல், வேலூரில் முன்பதிவு செய்வது அவசியமும் தவிர்க்க முடியாததும் ஆகும்.

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதியானது மிகவும் பின்தங்கிய பகுதி. இங்கே ஆற்றுப் பாசனமோ, கால்வாய்ப் பாசனமோ கிடையாது. அஃதன்னியில், அரசாங்கத்தாலோ அல்லது தனியார் துறையாலோ நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகளும் கிடையாது. இந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் மிகவும் ஏழ்மையில் இருப்பதால், அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை உயர்த்திக்கொள்வதற்காக அண்டை மாநிலமான கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பெங்களூருக்குச் சென்று கடினத் தொழிலில் ஈடுபட்டு, அதில் கிடைக்கின்ற வருவாயிலே வாழ்க்கை நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட நபர்கள் வந்தவாசியிலே தங்கள் பயணத்தைத் தொடங்குகின்றபொழுது, 15 நபர்களுக்கு மட்டும்தான் இடவசதி அளிக்கப்படுகிறது. 30 பேர் இருந்தால்கூட, 15 பேர் போக மீதி 15 பேரை வேலூரில் கீழே உட்கார்ந்துகொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். எனவே இவர்களுடைய நிலைமையைக் கருத்தில்கொண்டு—வேலூரில் புறப்படுகின்ற அவர்களுக்கு நீங்கள் முதலிடம் கொடுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை—வந்தவாசியிலிருந்து பயணம் மேற்கொள்கின்ற எங்களுடைய பகுதி மக்களுக்குத் தொடர்ந்து பயணம் செய்வதற்கு அங்கீகாரம் அளிக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில்தான் பல்வேறு சிக்கல்கள். முதலில் வேலூரிலிருந்து பெங்களூருக்கு இயங்கிக்கொண்டிருந்த பேருந்துகள்தான் அவை. மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் நீட்டித்துக் கொடுத்தால் போதும் என்று கேட்டதற்கு ஏற்ப, வேலூரிலிருந்து ஓடிக்கொண்டிருந்த பேருந்தை வந்தவாசிக்கு நீட்டித்துக் கொடுத்தோம். இப்பொழுது நீட்டித்துக் கொடுத்தவுடனே எல்லா இருக்கைகளுக்கான முன்பதிவையும் அங்கேயே பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். இது இயலாத காரியம். ஏனென்று சொன்னால், வந்தவாசியிலிருந்து சராசரியாக ஒரு நாளைக்கு 13 இருக்கைகளுக்குத்தான் முன்பதிவு செய்யப்படுகின்றன ஒரு பேருந்திலே. மற்றொரு பேருந்திலே 8 இருக்கைகளுக்குத்தான் சராசரியாக பதிவு செய்யப்படுகின்றன. ஆகவே வேலூரில் பதிவு செய்யவேண்டியது அவசியம் ஆகிறது. அப்பொழுதுதான் பேருந்துகள் இலாபமாக இயங்குவதற்கு, ஓரளவுக்கு நட்டத்தையாவது ஈடுகட்டுகின்ற அளவிற்கு இயங்குவதற்கு வாய்ப்பாக அமையும்.

[2000 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 90, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**90—**

**வருவாய் ஈட்டாத நிலங்கள்**

*8766—**திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்களைத் தனியார் ஆக்கிரமித்து துறைக்கு வருவாய் ஈட்டாத நிலங்கள் எவ்வளவு?

(ஆ) அவற்றை மீட்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) வேலூர் மாவட்டத்தில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் பட்டியலில் சேர்ந்த திருக்கோயில்களின் பட்டா நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் பல இடங்களிலே அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்களை பலபேர் ஆக்கிரமித்து இருக்கிறார்கள். உதாரணத்திற்கு எங்களுடைய மாவட்டத்தில் மூஞ்சூர்பட்டு என்ற ஓர் இடத்திலேயே பல ஏக்கர்களை சிலபேர் ஆக்கிரமித்து இருக்கிறார்கள். ஆனால் அங்கு இருக்கக்கூடிய ஒரு மேல்நிலைப் பள்ளிக்கு பள்ளிக் கட்டடம் கட்டுவதற்காக ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பணத்தைக் கொடுத்து கட்டடத்தையும் கட்டிவிட்டார்கள். அதற்கு மட்டும் ஓடோடிப் போய் நீதிமன்றத்திலே stay வாங்கி இருக்கக்கூடிய அறநிலையத்



2000 மார்ச் 27]

துறையானது அங்கே பல ஏக்கர்கள் பறிபோனபோது தூங்கிவிட்டது. இப்படி நம்முடைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வராமலேயே பல ஏக்கர்கள் அங்கே இப்போது பலபேரால் ஆக்கிரமிக்கப்பட்டு இருப்பதைக் கண்டுபிடித்து மீண்டும் அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, அதை மீட்பதற்கு ஆவன செய்வார்களா? பள்ளிகூடங்கள் போன்ற நல்ல காரியங்களுக்குக் கொடுத்து, பள்ளிகளைக் கட்டுவதற்கு அனுமதி அளிக்கவும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு உறுப்பினருடைய வினாவில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று, தமிழக அரசினுடைய, அறநிலையத் துறையின் சார்பில் இருக்கின்ற எல்லா இடங்களிலும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு, அது முறைப்படி கேட்கப்படுமானால் உடனடியாக அதனை வழங்குவதற்கு நாங்கள் ஆணை பிறப்பித்து விடுகிறோம். எடுத்துக்காட்டாக, உங்கள் பக்கத்திலேயே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். அவர்களுடைய ஊரிலேயே ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஓர் இடம் வழங்கப்பட்டிருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் பொதுமக்கள் அதை ஒரு கழிப்பிடமாகப் பயன்படுத்திக்கொண்டு இருந்தார்கள். அது இப்பொழுது ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 93 இலட்சம் ரூபாய்க்கு வழங்கப்பட்டு இருக்கிறது. எனவே இதுபோன்ற முறையான அறிவிப்புகளை கண்டிப்பாக இந்தத் துறை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது. அதேநேரத்தில் நீங்கள் குறிப்பிட்டதைப் போல, அரசினுடைய இசைவு பெறாமல், ஆலயத்தினுடைய ஒப்புதலைப் பெறாமல், ஆக்கிரமித்து கட்டடம் கட்டினால் அது பள்ளியாக இருந்தாலும், வேறு எதுவாக இருந்தாலும் நடவடிக்கை எடுப்பதற்குச் சட்டத்தில் இடம் இருக்கிறது. சட்டத்திலே இடம் இருக்கிறது என்பது மட்டுமல்ல, கண்டிப்பாக எடுத்தாக வேண்டும். அவர்கள் முறையான ஒப்புதலைப் பெற்று, கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறபொழுது முறையான ஒப்புதலைப் பெற்ற பிறகுதான் அதைச் செய்ய முடியும். அதேநேரத்தில் அரசுக்குப் பட்டா நிலங்கள் என்று தனியாக இருக்கின்றன. பிறகு ஆலயத்தினுடைய அனுபவத்தில் இருக்கின்ற புறம்போக்கு நிலங்கள் பல இருக்கின்றன. நீங்கள் சொல்கின்ற அந்த ஆக்கிரமிப்பு என்பது ஆலயத்தினுடைய புறம்போக்கு நிலத்தில் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் நீங்கள் சொல்கிற அந்த மூஞ்சூர்பட்டு என்ற இடத்தில் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 9 ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமித்து இருக்கிறார்கள். அதுபோல 10 கோயில்கள் இருக்கின்றன.

குறிப்பாகச் சொன்னால், அரும்பாக்கத்தில், மேல்விசாரத்தில், நெமிலியில், பெத்தூரில், அரிகிலபாடியில், குடியாத்தத்தில், இராணிப்பேட்டையில், இருலாம்பட்டத்தில், கத்தாரியில், இத்தனை இடங்களிலும் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. இந்த அனைத்து இடங்களிலும் 79 (2) என்ற பிரிவின்படி ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு அறிவிப்பு தரப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது வேலூரைப் பற்றிய கேள்வி என்றாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நேரடியாகத் தெரிந்த காரணத்தினாலேயும், இன்று தினமணி பத்திரிகையில் வந்திருக்கின்ற செய்தியின் காரணத்தினாலேயும் கேட்கிறேன். விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்திலே, பெருமுக்கல் மலையில் கல் உடைக்கப்பட்டு மிகப் பெரிய அளவிலே சேதாரம் ஏற்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்மீது நான் இதுகுறித்துப் பேசினேன். அமைச்சர் அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் அளித்தார்கள். ஆனால் அந்தக் கல் உடைக்கின்ற பணி இதுவரையிலும் தடுத்து நிறுத்தப்படவில்லை. அங்குள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர், சென்னை உயர்நீதி மன்றத்திலே தடையாணை பெற்று, அதிலே கல் உடைக்கக் கூடாது என்ற தடையும் உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருக்கிறது. மாவட்ட நிர்வாகத்தால் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தியும் இதுவரையிலும் அது தடுக்கப்படாமல் தொடர்கிறது. மத்திய தொல்பொருள் இலாகாவிற்குச் சொந்தமாக பாதுகாக்கப்பட்டு வருகின்ற அந்த இடத்திலே கல் உடைக்கிற பணியைத் தடுத்து நிறுத்தாததற்கு உரிய காரணம் என்ன? அதை அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா? அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது ஏற்கெனவே எங்களுடைய கவனத்திற்கு வந்தது. நானே மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நேரடியாக மடல் எழுதியுள்ளேன். இதில் தகுந்த கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு வேண்டியுள்ளேன். இவ்வாறு எழுதி 2,3 மாதங்கள் ஆகிவிட்டன. மீண்டும் அதை நினைவூட்டி நடவடிக்கை எடுக்கச்



சொல்வோம். இதில் அரசு கவனமாக இருக்கிறது. இது ஏற்கெனவே எங்கள் கவனத்திற்கு வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு அறநிலையத் துறையினுடைய இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக்கூடிய முயற்சி சிறப்பாக எடுக்கப்பட்டு ஆலயங்களுடைய நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டிருக்கக்கூடிய செய்தியை நாம் பார்த்தோம். ஆனால் அதே சமயத்தில் ஆலயத்திற்குச் சொந்தமான இடங்களாக இருந்தாலும் சரி, அல்லது ஆலயத்திற்குச் சொந்தமான புறம்போக்கு இடங்களாக இருந்தாலும் சரி, அவற்றிலுள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதுடன், பொதுக் காரியங்களுக்குக் கொடுப்பதாக இருந்தாலும்கூட, தக்க நிதியுதவி பெற்றுதான் கொடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால் நம்முடைய தலைமுறைக்கு முன்னால் சிறப்பாகக் கட்டியிருக்கக்கூடிய பல ஆலயங்களை நம்மால் பராமரிக்கக்கூட முடியவில்லை. காரணம் அந்த ஆலயங்களுக்குப் போதுமான வருமானம் இல்லை என்பது உண்மைதான். ஆனால் எந்த ஆலயங்களுக்கு அதிகமான சொத்துக்கள் இருக்கின்றனவோ, அந்தச் சொத்துக்களை ஏதாவது காரணம் சொல்லி பல துறைகள் வாங்கிச் சென்றுவிட்டால், ஆலயத்தைப் பராமரிக்கக்கூடிய வாய்ப்பு மீண்டும் குறைந்து போய்விடும். எனவே தகுந்த நிதியைப் பெற்றுக்கொண்டுதான் கொடுக்க வேண்டும். எனவே ஆலயங்களைப் பராமரிக்க தக்க நடவடிக்கையை எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு ஓர் அறிவிப்பு. இது அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டிய செய்தி. அரசின் சார்பில் எந்தத் துறை கேட்டாலும் உரிய தொகை பெறாமல் ஆலயம் தன் இடத்தை வழங்காது. இதுவரையிலும் வழங்கியது இல்லை. எனவே முறையான தொகையைப் பெற்று, இன்னும் சொல்லப்போனால், மாவட்ட வருவாய் அலுவலர் ஒரு மதிப்பைத் தருகிறார், அங்கேயுள்ள சார் பதிவாளர் ஒரு மதிப்பைத் தருகிறார் என்றால் அதில் எது அதிகமோ அதைப் பெற்றுத்தான், வரவு வைத்த பிறகுதான் ஆலயம் அந்த இடத்தைத் தருமே தவிர, கண்டிப்பாக கோயில்கள் நலிவடைவதற்கு இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

[2000 மார்ச் 27

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சாஸ்திரக் கடலிலே குதித்து, நீந்தி முத்தெடுத்து கரையேறிய மேதை விவேகானந்தர் 'உயிர்தான் கடவுள், உயிரோடு உலவுகிற மனிதருக்குத் தொண்டாற்றுவதே கடவுள் பணி' என்று குறிப்பிட்டு இருக்கிறார். அனேகமாக அவருக்கு மேல் தேர்ந்த சன்யாசிகள் யாரும் இல்லை என்று நான் கருதுகிறேன். எனவே விவேகானந்தரின் வரையறைப்படி பார்த்தால் "உயிரோடு உலவுகிற மனிதன்தான் கடவுள், உயிர் உறைகிற இடமான உடல் தேவாலயம்" என்றுதான் அவர் குறிப்பிடுகிறார். எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது, விவேகானந்தரே குறிப்பிட்டிருக்கிற உயிரோடு உலவுகிற மனிதனுக்குக் குடியிருக்க வீடில்லை என்பதால் குடியிருக்க வீடற்ற மனிதனுக்கு, அவனையும் ஓர் இறைவனாகக் கருதி, அவனுக்கு அறநிலையத் துறை தன்னுடைய இடத்தினை — இறைவனுக்குரிய இடம் என்பதால் இறைவனுக்குரிய இடத்தினை—அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறந்த தத்துவத்தைச் சொல்லி மனிதனே உயிர் என்றார். இன்னும் சொல்லப்போனால் நான்கூட ஒரு தத்துவம் சொல்லுவேன். ஐம்புலன்கள், பிறகு ஐம்பொறிகள் இவையெல்லாம் கிட்டத்தட்ட இறைவனுக்கு என்னென்ன பண்புகள் உண்டோ அவற்றை அடிப்படையாகக் கொண்டதுதான். இன்னும் சொல்லப்போனால், தொல்காப்பியத்திலே சொல்வதைப்போல "உலகம் என்பது ஐம்பூதங்களை உள்ளடக்கியது. நீங்களும் ஐம்பூதங்களை உள்ளடக்கிய மனிதர்தான். எனவே நீங்களே உலகம், உலகமே மனிதன், இது இயற்கையான அடிப்படை. அந்த அடிப்படையில் பார்த்தால், நாம் அனைவருமே தத்துவங்களுக்கு உட்பட்டவர்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் தத்துவங்களை மட்டுமே ஓர் அரசினுடைய சட்டதிட்டங்களாக வைத்துகொண்டு நடைமுறையில் செயல்படுத்த முடியாது. ஆலயங்களுக்கு நிலம் என்பது, இது தனிப்பட்ட ஒருவர் ஆலயத்தின்மீது நம்பிக்கை வைத்து, அந்த இறைவனுக்குப் பணிவிடைகள் செய்யப்பட வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில் அவர் வழங்குகிறார். எடுத்துக்காட்டுச் சொல்ல வேண்டுமானால், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வர் கோயிலுக்குச் சொந்தமான கிட்டத்தட்ட 353 மனை நிலங்கள் அடையாறு பகுதியிலே மலர் மருத்துவமனைக்கு அருகிலே இருக்கின்றன. இது அம்மாயி அம்மாள் என்பவர் 1909-லே கொடுத்த நிலம். எனவே அவருடைய நோக்கம் இது இறைபணிக்குப் பயன்பட வேண்டும் என்பதே



2000 மார்ச் 27]

தவிர, உங்களுக்கெல்லாம் பட்டா போட்டுக் கொடுக்க வேண்டும் என்பதற்காக அல்ல. *(சிரிப்பு)*

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள், இறைவனுக்கு ஓர் இடம் என்று குறிப்பிட்டுவிட்டு, அந்த இடத்தை ஏன் மனிதனுக்குத் தரக்கூடாது என்று சொன்னார்கள். அதற்கு உதாரணமாக விவேகானந்தரைக் குறிப்பிட்டார்கள். விவேகானந்தருக்கே நம்முடைய கடற்கரையில் ஒரு நினைவில்லம் இருக்கிறது. அதைப் பிரித்து எல்லோருக்கும் கொடுத்துவிட முடியுமா என்று சுப்பராயன் அவர்களைக் கேட்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட விரும்புவது, நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்கிறோம் விவேகானந்தரை. அந்த விவேகானந்தர் அத்வைத சித்தாந்தப்படி, மனிதன் கடவுள் என்பதால்—நம்முடைய அமைச்சர் அறநிலையத் துறைக்கு இருக்கிறார். அறநிலையத் துறை கடவுளுக்கு உரியது—நாமும் கடவுள்தான். எனவே ஏழைப்பட்டவனுக்கு, கடவுள் என்ற முறையில், கடவுள் நிலத்தைக் கடவுளுக்குக் கொடுக்கலாமா, இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொல்கிறேன். அவர் இந்தக் கருத்துக்கு யாரை மேற்கோள் காட்டினாரோ, அந்தப் பெரியவருடைய பெயரால்—அதற்காகத்தான் கேட்கிறேன்—அந்தப் பெரியவர் விவேகானந்தருடைய பெயரால் சென்னை கடற்கரையில் ஒரு பெரிய இடம்—அதை அரசாங்கமே அவர்களுக்குக் கொடுத்திருக்கிறது, சொற்ப வாடகைக்கு. இன்னும் அதிக வாடகை கேட்டுக்கொண்டிருக்கிறோம்; அது வேறு விவகாரம் இருந்தாலும், விவேகானந்தருடைய இல்லம் என்று ஒன்று இருக்கும்போது, அதை நடத்திக்கொண்டிருப்பவர்கள் நம்முடைய சுப்பராயன் அவர்களுடைய பேச்சைக் கேட்டு, அங்கே இருக்கின்ற சேரி வாழ் மக்களுக்கெல்லாம் அந்த இடத்தைக் கொடுத்துவிட முடியுமா; கொடுக்கலாமா என்பதை சுப்பராயன் அவர்கள்தான் சொல்ல வேண்டும். *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண் 91, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

[2000 மார்ச் 27

**91—**

### நவீன அரிசி ஆலை

*26920—**திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதியில் நவீன அரிசி ஆலை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஆலை எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் தொகுதியில் நவீன அரிசி ஆலை தொடங்கப்படும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு கொள்முதல் செய்யும் நெல் பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்ற தனியார் அரிசி ஆலைகளுக்கு அனுப்பப்பட்டு, அங்கே அரிசியாக மாற்றம் செய்யப்பட்டு, அதை அவர்கள் அரசுக்கு மீண்டும் ஒப்படைக்கிறார்கள். அதிலே சில குறைபாடுகள் இருப்பதாக நமக்குத் தகவல் வருகிறது. அதைக் கருத்தில்கொண்டு, அரசு கொள்முதல் செய்யக்கூடிய நெல்லை, அரசாங்க அரிசி ஆலைகளிலேயே அரவை செய்து மக்களுக்கு விநியோகம் செய்வதன் மூலமாக, சில குறைபாடுகள் நீங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற அடிப்படையில், மறுபரிசீலனை செய்து, மாவட்டந்தோறும் இதுபோன்ற அரிசி ஆலைகளை அரசே தொடங்குவது சாலச்சிறந்தது என்ற அடிப்படையில், அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நுகர்வோர் வாணிபக் கழகத்தின்கீழ் தமிழ்நாட்டில் 23 இடங்களிலே நவீன அரிசி ஆலைகள் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. கடந்த ஆட்சிக் காலத்தில் அந்த 23 அரிசி ஆலைகளில், 60 சதவிகிதத்திற்கு மேற்பட்ட இயங்காத ஆலைகளையெல்லாம் இந்த ஆட்சி வந்தபிறகு செப்பனிட்டு, இப்போது 100 சதவிகிதம் அரைக்கின்ற



2000 மார்ச் 27]

அளவிற்கு அந்த ஆலைகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. புதிதாகத் தொடங்க வேண்டுமென்று, நம்முடைய முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு பட்ஜெட்டிலே கூட அறிவித்திருக்கிறார்கள். நாளொன்றுக்கு கிட்டத்தட்ட 400 டன் அரைக்கின்ற அரிசி ஆலையை இரண்டு இடங்களிலே அமைக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு, ஒன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் புனக்குளம் என்ற இடத்திலும், ஒன்று பெரம்பலூர் மாவட்டத்தில் அமைக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. அது பரிசீலனையில் இருந்தபோது, இந்த ஆண்டு தேவையில்லை; அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்ளலாம் என்று இந்த அரசு முடிவெடுத்து இருக்கிறது. ஏனென்றால், நெல் அங்குதான் அதிகமாக உற்பத்தியாகிறது. உடனடியாக அங்கே அரைக்க வேண்டும், எடுத்துச் செல்கின்ற செலவும் குறையும் என்ற காரணத்தால், அங்கு அமைக்கலாம் என்ற அந்தக் கருத்துரு அரசிடத்திலே இருக்கிறது. மற்ற இடங்களில் ஆரம்பிப்பதற்கான தேவை இப்போது இல்லை. தேவைப்படுமானால், அதைப்பற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 92, திரு. லா. சந்தானம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**92—**

### வாழ்வியல் கல்வி

*26742—**திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் நலத் துறையின்கீழ் இயங்கும் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி மையத்தில் நடத்தப்படும் வாழ்வியல் கல்வி தனியார் நிறுவனங்களில் மட்டும் நடத்தப்படுவதைத் தவிர்த்து அரசு சார்பு நிறுவனங்களிலும் நடத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம். அரசு, அனைத்து அரசு சார்பு நிறுவனங்களும், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தினை அணுகினால், இக்கல்வி மையம் அரசு, அனைத்து அரசு சார்பு நிறுவனங்களுக்கும் "வாழ்வியல் பயிற்சி முகாம்"களை நடத்திடத் தயாராக உள்ளது.

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். நலிவடைந்த கூட்டுறவு நூற்பாலைகளைப் புனரமைப்பதற்காக தமிழக அரசு அறிவித்துள்ள கூட்டுறவு நூற்பாலை புனரமைப்புத் திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் தன் விருப்ப ஓய்வில் சென்ற 89 தொழிலாளர்களுக்கு ரூ.56,77,235 பணிக்கொடை வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இதுதவிர, தன் விருப்ப ஓய்வில் செல்லும் தொழிலாளி ஒவ்வொருவருக்கும் ரூ.20,000 வீதம் 100 பேர்களுக்கு வழங்க மாநில புதுப்பித்தல் நிதியிலிருந்து இந்நூற்பாலைக்கு கடனாக அரசு ரூ. 20 இலட்சம் வழங்கியுள்ளது.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மணல்மேடு கூட்டுறவு நூற்பாலை 1965-லேயிருந்து இயங்கி வருகின்ற ஓர் ஆலை. ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலேயே இருக்கிற கூட்டுறவு நூற்பாலை அது ஒன்றுதான். அது தொடர்ந்து பல்வேறு சிக்கலிலே இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அதிலே ஓய்வு பெற்றவர்கள் போக, தன் விருப்ப ஓய்வுக்காக விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை இப்போது 160. எனவே அவர்கள் அனைவருக்கும் அந்த ஓய்வூதியத் தொகை வழங்கப்படுமா? அதோடு அந்த ஆலையைப் பொறுத்த அளவில் விரிவாக்கம் செய்யக்கூடிய நிலையிலே இல்லாத ஓர் ஆலை என்று சொல்லப்படுகிறது. அந்த ஆலையிலே இருக்கிற இயந்திரங்கள் எல்லாம் நவீனப்படுத்தப்படக்கூடிய நிலையிலே இருக்கின்றன. அந்த ஆலை தொடர்ந்து நல்ல முறையிலே செயல்படவேண்டுமானால் மத்திய அரசு ஏற்படுத்தியுள்ள Texitile Modernisation Fund-லிருந்து நிதியைப் பெற்று, இயந்திரங்களை எல்லாம் நவீனப்படுத்தி, இந்த ஆலை முழுமையான நிலையில் செயல்பட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய Technical Upgradation Fund-லிருந்து, இந்த ஆலைக்கு நிதியுதவி பெற்று நாம் புதுப்பிக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. இருந்தாலும், தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் கூட்டுறவு நூற்பாலைக்கு சட்ட பூர்வமான





நிலுவைத் தொகையைச் செலுத்துவதற்கு அரசினால் வழங்கப்பட்ட ரூ.56.77 இலட்சத்தைக் கொண்டு 82 தொழிலாளர்கள் மற்றும் 7 பணியாளர்கள், ஆக மொத்தம் 89 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, அனைத்துப் பணப் பயன்களும் வழங்கப்பட்டு. தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேலும் மாநில புதுப்பிக்கும் நிதியிலிருந்து பெறப்பட்ட ரூ.20 இலட்சத்தில், 16 தொழிலாளர்களுக்கு, கருணைத் தொகை வழங்கப்பட்டு, தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் விடுவிக்கப்பட்டுள்ளனர். மேற்படி கூட்டுறவு நூற்பாலையில் அதிகப்படியாக உள்ள 233 தொழிலாளர்களையும் விடுவிப்பதற்கு அரசிடம் ரூ.240 இலட்சம் கோரப்பட்டுள்ளது. அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் அந்தப் பணி முடிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மணல்மேடு நூற்பாலை, 1968-லிருந்து நல்ல இலாபத்தோடு இயங்கி வந்த ஒரு தொழிற்சாலை. தற்போது அது நலிவடைந்த நிலைமையில், நடக்குமா, நடக்காதா என்ற ஒரு சூழ்நிலை அங்கே உருவாகிக்கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும், இதுசம்பந்தமாக பலமுறை மனு கொடுத்து, நாங்கள் கேட்டிருக்கிறோம். 8 மில்களை சர்க்காரே எடுத்து நடத்துவதற்குக் கடன் உதவி செய்திருக்கிறார்கள். அவற்றில் மணல்மேடு ஆலையும் வந்துவிடுமென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். ஆனால் அந்த ஆலை என்ன காரணத்தினாலோ வரமுடியவில்லை. இலாபத்தில் ஓடிக்கொண்டிருந்த அந்த நூற்பாலையை இழுத்துச் சாத்துகிற நிலைமை உருவாகியதன் காரணமாக, உடனடியாக அதை மாண்புமிகு முதலமைச்சர் தன் திட்டத்திலே எடுத்துக்கொண்டு, அதை அமல்படுத்தி, தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியத்தைக் கொடுக்கும்படியாக நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்கள் சம்பளமே ஓராண்டுக் காலமாக வாங்கமுடியாமல் இருக்கின்றார்கள். சம்பளம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இருந்தாலும், அவர்களுக்குச் சம்பளம் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை; மில்லை இழுத்து மூடிவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் அரும்பாடுபட்டு வேலை செய்து கொண்டு வருகிறார்கள். அவர்கள் தாமாகவே பணியிலிருந்து நீங்க வேண்டுமென்று சொன்னால்....

[2000 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** அவர்களுக்குள்ள ஊதியத்தைச் சர்க்காரே அளிப்பதற்கு முன்வருமா? அந்தச் சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள் கஷ்டப்படும்போது, அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, இருநூற்றுச் சொச்சம் இலட்சம் ரூபாயை உடனடியாகக் கொடுத்து, அவர்களை விடுவிக்க சர்க்கார் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படிச் செய்தால்தான் தொழிலாளர்களைக் காப்பாற்ற முடியும். இல்லையென்று சொன்னால், பட்டினி கிடந்து அவர்கள் குடும்பத்தின் நிலைமை வேறுவிதம்போல் ஆகிவிடுமென்று தெரிகிறது. எனவே அவர்களைக் காப்பாற்றுவதற்கு இந்த சர்க்காரும், அமைச்சர் அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளக்கமான பதிலிலேயே, அங்கே மீதியிருக்கின்ற 233 தொழிலாளர்களுக்கும் அளிக்க வேண்டிய ரூ.240 இலட்சத்தை கூடிய விரைவில் அளித்து ஒழுங்குபடுத்துகிறோம் என்ற செய்தியையும் தெரிவித்திருக்கிறேன். NABARD-க்கு அனுப்பப்பட்ட இரண்டாவது பரிந்துரையிலேதான், தஞ்சாவூர் ஆலை அனுப்பப்பட்டிருக்கிறது. நிச்சயம் இப்படிப்பட்ட பணியை தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தின் மூலமாக V.R.S. செய்து, இந்த ஆலையை மீண்டும் இலாபகரமாக இயக்குவதற்காகத்தான் இந்தப் பணிகளெல்லாம் நடைபெறுகின்றனவே தவிர, இழுத்து மூடுவதற்காக இந்த V.R.S. திட்டத்தைப் பயன்படுத்தப்போவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

முற்பகல் 10-25

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 18 கூட்டுறவு நூற்பாலைகள் தமிழகத்தில் நலிந்த நிலையில் இருந்தாலும், இவர்கள் வேலையிழந்துவிடக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் இராகவன் கமிட்டியின் பரிந்துரையின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சென்ற ஆண்டு 188 கோடி ரூபாய்க்கு Package scheme அறிவித்தார்கள். இப்பொழுது, நம்முடைய Estimates Committee போயிருந்தபோது, நாசரேத் மில்லானாலும் பேட்டை மில்லானாலும், ஸ்ரீவில்லிபுத்தூர், ஆரல்வாய்மொழி போன்ற



2000 மார்ச் 27]

கூட்டுறவு நூற்பாலைகளில், தன்விருப்ப ஓய்வு, அதாவது Voluntary retirement-ல் போவதற்கு ஏராளமான தொழிலாளர்கள் தயாராக இருக்கின்றார்கள் என்று தெரிந்தது. எங்களுக்கு அதற்கான பணத்தை ஒதுக்கிவிட்டால்—அங்கேயுள்ள management சொல்வதும் இவர்கள் போய்விட்டால் நிர்வாகச் செலவு மாதாமாதம் குறையும்—முதலமைச்சருடைய நோக்கத்தை நாங்கள் நிறைவேற்றி, இலாபத்தில் ஓட்ட முடியும். ஆகவே அதை ஒரு போர்க்கால அடிப்படையில் செய்தால் நல்லது என்று எங்களிடத்திலே முறையிட்டிருக்கிறார்கள். ஆகவே அமைச்சருடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வந்து, இப்படி Voluntary retirement-ல் போவதற்குத் தயாராக இருக்கின்ற, கூட்டுறவு நூற்பாலைகளில் இருப்பவர்களுக்குரிய பணத்தை உடனே கொடுப்பதற்கு அவசரகால நடவடிக்கையை எடுக்க அமைச்சர் முன்வருவாரா, முதலமைச்சருடைய அந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு வழி செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் இந்திய கூட்டுறவு நூற்பாலை பேட்டையிலே அமைந்திருக்கிறது. அது பெரிய அளவிலே 50,000 ஸ்பின்டில்களைக் கொண்ட நூற்பாலை. NABARD உதவி ஏற்கெனவே இந்த ஆலைக்கு வழங்கப்பட்டுவிட்டது. அப்படி வழங்கப்பட்ட 6 ஆலைகளில், பேட்டை கூட்டுறவு நூற்பாலை இலாபத்தில் வர இயலாததற்குக் காரணம் -- working capital -- நடைமுறை மூலதனம்- அதிகம் தேவைப்படுகின்ற காரணத்தால்தான், அதே நிலை சேலம் கூட்டுறவு நூற்பாலையிலும் இருக்கிறது. இருந்தாலும், எடுத்த 6 நூற்பாலைகளில் கன்னியாகுமரி கூட்டுறவு நூற்பாலை இலாபகரமாக இருக்கிறது. இராமநாதபுரம் கூட்டுறவு நூற்பாலை, தாராபுரம் கூட்டுறவு நூற்பாலை, தருமபுரி கூட்டுறவு நூற்பாலை, இவை எல்லாம் வங்கியினுடைய உதவியைப் பெற்ற பின்பு—இன்று அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி, பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டையபுரம், கன்னியாகுமரி கூட்டுறவு நூற்பாலை, கன்னியாகுமரி, தாராபுரம்-கூட்டுறவு நூற்பாலை, புதுக்கோட்டை நூற்பாலை ஆகிய 5 நூற்பாலைகள் இலாபத்திலே இயங்குகின்றன. இதிலே, இராமநாதபுரம், தருமபுரி நூற்பாலைகள்—சற்று மேலும், சற்று கீழும், ஒரு நாள் இலாபம், மறுநாள் நஷ்டம் என்ற நிலையிலே இருக்கின்றன. நிச்சயம் NABARD உதவியோடு செயலாற்றுகின்ற நூற்பாலைகள் இலாபகரமாக இயங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை உரிய முறையில், விரைவில் அனைத்து ஆலைகளுக்கும் செய்து, நிச்சயம் அந்தப் பணி சிறப்பாக முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. மேலும் இதற்குத் தேவையான நிதியை அரசிடம் கோரி

இருக்கிறோம், நிச்சயம் விரைவிலே இன்றோ, நாளையோ எப்படியும் V.R. Scheme-ன்கீழ் கூட்டுறவு நூற்பாலைகளில் உள்ள 1752 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் மற்றும் கூட்டுறவு நூற்பாலைகளில் அதிகப்படியாக உள்ள 2468 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள்—ஆக 4220 தொழிலாளர்களை "பணியாளர்கள் தன்விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ்" விடுவிப்பதற்கு, அரசிடம் ரூ.40.35 கோடி நிதி கோரப்பட்டுள்ளது; தேவைப்படுகிறது. நிச்சயம் அதைப் பெற்று நல்ல முறையிலே, ஆலைகளை இயக்கக்கூடிய பணியைச் செய்ய இயலும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 95, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**95—**

### மாவட்டப் பதிவு அலுவலகம்

*16012—**திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் மாவட்டப் பதிவு அலுவலகம் தோற்றுவிக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கடந்த 1-4-1999 முதல் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாநில வருவாயில், விற்பனை வரிக்கு அடுத்து, பதிவுத் துறை மூலமாகத்தான் அதிக வருவாய் கிடைக்கிறது. எனவே மாவட்டப் பதிவாளர் அலுவலகம், துணைப் பதிவாளர் அலுவலகம் போன்ற அலுவலகங்களுக்குச் சொந்தமாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையின்படி, கடந்த இரண்டு ஆண்டுகளிலே, ஏறத்தாழ 15 புதிய அலுவலகங்கள் கட்டுவதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏறத்தாழ இரண்டு கோடி ரூபாய்வரை ஒதுக்கீடு செய்து, புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன, திறக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, வருகின்ற ஆண்டிலே மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கேட்டு மாண்புமிகு உறுப்பினர் சொன்னது பற்றி பரிசீலித்து ஆவன செய்யப்படும்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 96, திரு. ஏ.வி.ஏ. நாசர், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**96—**

### வாரியாருக்கு மணி மண்டபம்

*30505—**திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளுக்கு சென்னையில் மணி மண்டபம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கால கட்டத்தில், சமஸ்கிருதத்தில் நடந்து கொண்டிருந்த கதா காலட்சேபத்தையெல்லாம் தமிழிலே நடத்தி, தனக்கே உரிய நகைச் சுவையோடு சிந்திக்கக் கூடிய வகையிலே ஆன்மீகத்தை வளர்த்த திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளை கௌரவிக்கும் வகையிலே, மக்களின் மனதிலே அவரை நிலைப்படுத்துகின்ற வகையிலே அந்த சுவாமிகளின்

நினைவாக ஒரு மணி மண்டபத்தை இந்த அரசு கட்டித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கிருபானந்த வாரியார் அவர்களுக்கு அவர் அடக்கம் செய்யப்பட்ட காங்கேயநல்லூரில் நினைவு மண்டபம் கட்டப்பட்டிருக்கின்றது. சேலத்திலே விநாயகா மருத்துவக் கல்லூரிக்கு அடுத்து, பெரிய மண்டபம் ஒன்று அழகாகக் கட்டப்பட்டு, அவருடைய திருவுருவச் சிலை வைக்கப்பட்டு, சிலையைக்கூட நான்தான் திறந்து வைத்தேன். நினைவுச் சின்னம் எல்லா ஊர்களிலும் கட்டுவது என்பது இயலாத காரியம். ஆனால், ஒன்று. நம்முடைய நாசர் அவர்களுக்கு கிருபானந்த வாரியாருக்கு ஒரு மண்டபம் கட்ட வேண்டும் என்று வந்திருக்கிற அந்த எண்ணமே மத நல்லிணக்கத்தைக் காட்டக்கூடிய எண்ணமாகும். (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே அரசின் நிதியிலே இதை ஒப்படைக்காமல், நாசர் அவர்கள் சார்ந்திருக்கின்ற தமிழ் மாநில தேசிய லீக்கின் சார்பாக நிதி வசூலித்து, கிருபானந்த வாரியாருக்கு நினைவு மண்டபத்தைக் கட்டுவாரேயானால், திறந்து வைக்க நான் தயாராக இருக்கிறேன். (சிரிப்பு) மத நல்லிணக்கத்திற்கு நல்ல உதாரணமாகவும் திகழும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் காங்கேயநல்லூரிலே பிறந்திருந்தாலும்கூட, சென்னையில்தான் அதிக ஆண்டுகள் வாழ்ந்தார்கள். அவருடைய வாழ்நாளிலே பெரும் பகுதியை அவர் சிந்தாதிரிப்பேட்டையிலேதான் செலவிட்டார்கள். அவருக்கு மணிமண்டபத்தைக் கட்ட வேண்டும் என்று பெசன்ட் நகரிலே இடம் கேட்டு நீதியரசர் சிங்காரவேலு அவர்கள் தலைமையிலே ஒரு குழு அமைத்து, அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறார்கள். எட்டையபுரத்திலே எப்படி பாரதியாருக்கு மணி மண்டபம் கட்டி, திருவல்லிக்கேணியிலே உள்ள அவருடைய வீட்டை நினைவாலயமாக ஆக்கியதோ, அதேபோல திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களுக்கும் அவருடைய பிறந்த இடத்திலே கட்டியதோடல்லாமல், அவர் வாழ்ந்த இடத்திலே ஒரு நினைவு மண்டபம் கட்டுவதற்கு அரசு அனுமதி அளிக்க வேண்டுமென்று உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் ஏற்கெனவே நான் யோசனை சொல்லியிருக்கிறேன். அந்த யோசனையை தமிழ் மாநில தேசிய லீக்கிற்குச் சொன்னேன். அதற்கு தமிழ் மாநில காங்கிரசும் ஒத்துழைக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 97, திரு. வெ. அ. ஆண்டமுத்து, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**97—**

**கால்நடை மருத்துவமனை**

*24262—**திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

*மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பவானிசாகர் தொகுதி, வெட்டையம்பாளையத்தில் இயங்கி வரும் பகுதி நேர கால்நடை மருத்துவமனையை முழுநேர மருத்துவமனையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பவானிசாகர் தொகுதி, வெட்டையம்பாளையத்தில் இயங்கி வரும் பகுதி நேர கால்நடை மருத்துவமனையை முழுநேர மருத்துவமனையாக மாற்ற தற்போது செயற்குறிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதி, வெட்டையம்பாளையத்தில் அதிகமாக கால்நடைகள் இருக்கின்றன. இது பகுதி நேர கால்நடை மருத்துவமனை; கோபிச்செட்டிப்பாளையம் தாலுகாவிலே மிக அதிகமான அளவிற்கு கால்நடைகள் வருகின்ற ஒரு மருத்துவமனையாகும். இங்கு ஏராளமான விவசாயிகளும் இருக்கின்றார்கள். கூட்டுறவு பால் சங்கங்களும் நிறைய இருக்கின்றன. ஆகவே அந்தப் பகுதியிலே முழு நேர B.V.Sc., பட்டம் படித்த ஒரு மருத்துவர் இருப்பது மிக அவசியமாக இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2000 மார்ச் 27

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், கோபி சரகம், பவானிசாகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் வெட்டையம்பாளையம் கிராமத்தில் ஒரு கால்நடைக் கிளை நிலையம் தற்போது செயல்பட்டு வருகின்றது. மேலும் நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்தில், நம்பியூர், சுண்டக்காம்பாளையம் மற்றும் குருமத்தூரில் கால்நடை மருந்தகங்களும், கெட்டிச் சிறையூர், மலையம்பாளையம், வேம்பன்னபாளையம், வெட்டையம்பாளையம் ஆகிய கால்நடைக் கிளை நிலையங்களும் இவற்றிற்கு முறையே மாமரத்துப்பாளையம், சின்னசெட்டிப்பாளையம், எஸ்.எல். மேட்டுப்பாளையம், இருகாளூர் ஆகிய பார்வைக் கிளை நிலையங்கள் செயல்பட்டு கால்நடைகளின் சிகிச்சைத் தேவையை தற்போது நிறைவுசெய்துகொண்டு வருகின்றன. எதிர் வரும் ஆண்டுகளில் அரசின் நிதி மற்றும் தகுதி அடிப்படையில் பகுதி 2 திட்டத்தின்கீழ் வெட்டையம்பாளையம் கால்நடை மருந்தகமாக உயர்த்த பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 98, திருமதி ஆர். வேடம்மாள், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**98—**

### புதிய மாணவர் விடுதி

*28446—**திருமதி ஆர். வேடம்மாள்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் நகரில் ஆதிதிராவிடர் நலத் துறை மாணவர் விடுதி, வாடகைக் கட்டடத்தில் இயங்குவதால் புதிய கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.



2000 மார்ச் 27]

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய கலைஞரும், கலைஞர் அரசும் இந்தச் சமுதாயத்தினுடைய பாதுகாவலர்களாகத் திகழ்கிற வண்ணம், அதை நினைவுபடுத்துகின்ற வண்ணம் ஆண்டுக்காண்டு இந்தத் துறைக்கு அதிக நிதியை ஒதுக்கி வருகிறார்கள். குறிப்பாக விடுதிகளைப் பொறுத்தவரையில், பணம் ஒதுக்கினாலும்கூட, போதுமான இடங்களில் இவை கட்டப்படாததற்கான சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. காரணம் இதற்குப் போதுமான நிலங்கள் இல்லை. குறிப்பாக சென்னையில் என்னுடைய தொகுதியிலேகூட, இதற்கான நிலங்கள் ஒதுக்கப்படவில்லை; இடம் இல்லை என்ற காரணம் கூறப்படுகிறது. எனவே அமைச்சரவர்களின் துறை, குறிப்பாக குடிசை மாற்று வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களில் இடங்களைக் கேட்டு அங்கே விடுதியைக் கட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக எல்லா இடங்களிலும் இடப் பற்றாக்குறை என்பது இல்லை. ஒருசில இடங்களில் பற்றாக்குறை ஏற்படுகின்றது. அப்போது வருவாய்த் துறை இடமாக இருந்தாலும் சரி, மற்ற அறநிலையத் துறை இடமாக இருந்தாலும் சரி, சம்பந்தப்பட்ட துறைக்கு எங்கள் துறையின் சார்பாக மனு செய்து, அதன்மூலமாக அவர்களிடமிருந்து இடத்தைப் பெற்று, தாட்கோவிடம் அந்த இடத்தை ஒப்படைத்து, மாணவர்களுக்கு—தலைவர் கலைஞருடைய ஆட்சியில் எந்த அளவிற்கு மிகுந்த அக்கறை எடுத்து கட்டடங்களுக்காக அதிகமான பணத்தை ஒதுக்கித் தருகிறார்களோ—அந்தந்த ஆண்டிற்குள் கட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 99, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**99—**

### சுற்றுலா மையம்

*26340—**திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2000 மார்ச் 27

புகழ்பெற்ற மிகவும் பழமை வாய்ந்த அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள விருத்தாசலம் நகரத்தைச் சுற்றுலா மையமாக மாற்ற அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சுற்றுலாத் துறையினைப் பொறுத்தமட்டில், தமிழகத்தில் எந்த ஓர் இடத்தையும் குறிப்பிட்டு சுற்றுலாத் தலமாக அறிவிப்பது கிடையாது. மிகவும் பிரபலமான சுற்றுலாத் தலங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையினைக் கருத்தில்கொண்டும், நிதியாதாரத்தைக் கருத்தில்கொண்டும் அந்தந்த இடங்களில் தேவைக்கேற்ப அடிப்படை வசதிகளான சாலை வசதி, தெரு விளக்கு, குடிநீர், கழிப்பறை, குளியலறை, தங்கும் வசதி போன்ற வசதிகள் செய்து தரப்படுகின்றன. புகழ்பெற்ற மிகவும் பெருமை வாய்ந்த அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ள விருத்தாசலம் நகரைச் சுற்றுலா மையமாகச் சேர்த்திடும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காசிக்குச் சென்று கங்கையிலே நீராடி, காசி விஸ்வநாதரை வலம் வந்தால் கிடைக்கின்ற புண்ணியத்தில் வீசம் புண்ணியம் விருத்தாசலத்தில் அமைந்துள்ள விருத்தகிரீஸ்வரர் ஆலயத்தை வழிபட்டால் கிடைக்கும் என்பது ஐதீகம். அதை நம்பி பல வடநாட்டு யாத்திரிகர்கள் நிறைய பேர் அங்கு வந்துகொண்டிருக்கிறார்கள். இந்தக் கோயிலுக்கு "முத்தாறு வலம் செய்யும் முதுகுன்றம்" என்ற பெயரும், பழமையான மலையின்மீது அமர்ந்திருப்பதால் "பழமலைநாதர்" என்ற பெயரும் உண்டு. இது வரலாற்றுச் சிறப்புமிக்க பராந்தக சோழனால் கட்டப்பட்ட திருக்கோயில் ஆகும். எனவே இந்தப் புண்ணிய திருக்கோயிலுக்கு அதிக யாத்திரிகர்கள் வருகின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியதைப்போல அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவாவது முன்வருவார்களா, அதற்கான நிதி ஒதுக்கம் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விருத்தகிரீஸ்வரர் ஆலயத்தைப் பொறுத்தமட்டில், தற்போது அதிகமான பயணிகள் அந்தப் பகுதிக்கு வருவதில்லை. அப்படி வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆர்வத்தின் அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி, நிச்சயமாக வருங்காலத்தில் வசதிகள் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 100, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**100—**

**இறால் குட்டைகள்**

**26176—***திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியிலுள்ள கடலோர மக்கள் குடியிருப்புப் பகுதியில் இறால் குட்டைகள் அமைத்திருப்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சீர்காழி தாலுகாவில் 117 இறால் பண்ணைகள் உள்ளன. ஆனால் இவற்றில் எதுவுமே கடலோர மக்கள் குடியிருப்புப் பகுதியில் அமைக்கப்படவில்லை.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் கடலோரக் கிராமங்கள் என்று கிட்டத்தட்ட 25 கிராமங்களுக்கு மேலாக இருக்கின்றன. அந்தப் பகுதியிலே வாழ்கிற குடியிருப்புப் பகுதிக்கு அருகிலேயே இறால் பண்ணைகளை அமைத்துள்ளதால் இறால் பண்ணைகள் மூலம் விவசாய விளை நிலங்கள் உப்பு நிலங்களாக மாறிவிட்டன. அதேபோன்று குடியிருப்புப் பகுதியிலே வாழ்கிற மக்கள் பயன்படுத்தும் குடிதண்ணீர் உப்புத் தண்ணீராக மாறிவிட்டது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், மகேந்திரபள்ளி, காட்டூர், சம்மங்காடு, மாதேவிபட்டினம் போன்ற கிராமங்களில் குடியிருப்புக்கு அருகிலேயே இறால் பண்ணைகளை அமைத்திருக்கிறார்கள். வேண்டுமானால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு குழுவை அமைத்துக்கூட பார்வையிடலாம். தவறான தகவலை மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு அதிகாரிகள் தந்திருக்கிறார்கள். எனவே மீண்டும் மறுபரிசீலனை செய்து, ஒரு குழுவை அமைத்து அந்தக் குழுவின் மூலமாக அமைச்சரவர்களும் வந்து பார்வையிடுவார்களா? மேலும் சீர்காழி பகுதியிலே 117 இறால் பண்ணைகள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் உரிமங்கள் பெறாமல்கூட அங்கே இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பாணையை வழங்கியது. அந்த ஆணையின்படி ஓய்வுபெற்ற நீதியரசர் மாண்புமிகு இராமானுஜம் அவர்கள் தலைமையில் டெல்லியிலே 8 பேர் கொண்ட குழுவும், மாநிலத்திலே 10 பேர் கொண்ட ஒரு குழுவும், இன்னும் மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட 9 பேர் கொண்ட ஒரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. உச்சநீதிமன்ற ஆணையின்படி கடற்கரை ஓரத்தில் 500 மீட்டருக்குட்பட்டு இறால் பண்ணைகள் இருந்தால் அழிக்கப்பட வேண்டும் என்று முதலில் இட்ட ஆணையைப் பின்னர் நிறுத்தி வைத்துள்ளது. ஆனால் பாரம்பரிய மற்றும் மேம்படுத்தப்பட்ட இறால் பண்ணைகள் அழிக்கப்பட வேண்டாம் என்றும், இறால் பண்ணைகள் அப்படியே இருக்க வேண்டுமென்றும் அனைவரும் விண்ணப்பம் செய்ய வேண்டும். இந்த விண்ணப்பம் மாவட்டத்தில் உள்ள குழுவும், மாநிலத்தில் உள்ள குழுவும் ஆய்வு செய்த பின் அது மத்தியிலே, டெல்லியிலே உள்ள குழுவிற்கு அனுப்பப்படுகிறது. அந்தக் குழுவிலிருந்து இது உரிய முறையில் அமைக்கப்பட்ட இறால் பண்ணையாக இருந்தால் அதற்கு மட்டும் உரிமங்கள் வழங்கப்படுகின்றன. இது இந்தக் குழுவாலே தேர்ந்தெடுக்கப்படுகிறதே ஒழிய இது அமைச்சகத்திற்கு வருவதில்லை. இருந்தாலும்கூட நீங்கள் சொல்வதைப்போல அந்த இறால் பண்ணை உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்கு மாறாக அமைக்கப்பட்டிருக்குமேயானால் நீங்கள் என்னிடம் தெரிவித்தால் நான் அந்தக் குழுவிற்குத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்க நான் முயல்வேன் என்று உங்கள் மத்தியிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடு குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 3. அறிவிப்பு

*மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் ஆற்றிய உரைக்கு உறுப்பினர்கள் தெரிவித்த நன்றியறிவிப்புத் தீர்மானம் கிடைக்கப் பெற்றமைக்கு ஆளுநர் மகிழ்ச்சி தெரிவித்தல்*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 22-3-2000 நாளிடப்பெற்ற கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்:

``I have received with pleasure the resolution adopted by the Legislative Assembly on 9th March 2000 thanking me for my address delivered on 1st March 2000 to the Members of the Tamil Nadu Legislative Assembly."

## 4. தகவல் கோரல்

### (அ) தமிழக மீனவர்களை பாகிஸ்தான் சிறையிலிருந்து மீட்டல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அடுத்த அலுவலுக்கு வந்தாகிவிட்டது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 19 மீனவர்கள் பாகிஸ்தான் சிறையிலே ஓராண்டு....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சொன்னீர்கள். பொது விவாதம் வருகிறது, பொது விவாதத்திலே பேசிக்கொள்ளலாம் என்று நான் சொல்லியிருக்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** துணைத் தலைவர் அவர்களே, ஒரு நடவடிக்கையும் இல்லை. ஒரு வருடத்திற்கு மேலே ஜெயிலிலே இருந்துகொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொது விவாதம் வருகிறது. அதிலே பேசிக்கொள்ளுங்கள்.

[2000 மார்ச் 27

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பொது விவாதத்தில் பேச வேண்டியது வேறு. இது தமிழக அரசு. . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அடுத்த அலுவலுக்கு வந்தாகிவிட்டது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** பாகிஸ்தான் சிறையிலே இருக்கிறார்கள். மத்தியிலே இருக்கக்கூடிய அரசு இதைக் கண்டுகொள்ளவே இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே ஒரு வருடத்திற்கு மேலே பாகிஸ்தான் சிறையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள்.

* **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியல் பிரச்சாரம் நடத்துவதற்கு இப்படி இடையிட்டு கேட்கிற நேரத்தைப் பயன்படுத்தக் கூடாது. இந்தப் பிரச்சினையை இந்த அரசு அணுகிக்கொண்டிருக்கிறது. அதுபற்றி ஏற்கெனவே விவரம் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு பிரச்சாரத்திற்காகவே இடையிடையிலே அவையினுடைய பணிகளை நிறுத்தி, தலையிட்டு அவையில் பேசக்கூடாததைப் பேசுவது அவ்வளவு நியாயம் அல்ல. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவை முன்னவர் சொன்னதுதான் உங்களுக்கும். 2000-2001 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** துணைத் தலைவர் அவர்களே, நான் இதை வன்மையாகக் கண்டிக்கிறேன். தமிழகத்தினுடைய 19 மீனவர்கள் பாகிஸ்தான் சிறையில் இருக்கிறார்கள்; அவர்களை விடுவிக்க வேண்டும் என்று நான் சொன்னது விளம்பரத்துக்காக என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை அவர் திரும்பப் பெற வேண்டும்.

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி ஏற்கெனவே இங்கு பிரச்சினை எழுப்பப்பட்டு மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி விரிவான விளக்கத்தை இங்கே தந்திருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். நடவடிக்கை அவர்கள் எடுத்திருக்கிறார்கள். பாகிஸ்தானிலே அவர்கள் அடைபட்டிருக்கின்ற இடம் வரையிலே சென்று பார்த்துவிட்டு வந்து,



2000 மார்ச் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

தூதரகத்திற்கு அது சொல்லப்பட்டு, தூதரகத்தின் சார்பாகத் தமிழக அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. அதையும் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையிலே விளக்கியிருக்கிறார்.

ஒருவேளை அன்றைக்கு உறுப்பினர் வராமல் இருந்திருக்கக்கூடும். இந்த அவையிலே விளக்கப்பட்டு பத்திரிகைகளில் எல்லாம் செய்தி வெளிவந்திருக்கிறது. பாகிஸ்தானுக்கும், நமக்கும் உள்ள உறவு எப்படி என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாதது அல்ல. 18 பேரோ, 19 பேரோ அங்கு சிறைப்படுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்றால் அவர்களை எப்படி இங்கே கொண்டுவர வேண்டும் என்பது நம்முடைய மத்திய அரசு செய்ய வேண்டிய மிகப்பெரும் காரியம் என்பதை நானும் உணருகிறேன். முள் வேலியிலே போடப்பட்ட வேட்டியை எடுப்பதைப்போலத்தான் அவர்களை அங்கிருந்து விடுவிக்க வேண்டியிருக்கிறது என்பதை உணர்ந்தால் இந்தக் கேள்விக்கே இடம் இல்லை.

முற்பகல் 10-45

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அதாவது இதிலே வந்து ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதற்குத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்களே, அதற்குமேலே என்ன விளக்கம் வேண்டியிருக்கிறது? (குறுக்கீடு) ஏற்கெனவே இதுசம்பந்தமாகப் பிரச்சினை எழுப்பப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் விரிவாகப் பதில் சொல்லப்பட்டது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அதேமாதிரி, தமிழ்நாட்டிலே உள்ளவர்களை விடுதலை செய்து கொண்டு வருவதற்கு நீங்கள் ஏன்—அதாவது கூட்டணி அரசு, உங்கள் பிரதமர்தான் இருக்கிறார்....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

[2000 மார்ச் 27

## 5. முன்பண மானியக் கோரிக்கைகள், 2000-2001, பேரவையில் வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை பேரவைமுன் வைக்கின்றேன்.

### 2000-2001 ஆம் ஆண்டு உடனடிச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு | |
| 1. நில வருவாய்த் துறை | 3,56,78 |
| 2. மாநில ஆயத் தீர்வைத் துறை | 6,01,64 |
| 3. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 8,17,11 |
| 4. பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் | 31,18,55 |
| 5. முத்திரைத் தாள்கள்-நிருவாகம் | 3,17,69 |
| 6. ஆவணப் பதிவு | 13,14,25 |
| 7. மாநிலச் சட்டமன்றம் | 2,81,63 |
| 8. தேர்தல்கள் | 7,92,75 |
| 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 44,69,68 |
| 10. பால் வழங்கு செயல் திட்டங்கள் | 3,30,11 |

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2000 மார்ச் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

| அ. வருவாய்க் கணக்கில் செலவு–தொடர்ச்சி | |
|---|---|
| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
| 11. மாவட்ட நிருவாகம் | 1,44,38,97 |
| 12. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 6,23,60 |
| 13. நீதி நிருவாகம் | 35,38,84 |
| 14. சிறைச்சாலைகள் | 13,96,93 |
| 15. காவல் துறை | 2,63,42,24 |
| 16. தீயணைப்புப் பணிகள் | 17,94,94 |
| 17. கல்வி | 11,62,23,79 |
| 18. மருத்துவம் | 1,89,57,87 |
| 19. மக்கள் நல்வாழ்வு | 1,26,10,09 |
| 20. வேளாண்மை | 2,19,31,63 |
| 21. மீனளம் | 12,45,73 |
| 22. கால்நடை வளர்ப்பு | 43,96,84 |
| 23. கூட்டுறவு | 16,62,21 |
| 24. தொழில்கள் | 4,05,68 |
| 25. கைத்தறியும் துணித் தொழிலும் | 46,68,98 |
| 26. கதர்-கிராமத் தொழில்கள் | 8,02,14 |
| 27. ஊரக வளர்ச்சி | 3,29,88,51 |
| 28. தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் | 33,11,64 |
| 29. சமூக நலன் | 1,55,87,87 |
| 30. பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 86,56,46 |
| 31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் | 39,08,25 |
| 32. வீட்டு வசதி | 16,86,85 |

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 மார்ச் 27

அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| 33. நகர்ப்பகுதி வளர்ச்சி | 9,62,81 |
| 34. நுகர்பொருள் வழங்கல் | 4,67,03,16 |
| 35. பாசனம் | 88,45,47 |
| 36. பொதுப் பணிகள்—கட்டடங்கள் | 34,96,72 |
| 37. சுற்றுச் சூழல் | 2,21,53 |
| 38. சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து | 1,34,54,71 |
| 39. சாலைப் போக்குவரத்துப் பணிகள் | 5,47,92 |
| 40. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 17,93,34 |
| 41. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 6,48,24,25 |
| 42. பல்வகை | 98,60,27 |
| 43. எழுதுபொருள்-அச்சுத் துறை | 15,63,11 |
| 44. காட்டுவளத் துறை | 41,21,88 |
| 45. இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 19,69,59 |
| 46. செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் | 4,59,01 |
| 47. ஊரகத் தொழில்கள் | 20,15,35 |
| 48. குடிநீர் வழங்கல் | 31,69,86 |
| 49. நகராட்சி நிருவாகம் | 1,38,61,92 |
| 50. சுற்றுலா | 94,95 |
| 51. தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 8,45,43 |
| மொத்தம். அ. வருவாய்க் கணக்கில் செலவு | **48,83,91,53** |
| **ஆ. வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு** | |
| 52. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 2,68,55 |
| 53. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 4 |
| 54. பாசனம் குறித்த மூலதனச் செலவு | 1,86,48,47 |



2000 மார்ச் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

அ. வருவாய்க் கணக்கில் கீழ்வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| 55. பொதுப் பணிகள் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 51,72,78 |
| 56. சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 1,86,59,74 |
| 57. சாலைப் போக்குவரத்துப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 12,33 |
| 58. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 43,38,05 |
| 59. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 5 |
| 60. பல்வகை மூலதனச் செலவு | 2,07,93,67 |
| மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு | 6,78,93,68 |
| **இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்** | |
| 61. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 98,32,79 |
| பெருமொத்தம் | **56,61,18,00** |

**திரு. பி. ஆர். சுந்தரம்:** **

## 6. இறுதித் துணை நிதி நிலை அறிக்கை, 1999-2000, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1999-2000 ஆண்டுக்கான செலவு குறித்த இறுதித் துணை நிதி நிலை அறிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

53/32—4a

[2000 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான ....

**திரு. பி.ஆர்.சுந்தரம்:** **

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கின்றேன். (குறுக்கீடு) மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு) மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள இத்துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய் 6901 கோடியே 97 இலட்சம்.....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. (குறுக்கீடு) இதில், ரூ. 2733 கோடியே 98 இலட்சம் வருவாய்க் கணக்கிலும் ரூ. 4167 கோடியே 99 இலட்சம் மூலதனம் மற்றும் கடன் கணக்குகளிலும் அடங்கும். (குறுக்கீடு)

இந்த மானியக் கோரிக்கைகளில் இடம் பெறுகின்ற சில முக்கியமான திட்டங்கள் ... (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதற்கு இடையூறாக சுந்தரம் அவர்கள் இப்படி குந்தகம் விளைவிக்கக்கூடாது. டாக்டர் குமாரதாஸ் அவர்களைப் போல நீங்களும் உட்கார வேண்டும். தயவுசெய்து உட்காருங்கள். நீங்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் உட்கார வேண்டுமென்று நான் எச்சரிக்கிறேன். நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** திட்டப்பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

“மானியக் கோரிக்கை 8 - தேர்தல்கள்” என்பதன்கீழ் ரூபாய் 51 கோடியே 42 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது. இதில் மக்களவைக்குத் தேர்தல் நடத்தியது, மாநிலச் சட்டமன்றத்திற்கு இடைத் தேர்தல்கள் நடத்தியது, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கியது ஆகியவை குறித்த செலவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2000 மார்ச் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

“மானியக் கோரிக்கை 17 - கல்வி” என்பதன்கீழ் ரூபாய் 88 கோடி 36 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் சம்பளங்கள் குறித்த செலவுகள் அதிகரித்தல், பல்தொழில் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவைகள் கொடுத்தல் ஆகியவை இதில் அடங்கும்.

1998-99 ஆம் ஆண்டில் உழவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கியதற்காக தமிழ்நாடு மின்வாரியத்திற்கு கூடுதல் மின் கட்டண இழப்பீட்டுத் தொகையான ஈவுத் தொகையை மானியமாக மாற்றி வழங்க, அரசு ரூபாய் 826 கோடியே 5 இலட்சம் அனுமதித்துள்ளது. இது, “மானியக் கோரிக்கை 20 - வேளாண்மை” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

மாநில புதுப்பிப்பு நிதிக்கு (State Renewal Fund) ரூபாய் 17 கோடியே 52 இலட்சம் பங்குத் தொகையாக வழங்கும் வகையில் “மானியக் கோரிக்கை 28 - தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்” என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 4 கோடியே 83 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது. மீதத் தொகை மறு நிதியொதுக்கம் மூலம் அளிக்கப்படும்.

முதியோர் உதவித் தொகை திட்டங்களுக்காக “மானியக் கோரிக்கை 29 - சமூக நலன்” என்பதன்கீழ் கூடுதலாக ரூபாய் 23 கோடியே 47 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்புப் பணிகளுக்காக அரசு ரூபாய் 34 கோடியே 50 இலட்சம் அனுமதித்துள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கான ரூபாய் 6 கோடியே 30 இலட்சமும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கான ரூபாய் 25 கோடியே 95 இலட்சமும் இதில் அடங்கும். இவை “மானியக் கோரிக்கை 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

1-1-1996-க்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதிய நிலுவைத் தொகை வழங்குவதிலும், ஓய்வூதியதாரர்களுக்கு திருத்திய ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை ஒட்டுமொத்தத் தொகையாக வழங்கியதிலும் ஏற்பட்ட கூடுதல் செலவுகளை மேற்கொள்வதற்கு ரூபாய் 706 கோடியே 76 இலட்சம் “மானியக் கோரிக்கை 41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்” என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

229773

பல்வேறு பாசனத் திட்டச் செலவுகளின் மீது வட்டியாக வருவாய்க் கணக்கிலிருந்து ரூபாய் 125 கோடியே 91 இலட்சம் "மானியக் கோரிக்கை 54 - பாசனம் குறித்த மூலதனச் செலவு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர், திருவண்ணாமலை, நாமக்கல், திருவாரூர், நாகப்பட்டினம், கரூர், தேனி ஆகிய புதியதாக அமைக்கப்பட்ட மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்கள் கட்டுவதற்காக ரூபாய் 10 கோடியே 27 இலட்சமும், உலக வங்கி நிதியுடனான தொழில்நுட்பக் கல்வித் திட்டத்தின்கீழ் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க அனுமதிக்கப்பட்ட ரூபாய் 5 கோடியே 95 இலட்சமும் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 55 - பொதுப்பணி - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

அரசு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழிவகை முன் பணமாக ரூபாய் 75 கோடியும், கரும்பு உற்பத்தியாளர்களுக்கு, கரும்புக்கான விலையை அளிக்க கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு வழிவகை முன்பணமாக ரூபாய் 158 கோடியே 91 இலட்சமும் அனுமதித்துள்ளது. மேலும் அரசுப் பணியாளர்களுக்கு வீடு கட்டும் முன்பணத்திற்காக கூடுதலாக ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகைகள் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 61 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

பொது வருங்கால வைப்புநிதிகளில் வைப்பீடுகள்மீது வட்டிக்காக ரூபாய் 259 கோடியே 41 இலட்சம் "கடன் செலவுகள்" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து அவ்வப்போது பெற்ற வழிவகை முன்பணத்தையும் மிகைப்பற்றையும் திருப்பிக் கொடுக்க ரூபாய் 3,681 கோடியே 17 இலட்சம் "பொதுக்கடன் திருப்பிக்கொடுத்தல்" என்ற தலைப்பின்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து நான் இங்கு மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும் மற்றும் ஏனைய இனங்கள் குறித்தும் உரிய முழுவிவரங்கள் பேரவை முன் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம்பெற்றுள்ளன.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். வணக்கம்.

முற்பகல் 10-50

## 1999-2000 ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை (1) | ரூபாய் ஆயிரத்தில் (2) |
|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு— | |
| 1. நில வருவாய்த் துறை | 1,63,43 |
| 2. மாநில ஆயத் தீர்வைத் துறை | 4 |
| 3. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 6,61,07 |
| 4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் | 21,71,72 |
| 5. முத்திரைத் தாள்கள்-நிருவாகம் | 76,52 |
| 6. ஆவணப் பதிவு | 5,71,25 |
| 7. மாநிலச் சட்டமன்றம் | 99,13 |
| 8. தேர்தல்கள் | 51,41,78 |
| 9. மாநில ஆட்சித்தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 23,62,76 |
| 10. பால் வழங்கு செயல்திட்டங்கள் | 70,81 |
| 11. மாவட்ட நிருவாகம் | 29,27,78 |
| 12. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 1,08,63 |
| 13. நீதி நிருவாகம் | 9,55,68 |
| 14. சிறைச்சாலைகள் | 13 |

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 மார்ச் 27

| கோரிக்கை (1) | ரூபாய் ஆயிரத்தில் (2) |
|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி** | |
| 15. காவல் துறை | 1,50,80,40 |
| 16. தீயணைப்புப் பணிகள் | 13 |
| 17. கல்வி | 88,34,04 |
| 18. மருத்துவம் | 76,97,06 |
| 19. மக்கள் நல்வாழ்வு | 74,29,72 |
| 20. வேளாண்மை | 8,51,10,41 |
| 21. மீனளம் | 3,78,92 |
| 22. கால்நடை வளர்ப்பு | 22,56,18 |
| 23. கூட்டுறவு | 10,91,37 |
| 24. தொழில்கள் | 2 |
| 25. கைத்தறியும், துணித் தொழிலும் | 9 |
| 26. கதர்-கிராமத் தொழில்கள் | 3,56,15 |
| 27. ஊரக வளர்ச்சி | 23 |
| 28. தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் | 4,83,13 |
| 29. சமூக நலன் | 78,75,26 |
| 30. பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 26,34,61 |
| 31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் | 16,27,98 |
| 32. வீட்டுவசதி | 3 |
| 33. நகர்ப்பகுதி வளர்ச்சி | 2,29,53 |
| 34. நுகர்பொருள் வழங்கல் | 5 |
| 35. பாசனம் | 46 |
| 36. பொதுப் பணிகள்-கட்டடங்கள் | 10,78,80 |
| 37. சுற்றுச்சூழல் | 3 |
| 38. சாலைகளும், பாலங்களும் | 9 |



2000 மார்ச் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

| கோரிக்கை (1) | ரூபாய் ஆயிரத்தில் (2) |
|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி** | |
| 39. சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் | 3,27,24 |
| 40. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 36,02,12 |
| 41. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 7,06,75,51 |
| 42. பல்வகை | 21 |
| 43. எழுதுபொருள்-அச்சுத் துறை | 5,00,17 |
| 44. காட்டுவளத் துறை | 10,13,27 |
| 45. இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 1 |
| 46. செய்தி, திரைப்படத் தொழில் நுட்பவியல் | 46,93 |
| 47. ஊரகத் தொழில்கள் | 13 |
| 48. குடிநீர் வழங்கல் | 14,66,23 |
| 49. நகராட்சி நிருவாகம் | 4 |
| 50. சுற்றுலா | 1,35,44 |
| 1. தமிழ் வளர்ச்சிப் பண்பாடு | 6,15,11 |
| மொத்தம்-அ. வருவாய்க் கணக்கில் செலவு | **23,58,57,83** |
| **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | |
| 2. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 61,07 |
| 4. பாசனம் குறித்த மூலதனச் செலவு | 1,44,39,18 |
| 5. பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 52,95,69 |
| 5. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 9 |
| 7. சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 4,31 |
| 8. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 9,65,21 |

| கோரிக்கை (1) | ரூபாய் ஆயிரத்தில் (2) |
|---|---|
| ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி | |
| 59. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 1,94 |
| 60. பல்வகை மூலதனச் செலவு | 16,80,81 |
| மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | **2,24,48,30** |
| இ. கடன்கள் முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும் | |
| 61. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 2,53,43,85 |
| பெருமொத்தம் | **28,36,49,98** |

## 7. வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பேசுகிற நல்வாய்ப்பை நல்கிய தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

"நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்"

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்கிற அய்யன் வள்ளுவனுடைய திருக்குறளை நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே, பல ஆண்டுகாலமாக புறம்போக்கு நிலங்களிலே வாழ்ந்து வரக்கூடிய சில ஏழை எளிய மக்களுக்குப் பட்டா கொடுக்கப்படும் என்றும், அதேபோல பழங்குடியினருக்கு ஒரு இயக்ககம் அமைக்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிற சில கருத்துக்களை நாங்கள்



வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் இந்த அரசு என்னென்னவற்றையெல்லாம் செய்யத் தவறியிருக்கிறது என்பதையும், அரசு நாட்டு மக்களுடைய நல்வாழ்விற்காக எதையெதையெல்லாம் செய்ய வேண்டும் என்கிற கருத்துக்களையும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது எங்களுடைய தலையாய கடமையும், எதிர்க்கட்சியினுடைய பொறுப்புமாகும். அந்த வகையிலே ஆளுங்கட்சியினர் அல்லது மற்றவர்கள் இதில் இருக்கக்கூடியவற்றிற்குப் பாராட்டுரை வழங்கலாம். ஆனால்,

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்ற வள்ளுவனுடைய அந்தக் கூற்றுக்கு இலக்கணமாக இந்த அரசு இருந்துவிடக் கூடாது என்பதற்காக, நீங்கள் கெடாமல் இருக்க வேண்டும் என்பதற்காக சொல்லக்கூடிய சில வார்த்தைகளாக நீங்கள் இதைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்கிற வகையிலே நாங்கள் சில கருத்துக்களை இங்கே எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

வரிபோடாத பட்ஜெட் என்று சில பேர் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு ஆட்சிப் பீடத்திற்கு வந்த பின்னால் வரிகளையெல்லாம் உயர்த்தமாட்டார்கள்; பஸ் கட்டணம், மின் கட்டணம் போன்றவற்றையெல்லாம் ஏற்ற மாட்டார்கள் என்றெல்லாம் நம்பி வாக்களித்த மக்களுக்கு ஒரு மாபெரும் ஏமாற்றத்தை அளிக்கின்ற வகையிலே, ஏற்கெனவே பஸ் கட்டணத்தை உயர்த்தியாகிவிட்டது; மின் கட்டணத்தை உயர்த்தியாகிவிட்டது; பால் விலையை உயர்த்தியாகிவிட்டது; சொத்து வரியை உயர்த்தியாகிவிட்டது; Road tax-ஐ உயர்த்தியாகிவிட்டது. இவ்வளவையும் உயர்த்தியதை எண்ணும்போது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக 4-3-1966-இல் இந்த அவையிலே சொன்ன கூற்றுதான் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. "வரி போடாத பட்ஜெட் என்று சில பேர் இங்கே பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். மிகத் தந்திரமாக அரசாங்கம் ஏற்கெனவே போட வேண்டிய வரிகளையெல்லாம் போட்டுவிட்டு, இப்போது போட்டால் பிரச்சினை ஆகிவிடும் என்கிற காரணத்தாலே போடாமல் தவிர்த்திருக்கிறார்கள். ஏற்கெனவே போட்டுவிட்டார்கள், ஆகவே, வரி போடாத பட்ஜெட் என்று சொல்வது விந்தையாக இருக்கிறது'' என்று இன்றைய முதல்வர், அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நம்முடைய கலைஞர் அவர்கள் அன்று நடந்த பட்ஜெட் மீதான விவாதத்திலே பேசியிருக்கிறார்கள். அந்த

*முற்பகல் 10-55*

வகையில்தான் நீங்களும் ஏற்கெனவே வரிகளைப் போட்டு, தமிழ்நாட்டு மக்கள்மீது எவ்வளவு சுமையை ஏற்ற வேண்டுமோ அந்த அளவுக்குச் சுமையை ஏற்றிவிட்டீர்கள். இப்போது வரியே இல்லை என்று சொல்கிறவர்களுக்கு நாங்கள் சொல்லக்கூடிய பதில் இதுதான்.

நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், "பெரியார் தந்த பார்வை, அண்ணா வகுத்தளித்த பாதை இவற்றைப் போற்றி, நாங்கள் அவர்கள் வழியில் நடைபோட்டுக்கொண்டிருக்கிறோம், இம்மியளவும் வழுவாமல் இருக்கிறோம்'' என்று சொல்லி, "வன்முறை தவிர்த்து வறுமையை வென்றிடவும், ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்திடவும், உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிப்பதாக" சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் பெரியார், அண்ணா அவர்களுடைய பாதையிலேயிருந்து நீங்கள் வழுவியிருக்கிறீர்களா, இல்லையா என்பது உங்களுடைய மனசாட்சிக்குத்தான் தெரியும்.

மதவாதம். குறிப்பாக, வன்முறையைத் தூண்டிவிட்டு, வரலாற்றுச் சிறப்புமிக்க பாபர் மசூதியை இடித்துத் தள்ளியவர்களோடு நீங்கள் என்றைக்குக் கூட்டணியை வைத்துக்கொண்டீர்களோ அன்றே நீங்கள் பெரியார் பாதையிலிருந்து கொஞ்சம் வழுவிவிட்டீர்கள். அதேபோல் பூரண மதுவிலக்கு என்ற கொள்கையிலே தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் மிக உறுதியாக இருந்தார்கள். தமிழ்நாட்டு மக்கள் குடிக்கக்கூடாது என்பதிலே, குடியை இங்கே கொண்டுவரக்கூடாது என்பதிலே எவ்வளவு உறுதியாக இருந்தார்களோ அந்த உறுதியை நீங்கள் தளர்த்தி, தமிழ்நாட்டு மக்களுக்கு முதன்முதலிலே குடிக்கக் கற்றுக் கொடுத்ததே திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்று சொல்லக்கூடிய அளவுக்கு முதலில் மதுவிலக்குக் கொள்கையை நீங்கள் தளர்த்தியதன் விளைவு, இன்று நாடு தவறான பாதையிலே சென்றுகொண்டிருக்கிறது. அதற்கு ஒரு எடுத்துக்காட்டு சொல்ல வேண்டுமென்றாலும்கூட, இப்போது பத்திரிகைகளிலே பரபரப்பாக வந்துகொண்டிருக்கக்கூடிய ஓர் ஆசிரியை கற்பழிப்பு சம்பந்தப்பட்ட செய்தியிலே கூட, ஒரு மூத்த I.A.S. அதிகாரி முதலிலே மதுவை வாங்கிவரச் சொல்லி, குடித்துவிட்டு, பிறகுதான் கற்பழிப்புச் செயலில் ஈடுபட்டார் என்கிற செய்தி எவ்வளவு வருத்தத்திற்குரியது என்பதை நான் உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுதான் எல்லாக் குற்றங்களுக்கும் இன்று அடித்தளமாகவும் ஆதாரமாகவும் இருந்துகொண்டிருக்கிறது.



நீங்கள் கூட்டணி வைத்துக்கொண்டிருக்கிற மத்திய அரசுகூட தமிழ்நாட்டுக்கு எவ்வளவு துரோகம் செய்துகொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது நிதிநிலை அறிக்கையில் "அரிசி விலையை உயர்த்தியது மிகவும் வருந்தத்தக்கது'' என்று சொல்லியிருக்கிறீர்கள். அதேபோல மண்ணெண்ணெய் விலையை இப்போது உயர்த்திவிட்டார்கள். Gas விலையை உயர்த்திவிட்டார்கள்.

அடுத்து சேலம் இரும்பாலை. உங்களுடைய காலத்திலே சேலத்திலே கொண்டுவரப்பட்டதுதான் சேலம் இரும்பாலை. அந்த இரும்பாலையைத் தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுக்கக்கூடாது என்று இந்த மாமன்றத்திலே தெரிவித்த எங்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்று, அந்தக் கணத்திலேயே ஒரு தீர்மானத்தை இயற்றினோம். ஆனால் இந்த மாமன்றம் ஒரு கண்டனத் தீர்மானத்தைப் போட்டு, தனியாருக்கு அந்த இரும்பாலையைக் கொடுக்கக்கூடாது என்று சொன்ன பின்னாலும்கூட இதுவரை வாய்மூடி மௌனியாக இருக்கக்கூடிய B.J.P. அரசை நாம் என்னவென்று சொல்வது? அடுத்த கட்டமாக அதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்?

அதேபோல் World Trade Organisation Agreement-லே இப்போது மத்திய அரசு கையெழுத்திட்டதனுடைய விளைவு, நீலகிரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய தேயிலை விலைபோகாத ஒரு கொடுமை அரங்கேறப் போகிறது.

அதேபோல இராசிபுரம், நாமக்கல், சேலம், ஈரோடு போன்ற பகுதிகளில் அதிகமாக உற்பத்தியாகின்ற முட்டைகள், நாளைக்கு விலை போகாத ஒரு கொடுமையும் இங்கே அரங்கேறப் போகிறது.

அதேபோல பால். பால் பொருட்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு பல தொழில்களைச் செய்யும் பல லட்சக்கணக்கான மக்கள் தமிழகத்திலே இருக்கின்றார்கள். நீங்கள் World Trade Organisation மூலமாக தேயிலையை இறக்குமதி செய்தால், பால் பொருட்களை இறக்குமதி செய்தால், முட்டைகளை இறக்குமதி செய்வோம் என்று சொன்னால், பல லட்சக்கணக்கான தமிழக மக்கள் நாளைக்கு நடுத் தெருவுக்கு வரக்கூடிய கேவலமான ஒரு நிலை உருவாகும்.

அடுத்து இட ஒதுக்கீடு. இட ஒதுக்கீட்டை எடுத்துக்கொண்டால், இப்போதுகூட பத்திரிகைகளில் தமிழக அரசு ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறது. ராஜ்ய சபாவில் நடந்த ஒரு விவாதத்திலே "உச்சநீதிமன்றம் *50* சதவீதத்திற்கு மேலே தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் இட ஒதுக்கீட்டை அளிக்கக்கூடாது என்று தீர்ப்பளித்திருக்கிற காரணத்தினாலே,

49.5 சதவீதம்வரைதான் இட ஒதுக்கீடு அளிக்க முடியும்" என்கிற வகையில் மத்திய அமைச்சர் பதிலை அளித்திருக்கிறார்கள். இப்போது இட ஒதுக்கீட்டை வலியுறுத்துவதாக உங்களுடைய நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். இப்படி 69 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு விரோதமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற மத்திய அரசை, பல கோணங்களில் இப்படியெல்லாம் தவறு செய்துகொண்டிருக்கிற மத்திய அரசைக் கண்டிக்க, இந்தக் காலகட்டத்தில் நீங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்ய வேண்டாம். உங்களிடம் ஒன்றே ஒன்றை நான் மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய வார்த்தைக்கு மதிப்பளிக்காமல், தமிழக மக்களுக்குத் துரோகம் செய்து கொண்டிருக்கிற, தமிழக மக்களை முதுகில் குத்திக் கொண்டிருக்கிற B.J.P. அரசுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிற ஆதரவை உடனடியாக திராவிட முன்னேற்றக் கழகமும், அந்தக் கூட்டணியில் இருக்கிற கட்சிகளும் திரும்பப்பெற்று, அந்த உணர்வுகளை தயவுசெய்து பிரதிபலியுங்கள் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கும் அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லையென்றால், மத்திய அமைச்சரவையிலே இருந்து கொண்டிருக்கக்கூடிய தமிழக அமைச்சர்கள் உடனடியாக விலகி தமிழ்நாட்டு மக்களுடைய உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டுமென்றும் நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே, உடல், பொருள். ஆவி என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு பெரிய அளவுக்கு நாங்கள் கேட்கத் தயாராக இல்லை. நாங்கள் மிகக் குறைந்தபட்சமாக இந்தக் கோரிக்கையை வைக்கிறோம்.

முற்பகல் 11-00

அடுத்ததாக, உங்களுக்கு சிக்கனத்தைப்பற்றி நாங்கள் நிறைய சொல்லியாக வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட, பற்றாக்குறை பட்ஜெட்டை எந்த அளவுக்குப் போட்டிருக்கிறார்கள் என்பது தெரியும். இந்தப் பற்றாக்குறையை நாம் எப்படி சரி செய்யப் போகிறோம்? துண்டு விழுந்து இருக்கிறது; இந்தத் துண்டை சரி செய்ய வேண்டுமென்றால் அதற்குச் சில வழிமுறைகளை நாம் கண்டாக வேண்டும். அதற்கு எனக்குத் தெரிந்தது, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே பின்பற்றக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, 1-3-1978 ஆம் தேதி ஓர் அருமையான கருத்தினை இந்த மாமன்றத்திலே பதிவு செய்திருக்கிறார்கள். "அமைச்சர்கள் ஆன பின்னால், பொதுவாக அமைச்சர்கள் சுற்றுப்பயணம் என்று அடிக்கடி நான் மக்களைச் சந்திக்கிறேன், மக்களைச் சந்திக்கிறேன் என்று ஆங்காங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அமைச்சர்கள் தயவுசெய்து இந்தச்



சுற்றுப்பயணத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும்" என்கிற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதே நாளில் இன்னொரு கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். "பொதுத் தேர்தல் வருவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னாலேயே அமைச்சர்கள், அமைச்சரவை தன்னுடைய பதவியை இராஜினாமா செய்து விட வேண்டும். அப்படி இராஜினாமா செய்கிறபோது மூன்று மாதங்களுக்கு அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் மீதியாகிறது, ஜனநாயகம் இங்கே தழைக்கும். தேர்தல் நடக்கிற காலத்திலே அமைச்சரவை ஆட்சிப் பீடத்திலே இருக்குமேயானால், ஜனநாயகம் தழைப்பதற்கு வழியில்லை, ஜனநாயகம் தடம் புரண்டு போய்க் கொண்டிருக்கிறது என்றும் இப்போது, நெல்லிக்குப்பம், அறந்தாங்கி, திருச்சி போன்ற இடங்களிலே நடந்த தேர்தலிலேகூட அதிகார துஷ்பிரயோகம், கள்ள ஓட்டு என்றெல்லாம் சொல்லப்பட்ட அந்தக் கூற்றுக்குக்கூட இடம் கொடுக்காமல் ஒரு நல்ல தேர்தலை நியாயமான தேர்தலை, நடத்த வேண்டுமென்று சொன்னால், மூன்று மாதங்களுக்கு முன்னாலேயே அமைச்சர்கள் இராஜினாமா செய்ய வேண்டும் என்கிற கருத்தை சொல்லியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. சி. ஞானசேகரன்:** அந்தக் கருத்தையும் நான் இந்த இடத்திலே வலியுறுத்தி, அமைச்சர்கள் சில பேர் மாவட்டத்திற்கு மாவட்டம் அப்போதைக்கப்போது வந்து விடுகிறார்கள். சில பேர் அங்கேயே 'camp' என்று இருந்து விடுகிறார்கள். இங்கே அமைச்சர்களைப் பார்க்க வேண்டுமென்று சொன்னால், அமைச்சர்கள் கிடைப்பதில்லை. அதேபோல முதல்வர் அவர்கள் உழவர் சந்தையைத் திறக்க வருகிறபோது கார்களுடைய பவனி இப்போது அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. சிக்கனத்தை எப்படியெல்லாம் கடைப்பிடித்து நாம் இந்தத் துண்டு பட்ஜெட்டை சரிக்கட்ட முடியுமோ, அந்தவகையிலே சரிக்கட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து குடிநீர்ப் பிரச்சினை. நம்முடைய தமிழகத்திலே குடிநீர்ப் பிரச்சினை இன்று கோரதாண்டவம் ஆடிக் கொண்டிருக்கிறது, கொடி கட்டிப் பறந்து கொண்டிருக்கிறது. சென்னையை எடுத்துக்கொண்டாலும்கூட பல நாட்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் கிடைக்கிறது. வேலூரை எடுத்துகொண்டால் 5 நாளைக்கு ஒரு முறை தான் தண்ணீர் கிடைக்கிறது. அல்லாபுரம் பேரூராட்சி என்ற எங்களுடைய பகுதியை எடுத்துக்கொண்டால் 7 நாளைக்கு ஒருமுறை தண்ணீர். குடிநீருக்காக நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இந்த இடத்திலே வாதாடி 3 ஆண்டுகளுக்கு முன்பே அரசாணை வெளியிடப்பட்டது.

குடிநீர்த் திட்டம் வேலூருக்காக உருவாக்கப்பட்டது. அரசாணை பிறப்பிக்கப்பட்டும், அதற்கான நிதியொதுக்கீடு செய்யப்பட்டும்கூட, வேலூர் குடிநீர்த் திட்டத்தை அவர்கள் நிறைவேற்றாமல் போனார்கள்.

அதேபோல சென்னை கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தை எடுத்துக் கொள்வீர்களென்றால், அது கிருஷ்ணன் என்ற பெயரை வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தாலோ என்னவோ, ஒரு மாயக் கண்ணனைப்போல ஆகிவிட்டது. நீங்கள் வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலே 1996 ஆம் ஆண்டு இறுதிக்குள்ளாகவே 3 T.M.C. தண்ணீர் இங்கே வந்து விடும் என்று சொன்னீர்கள். பிறகு படிப்படியாக 1999-2000-க்குள்ளே 12 T.M.C. தண்ணீர் வந்து விடும் என்று பல்வேறு காலகட்டங்களிலே வந்த நிதிநிலை அறிக்கைகளிலே சொல்லி வந்தீர்கள். ஆனால் இன்று அங்கே கால்வாய் உடைபட்டுப்போனது என்று நிதிநிலை அறிக்கையில் சொல்கிறீர்கள்; பிறகு, ஏற்கெனவே இந்தப் பகுதியில் இருக்கிற ஏரிகள் எல்லாம் நிறைந்துவிட்டன, ஆகவே நீர் வரத்து அதிகமாகிவிட்டது, நாங்களே நிறுத்தி விட்டோம் என்று சொல்கிறீர்கள். அடுத்த அறிக்கையில், "உடைபட்டு இருக்கிறது, கால்வாய்" என்று சொல்கிறீர்கள். கிருஷ்ணா நதி நீரைப் பொறுத்தவரையில், பல கோடி ரூபாயை ஏப்பம் விட்டு இருக்கக்கூடிய அந்த திட்டம் இன்று முழுமையாக நம்முடைய சென்னை வாசிகளுக்கு தண்ணீரைக் கொடுத்து இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதற்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4-3-1966-லே இதே மன்றத்திலே பேசியிருக்கிற பேச்சைச் சொல்ல விரும்புகிறேன். "உணவு இல்லாமல்கூட வாழ்க்கை வாழ்ந்து விடலாம். ஆனால் தண்ணீராவது தாகத்திற்குக் கிடைக்காதா என்று பார்த்தால் இந்த தர்மவான்கள் ஆட்சியிலே தண்ணீர்கூடக் கிடைக்கவில்லை" என்று 1966-லே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருந்து பேசியிருக்கிறார்கள். அதையே நான் சொல்கிறேன். இந்த தர்மவான்கள் ஆட்சியிலே தண்ணீர்கூடக் கிடைக்கவில்லை என்று சொல்லக்கூடிய அளவிற்குதான் இன்று இருக்கிறது. தண்ணீர் கிடைப்பதற்கு அப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓர் அருமையான கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். 200 மைலுக்கு அப்பால் இருக்கக்கூடிய காவிரி ஆற்றிலிருந்து சென்னைக்குத் தண்ணீரைக் கொண்டுவர வேண்டும் என்ற ஒரு திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நான்கு முறை முதலமைச்சராக வந்த பின்னாலும்கூட ஏனோ அவர்கள் காவிரியிலிருந்து தண்ணீரை சென்னைக்குக் கொண்டுவரவில்லை. கொண்டு வந்திருந்தால் நாம் எதிர்பார்த்த தண்ணீர் இங்கே வந்திருக்குமோ என்னவோ தெரியவில்லை. தெரியாமல் கிருஷ்ணாவிலே போய் மாட்டிக் கொண்டதனுடைய விளைவு



இப்போது அடிக்கடி மாயமாகப் போய் தண்ணீரே வராமல் இருந்து கொண்டிருக்கிறது.

*முற்பகல் 11-05*

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தெரியாமல் கிருஷ்ணாவில் போய் மாட்டிக்கொண்டோம் என்கிறார். நாங்கள் மாட்டிக்கொள்ளவில்லை. இந்திரா காந்திதான் அந்தக் காலத்திலே எங்களை மாட்ட வைத்தார்கள். எங்களை மாத்திரம் அல்ல, எம்.ஜி.ஆர். அவர்களையும் சேர்த்து மாட்ட வைத்தது இந்திரா காந்தி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இந்த மாதிரி ஏதாவது சொல்லி மாட்டிக்கொள்ளக் கூடாது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** துணைத் தலைவர் அவர்களே, மத்தியில் இருக்கக்கூடிய மாண்புமிகு பிரதமர் அவர்கள் சொன்னாலும்கூட— ஏனென்றால், மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு எங்கே காவிரி இருக்கிறது, எங்கே கிருஷ்ணா இருக்கிறது, தண்ணீர் எப்படி வரும் என்றெல்லாம் தெரியாது— மாண்புமிகு முதல்வராக வரக்கூடியவர்கள் எது இந்தப பகுதிக்கு உகந்ததோ அதைத்தான் அன்று நீங்கள் ஒத்துக்கொண்டிருக்க வேண்டுமேயொழிய பிரதமர் சொன்னார் என்பதற்காக நீங்கள் எதையும் கண்மூடித்தனமாக ஒத்துக்கொண்டிருக்கக்கூடாது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் திருமதி இந்திரா காந்தி அவர்களால் அந்நாளைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் அறிவிக்கப்பட்டது. சென்னை கடற்கரைக் கூட்டத்தில், 1976 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைத்துவிட்டு, அவர்கள் அறிவித்த திட்டம் அது. அதற்குப் பிறகு இந்திரா காந்தி அவர்களுடைய முன்னிலையிலே என்.டி. ராமாராவ், எம்.ஜி.ஆர். ஆகிய முதலமைச்சர்கள் எல்லாம் ஒன்றாக இருந்து இத்திட்டத்தினுடைய தொடக்க விழா அன்றைக்கு நடைபெற்றது. அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. சம்பந்தம் எல்லாம் அதைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதில்தான்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்திரா காந்தி அவர்கள் சொன்ன திட்டம் என்று சொன்னார். இந்திரா காந்தி சொன்ன திட்டத்திலே தவறு இல்லை. அதைச் செயல்படுத்தக்கூடிய விதத்திலேதான் தவறு. இப்போது எங்களுக்குத் தேவை தண்ணீர். ஆனால் நீங்கள்

இவ்வளவு கோடி ரூபாயை அள்ளித் தந்துவிட்டு இன்னும்கூட தண்ணீர் உருப்படியாக சென்னைக்கு வந்து சேரவில்லை. இன்னும் சென்னைவாசிகள் தண்ணீருக்காகத் திண்டாடுகிறார்கள் என்று சொன்னால், இதிலே நாம் எங்கே போய் முட்டிக்கொள்வது என்றுதான் எங்களுக்குத் தெரியவில்லை. ஆகவேதான் சொல்கிறேன். இப்போது காவிரி ஆற்றுத் தண்ணீரை வேலூருக்குக் கொடுப்பதற்காக 320 கோடி ரூபாயில் ஒரு திட்டத்தை வகுத்துக்கொடுத்திருக்கிறோம். திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர், நாட்றாம்பள்ளி, வேலூர் போன்ற பகுதிகளில் உள்ள நாங்கள் தண்ணீர் குடிக்க வேண்டுமென்று சொன்னால் காவிரி தண்ணீர்தான் வர வேண்டும். குறைந்தபட்சம் அந்தத் திட்டத்தையாவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அடுத்து நீர்ப்பாசனம். நீர்ப்பாசனத்தைப் பொறுத்தஅளவில் பல திட்டங்கள் பல ஆண்டு காலமாகச் சொல்லப்படுகிறதேயொழிய இன்னும் முழுமையாக நடைபெறவில்லை. 9 திட்டங்கள் என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டு வந்துகொண்டிருக்கிறோம். அடவிநயினார்கோவில், கொடுமுடியாறு, நம்பியாறு, வடக்குப் பச்சையாறு, கிருதமால் அணைக்கட்டு, மோர்தானா, இராஜாதோப்பு, பொய்கையாறு, சோத்துப்பாறை என்று 1989 ஆம் ஆண்டிலிருந்து சொல்லப்பட்டு, தொடர்ந்து உலக வங்கி உதவியோடு இதைச் செய்து முடித்துவிடுகிறோம், செய்து முடித்துவிடுகிறோம், முடித்துவிடுகிறோம் என்கிறீர்கள். இவை Time-bound programme ஆக இருக்க வேண்டும்.

1996 ஆம் ஆண்டிலிருந்து இப்போது 2000 ஆண்டுக்கு வந்துவிட்டோம். ஆனால் நீங்கள் எதையும் முடித்தபாடில்லை. இந்தத் திட்டங்கள் ஏதோ சாத்தனூர் அணை போலவோ அல்லது கிருஷ்ணகிரி அணை போலவோ பெரிய பெரிய அணைகள் அல்ல. இந்த அணைகளைப் பொறுத்தளவில் நீங்கள் உரிய வேளையில் நடவடிக்கை எடுக்காததன் விளைவு நீர்ப்பாசனம் ஆங்காங்கே பாதிக்கப்பட்டிருக்கிறது என்று நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு பட்ஜெட்டிலேயும் இதையே சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.

அடுத்து மின் சக்தி. மின்சக்தியைப் பொறுத்தளவில் நான் சொல்வது மின் வெட்டு பற்றி அறிவிக்கப்படாத மின்வெட்டு. அறிவித்த மின் வெட்டு என்று இரண்டு வகையான மின்வெட்டுகளால் தமிழ்நாட்டு மக்கள் இன்று மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். மின் வெட்டு இல்லாத ஒரு காலகட்டத்தை உருவாக்க வேண்டுமென்று நாம் போராடிக்கொண்டிருக்கிற நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களும்,



அமைச்சர் அவர்களும் கொஞ்சம் கடுமையாக நடவடிக்கை எடுத்து மின் பற்றாக்குறையை உடனடியாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கைக்கு ஆவன செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால் தற்போது நிறைய உயர் தொழில்நுட்பப் பூங்கா, தொழிற் பூங்கா, Chennai Garment Park, மலர் பூங்கா, பெட்ரோலியத் தொழிற்சாலை, உயிரியல் பூங்கா, TIDEL—மென்பொருள் பூங்கா என்று நிறைய பூங்காக்களைக் கொண்டு வருகிறோம். இவற்றிற்கெல்லாம் நமக்கு current தேவைப்படுகிறது. ஆகவே இதற்கான current -ஐப் பெற வேண்டும். ஜெயங்கொண்டம் திட்டத்தைப் பற்றி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நிதிநிலை அறிக்கையிலே சொன்னீர்கள். ஏற்கெனவே உங்களுக்கு அனுமதியும் கொடுத்தாகிவிட்டது. இன்னும் P.P.A. கூடப் போட்டபாடில்லை. எத்தனையோ திட்டங்கள் சொல்லப்படுகின்றனவேயொழிய நடைபெறவில்லை. முதலில் 16 திட்டங்கள் என்று சொன்னார்கள். படிப்படியாகக் குறைந்து இப்போது 3 திட்டம் என்றும் 2 திட்டம் என்றும் வந்திருக்கிறது. ஏற்கெனவே 16 திட்டங்கள் என்று சொல்லி, அந்த 16 திட்டங்கள் வாயிலாக மின்சக்தி 10,876 மெகாவாட் வரப் போவதாகச் சொன்னீர்கள். இன்று போதிய அளவுக்கு மின்சாரமே இல்லாமல் நாம் திண்டாடிக்கொண்டிருக்கிற நேரத்திலே நான வலியுறுத்துவதெல்லாம் நீங்கள் பல பார்க்குகளை உருவாக்கி இருக்கிறீர்கள். ஆனால் அவற்றிற்கு மின்சாரம் இல்லையென்று கேள்விப்படுகிற போதுதான் நமக்கு shock அடிக்கிறது. ஆகவே உடனடியாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் *11-10*

அடுத்து விவசாயப் பிரச்சினை. விவசாயிகளுடைய பிரச்சினையிலே விவசாயிகளை அழைத்துப் பேசியதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே சொன்னார்கள். நன்றி. ஆனால், விவசாயிகளை அழைத்துப் பேசுகிறபோது, கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் என்று பல ஆண்டு காலமாக அவர்கள் கேட்டு கொண்டிருக்கிறார்களே, அதையும் வலியுறுத்தினார்கள்.

அடுத்து நெல் கொள்முதல். தஞ்சாவூர், திருவாரூர், நாகை போன்ற மாவட்டங்களில் இருக்கக்கூடிய நெல் விவசாயிகள் இப்போது முழுமையாக அவர்கள் பயிர் செய்தாலும்கூட, ஒரு ஏக்கருக்கு ஆண்டுக்கு 2 ஆயிரம் ரூபாய்கூட வருமானம் பெற முடியாத ஒரு அவலமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் தேர்தல் வாக்குறுதியைக் கொடுத்ததோடு, அவையிலேகூட "5 ஆண்டுகள் எங்களை ஆள விடுங்கள்,

தருகிறோம்'' என்றுகூட முதல்வர் சொன்னார்கள். ஆனால் இதுதான் கடைசி பட்ஜெட். இந்த பட்ஜெட்டிலேயாவது ஆயிரம் ரூபாய் டன்னுக்கு அறிவிக்காதது விவசாயிகளுடைய வயிற்றில் அடிப்பதுபோல் இருக்கிறது. ஆகவே உடனடியாக நெல் கொள்முதல் விலையில் 200 ரூபாய் கூட்டுங்கள் குவிண்டாலுக்கு. கரும்புக்கு ஆயிரம் ரூபாய் டன்னுக்கு என நீங்கள் கூட்டுங்கள்.

விவசாயிகளுடைய கடன்களை தயவுசெய்து நீங்கள் இரத்து செய்யுங்கள். விவசாயிகள் பலபேர் இப்போது தூக்கு மாட்டிக்கொண்டு செத்துக்கொண்டிருக்கிறார்கள். விஷம் குடித்து செத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு கடனால் இப்போது மிகவும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். வட்டி கட்ட முடியவில்லை; அசலைக் கட்ட முடியவில்லை. ஆகவே எப்படியாவது முதல்வர் அவர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டி விவசாயிகளுடைய கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மன்னிக்கவும். துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய கருத்தரங்கத்தை நடத்தியது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்தரங்கத்தில் கடைசியாகப் பேசிய வீரய்யன் என்கிற C.P.M. கட்சியினுடைய விவசாயச் சங்கத் தலைவர் வைத்த கோரிக்கையே அபராத வட்டியையாவது நீங்கள் இரத்து செய்யுங்கள் என்பதுதான். அது record ஆகியிருக்கிறது. பழனிசாமி தலையை ஆட்டுகிறார், இல்லையென்று. ஒலிபெருக்கியிலே பேசி record ஆகியிருக்கிறது. எழுத்திலே record ஆகியிருக்கிறது. C.P.M. தலைவர் வீரய்யன் அவர்கள் இதைத்தான் கேட்டார். அதை நிறைவேற்றி இருக்கிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும், அதிக நேரம் ஆகிவிட்டது. திரு. மீ.அ. வைதியலிங்கம். (குறுக்கீடு) 20 நிமிடங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** தயவுசெய்து ஒரு நிமிடம் கொடுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** Point of order..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணை நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்துப் பேசியபோது, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் குறுக்கிட்டுப் பேசிய எதுவும் அவைக் குறிப்பில் இடம் பெறாது. திரு. மீ.அ. வைதியலிங்கம்.



**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய 2000-2001-ஆம் ஆண்டின்.....

**திரு. சி. ஞானசேகரன்:** பிரதான எதிர்க்கட்சிக்கு 10 நிமிடங்கள் கொடுத்தால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதத்தைத் தொடங்கி வைத்ததால் 20 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** Initiate பண்ணியவர்களுக்கு 10 நிமிடங்கள், 20 நிமிடங்கள் கொடுத்தால் போதாது. இவ்வளவு பெரிய பட்ஜெட் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கவில்லையென்றால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 20 நிமிடங்கள் கொடுத்து இருக்கிறேன் (குறுக்கீடு) இவ்வளவு பெரிய பட்ஜெட் என்று நீங்களே சொல்லிவிட்டீர்கள். அப்படியென்றால் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூடிய தொழிற்சாலைகளைத் திறப்போம் என்று வாக்குறுதி அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் - எங்களுடைய மாவட்டத்தில் இருக்கக்கூடிய அரியூர் கூட்டுறவு நூற்பாலையை—மூடி 2½ ஆண்டுகள் ஆகிவிட்டன— திறப்பதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதது மிகவும் வருத்தமாக இருக்கிறது. ஆகவே மூடிய ஆலைகளைத் திறக்கின்ற வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். தோல் தொழிற்சாலைகள் எங்களுடைய மாவட்டத்திலே நிறைய மூடப்பட்டிருக்கின்றன. அதைப்போல, கோயம்புத்தூர் பகுதியிலே spinning mills நிறைய மூடப்பட்டிருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளையெல்லாம் திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Transparency என்று டெண்டர்களிலே சொல்லப்பட்டாலும் சிண்டிகேட்டை அமைத்துக்கொண்டு ஆளும்கட்சிக்காரர்கள் பல பேர் அங்கே சில முறைகேடுகளைச் செய்வதை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக்கொண்டு வருகிறேன். அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவுச் சங்கத்தில் நிறைய ஊழல்கள் நடக்கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது பல இடங்களிலே ஏற்கெனவே கொடுத்த Cash Certificate-ஐத் திருப்பிக் கொடுத்தாலும்கூட பணம் கொடுக்காமல் ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சங்கங்களையெல்லாம் கண்டெடுத்து நீங்கள் அவற்றைக் கலைத்துவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சத்துணவுப் பணியாளர்கள். நீங்கள் அவர்களை நிரந்தரம் செய்வதாக 1989 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் சொன்னீர்கள். அதையும் நீங்கள் தயவுசெய்து பரிசீலனை செய்து அவர்களையெல்லாம் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையிலேகூட ஒரு குழுவைப் போட்டீர்கள். தற்போது Review Petition போடுவதாகச் சொன்னீர்கள். போட்டீர்களா என்று தெரியவில்லை. ஆனால் அந்த அறிக்கையிலே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்துக்களே நம்முடைய I.A.S. Officer சொன்ன கருத்து மட்டும்தான் மேலோங்கி நிற்கிறது. இதிலேகூட Review Petitions-போடுவதைவிட அரசாங்கமே அவர்களுக்கு எப்படி....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரைக் குறைத்து மதிப்பிடவில்லை நாங்கள். அவர்கள் தந்திருக்கின்ற கருத்துக்கள் சிலாக்கியமான கருத்துக்கள்தான். அவர்கள் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அதிலே நீதிமன்றத்திற்குப் புறம்பானதாக ஆகிவிடும் என்ற ஒரே ஒரு குறையைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஞானசேகரன் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். நாங்கள் அதை நிறைவேற்றுகிறோம்; எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்த அதை நிறைவேற்றுகிறோம்; அதனால் ஏற்படக்கூடிய நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்கு நாங்கள் ஆளாகும்போது ஞானசேகரன் அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறாரா?

முற்பகல் 11-15

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டில் அட்வகேட் ஜெனரலாக இருந்தவர்கள், நீதிபதிகளாக இருந்தவர்கள், மிகப் பெரிய உயர்நீதிமன்ற உச்சநீதிமன்றத்திற்கெல்லாம் நீதிபதிகளாக இருந்தவர்களையெல்லாம் கலந்து பேசிய பிறகு நாங்கள் ஐந்து பேரும் ஒட்டுமொத்தமாக ஒரே



கருத்தைச் சொல்லி இருக்கிறோம். அதை நீங்கள் நிறைவேற்றுவதன் மூலம், ஏதாவது இந்த அரசுக்கு விளைவுகள் ஏற்படுமானால், அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து, சட்டம்-ஒழுங்கு தமிழகத்தில், (மணியடிக்கப்பெற்றது)...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம். (குறுக்கீடு)...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** Point of order...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** No, no please. நேரம் ஆகிவிட்டது; உட்காருங்கள். திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய 2000-2001 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பினை அளித்தமைக்காக தங்களுக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியினை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

" செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு."

என்பது...(குறுக்கீடு)

**திரு. பி. ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலில், 'முதலமைச்சர் எழுந்து பேசும்போது குறுக்கே எழுந்து நிற்கக்கூடாது என்பது மரபு, அந்த மரபை நீங்கள் கடைப்பிடிக்கமாட்டேன் என்கிறீர்கள்; உட்காருங்கள்' என்று சொல்லி நான் ஏற்கெனவே எச்சரித்தேன்; கேட்கவில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம் :** **

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்பொருள் பற்றி Business Advisory Committee-யிலே அனைவரும் அமர்ந்து பேசி ஒரு முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த முடிவுக்கு மாறாக, அவையிலே வந்து பேசுவது முறையல்ல. எனவே அதைப் பற்றிச் சொன்ன

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

கருத்துக்களையும் அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலமைச்சருடைய வேண்டுகோளுக்கிணங்க அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம். (குறுக்கீடு) திரு. சுந்தரம், நீங்கள் அடிக்கடி இந்த மாதிரி எழுந்து குந்தகம் விளைவித்தீர்கள் என்றால், நன்றாக இருக்காது; உட்காருங்கள்; சபையை நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள்; நீங்கள் உட்காருங்கள். திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு."

என்று அய்யன் திருவள்ளுவர் சுட்டிக்காட்டி இருக்கிறார். "குறை கூறுவோரின் சொற்கள், காது புண்படும்படி இருந்தாலும், அவற்றைப் பொறுமையாகக் கேட்கும் அரசனின் குடை நிழலில் உலகம் தங்கி மகிழும்" என்று வள்ளுவர் குறிப்பிட்டதற்கு ஏற்ப, எதிர்க்கட்சியினர் ஆளுநர் உரை மீது நடைபெற்ற விவாதத்தில் காது புண்படும்படி கூறிய வார்த்தைகளை எல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனதிலே இருத்திக்கொண்டு, 2000 ஆண்டில் இந்தியாவே வியந்து பாராட்டும், வரியில்லாத நிதிநிலை அறிக்கையினை அளித்துள்ளதால் தமிழக மக்கள் நன்றியுணர்வோடு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறார்கள். பிறந்த குழந்தை முதல் தள்ளாடும் முதியவர்வரை எல்லா பருவத்தினரும் பயன்பெற, வளமான வாழ்க்கைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் வசதி செய்யப்பட்டுள்ளது. மலைத் தேனில் தோய்த்த வேர்ப் பலாச் சுளைகளில் எதைச் சாப்பிடுவது, எதைச் சாப்பிடாமல் விடுவது என்பதைப் போல, பட்ஜெட் உரையில் இருக்கின்ற 53 பக்கங்களிலும் சிறப்பு அம்சங்கள் உள்ளன. சிலவற்றை நான் கோடிட்டுக்காட்ட விழைகிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. அ.லெ. சுப்பிரமணியன் தலைமை)*

உள்ளாட்சி அமைப்புகளுக்கு 1036 கோடி ஒதுக்கி, கேளிக்கை வரி 78 கோடி ரூபாயையும் சேர்த்து திட்ட ஒதுக்கீடுகளோடு 2,401 கோடி ரூபாயினை ஒதுக்கி இருக்கிறார்கள். இது ஜனநாயகத்தினுடைய ஆணிவேராகத் திகழ்கிற உள்ளாட்சி அமைப்புகள் சீரிய முறையிலே நடைபெறுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கின்றது. அதோடு, Cable T.V.



வரியைக்கூட அரசு விதித்த வரிகளுக்கு மிகாமல், உள்ளாட்சிகளே விதித்துக்கொள்ளலாம் என்றும் அரசு சலுகை வழங்கி இருக்கிறது. இந்தச் சலுகைகளை வழங்கியதோடல்லாமல் மாவட்டத் திட்டக் குழுவினுடைய தலைவராக மாவட்ட ஆட்சியர் இருப்பார் என்பதனை மாற்றி, இனிமேல் மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர் அந்தத் திட்டக் குழுவிற்குத் தலைவராக இருப்பார் என்று முதலமைச்சர் அறிவித்து இருப்பது ஜனநாயகத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கிற அதிகார வரம்பு என்பதையும் நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து பட்ஜெட்டிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிராமச் சாலைகளுக்காக நடப்பு ஆண்டிற்கும் வரும் ஆண்டிற்கும் 900 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறார்கள். தார் சாலைகளைப் பொறுத்த அளவில் 2 ஆண்டுகளுக்கான குறியீடு 11,600 கிலோ மீட்டர்; சிமெண்ட் சாலைகளுக்கான குறியீடு 5,000 கிலோ மீட்டர். ஆனால் நடைமுறையில் நடந்து கொண்டிருப்பது தார் சாலைகள் 3,600 கிலோ மீட்டர் மற்றும் சிமெண்ட் சாலைகள் 2,800 கிலோ மீட்டர் ஆகும். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வதெல்லாம் — நீங்கள் கொண்டு வருகிற திட்டங்கள் எல்லாம் தொலைநோக்குப் பார்வையோடு, அடுத்த தேர்தலை எண்ணிடாமல், அடுத்த தலைமுறையை எண்ணிக் கொண்டுவருகிற திட்டங்கள் — இந்த சாலைகள் அமைப்பதிலேகூட, சிமெண்ட் சாலைகளை நீங்கள் அதிகப்படுத்தி அமைப்பீர்களேயானால், ஆண்டுதோறும் சாலைகளைச் சீரமைக்கிற பணியில் தொய்வு ஏற்படாமல், ஒரு தலைமுறைக்கு வருகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தால், தார் சாலைகளினுடைய அளவைக் குறைத்து, சிமெண்ட் சாலைகளை அதிகம் அமைத்தால் மிக நன்றாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

அடுத்து கிராமங்களில் இணைப்புச் சாலைகள். 1,000 முதல் 1,500 வரை மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கப்படும் என்பதை எல்லாம் நடைமுறைப்படுத்தி முடித்து, தற்போது 500 முதல் 1,000 வரை மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் அமைக்கப்படும் என்று அறிவித்து, அதுபோன்ற 140 கிராமங்களுக்கு 90 கோடி ரூபாய்ச் செலவிலே இணைப்புச் சாலைகள் அமைப்பதற்காக நிதியொதுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சாலைகளையும்கூட சிமெண்ட் சாலைகளாக அமைத்தால் எதிர்காலத்திலே அரசினுடைய நிதி ஆதாரம் வீணாகாமல் இருப்பதற்கான

வாய்ப்பிருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து அதிமுக்கியத்துவம் வாய்ந்தது. தமிழ்நாட்டிலே பல்லாண்டு காலமாக பட்டா வழங்குவதை மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் எங்கள் பகுதியிலே C.M.D.A. பகுதியிலே வாழ்கிற மக்களுக்கு சாதாரணமாகவே பட்டா அளிப்பதில்லை. ஆனால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 20 ஆண்டு காலம் என்பதைத் தளர்த்தி 10 ஆண்டு காலம் என அறிவித்து உள்ளார்கள். பட்டா வழங்குவதில் `Classification' பார்க்காமல், எந்த வகையைச் சேர்ந்த இடம் என்று பார்க்காமல், 10 ஆண்டுகளாக வாழ்கிற ஏழையெளிய மக்களுக்கு பட்டா வழங்குவதற்கான வழிவகைகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சில இடங்களில் ஏற்கெனவே பட்டா அளிப்பதற்கு அரசு விலை நிர்ணயம் செய்திருக்கிறது. அரசு நிர்ணயம் செய்த விலையைச் செலுத்தத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அந்தத் தொகைக்கு வட்டி, வட்டிக்கு வட்டி என்று அதிகப்படியான வட்டியைக் கேட்கிற காரணத்தால், அந்த வட்டியைத் தள்ளுபடி செய்து கொடுத்தால் நாங்கள் பணம் செலுத்தத் தயாராக இருக்கிறோம் என்று அந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள். அந்த வட்டியைத் தள்ளுபடி செய்து, பட்டா வழங்கினால் அரசிற்கும் கோடிக்கணக்கான ரூபாய் நிதி கிடைக்கும், மக்களுக்கும் பட்டா பெற்ற பெருமை கிடைக்கும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசுகிறபோது விவசாயிகள் தூக்கிலிட்டுக்கொண்டு சாகிறார்கள் என்று சுட்டிக்காட்டினார்கள். நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். இந்தியா சுதந்திரம் பெற்ற இந்த 51 ஆண்டு காலத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாயிகளுக்கு அறிவித்திருக்கிற சலுகைகளை, இதுவரையில் எந்த ஆட்சியிலும் யாரும் அளித்ததாகத் தெரியவில்லை. யாரும் செய்யாத சாதனைகளை நம்முடைய முதல்வர் அவர்கள் உழவர்களுக்குச் செய்திருக்கிறார்கள். இலவச மின்சாரம் அளித்திருக்கிறார்கள். உழவர் சந்தை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அரசு இடங்களிலே பாசனக் குழாய்களை பதித்தால், அதற்கான பாதைக் கட்டணத்தை இரத்து செய்திருக்கிறார்கள். வட்டியோடு கடனைக் கட்டினால் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். நடப்புக் கடனில் கடனை வட்டியோடு செலுத்தினால், வட்டித் தொகையில் 7 சதவீதத் தொகையை ஊக்கத் தொகையாக அளித்திருக்கிறார்கள்.



குளிர்ப்பதனக் கிடங்குகளை அமைத்துத் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து இருக்கிறார்கள். விவசாயிகளின் கால்நடைகளுக்கு பாதுகாப்புத் திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இவ்வளவும் செய்திருக்கிறபோது, விவசாயிகள் துன்பப்படுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது.

கிராமங்களிலே வாழ்கிற விவசாயிகள் மட்டுமல்ல. மற்றவர்கள், கைவினைஞர்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் செய்கிற பொருட்களை நல்ல விலைக்கு விற்பதற்காக, உழவர் சந்தையைப் போல, விற்பனை மையங்களை அமைத்து, அந்த விற்பனை மையங்களிலே விற்கப்படுகின்ற பொருட்களுக்கு, கிராமப் பொருட்களுக்கு 'பூமாலை' என்ற வணிகச் சின்னத்தைக் கொடுத்து, அந்தக் கிராமத்து மக்களுக்கெல்லாம் வாழ்விற்கு வழிவகை கண்டிருக்கிறார்கள்.

அண்ணா மறுமலர்ச்சி திட்டம். இதுவரையில் 634 கிராமங்களில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல் ஆகிவிட்டது' என்று சொன்னார்கள். எங்கள் தொகுதிகளில் எல்லாம் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது கழுதை வளர்ந்து காண்டாமிருகமாக மாறியிருக்கிறது என்கிற அளவிற்கு மிகப் பெரிய வசதிகளை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் கிராமங்கள் பெற்றிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பள்ளியிலே படிக்கின்ற 15 இலட்சத்து 65 ஆயிரம் மாணவர்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு, அவை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, இந்த ஆண்டிலே பள்ளியிலேயே அளிக்கப்படும் என்பது அந்த 15 இலட்சம் குடும்பங்களின் வயிற்றிலே பால் வார்த்ததற்குச் சமம் ஆகும். எங்கும் அலையாமல் பள்ளியிலேயே பெற்றுக்கொள்கிறார்கள். இதனால் அந்த 15 இலட்சம் குடும்பங்களும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கின்றன. *(மணியடிக்கப்பெற்றது)*

தொகுப்பு வீடுகள். இந்த 4 ஆண்டுகளிலே கட்டியிருக்கிற தொகுப்பு வீடுகளில், கடந்த 2 ஆண்டுகளாக நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வருகிற கிராமங்களில் தொகுப்பு வீடுகள் கட்டுவது இல்லை. பட்டா இருந்தால்தான் கட்ட முடியும் என்றாகிவிட்டது. இப்போது பட்டா தருவதற்கான வாய்ப்புகள் உருவாகி இருக்கின்றன. எனவே இந்த முறையாவது சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும எல்லையில் உள்ள,

ஆளுகையிலே வருகின்ற கிராமங்களிலும் இதைப்போன்ற தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிப் பகுதிகளில், பேரூராட்சிப் பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் வகுப்பதற்கு—ஆலந்தூரிலே அமைத்திருப்பதைப் போல — நமக்கு நாமே திட்டம் போல், பணம் செலுத்த முன்வந்தால் அமைத்துக்கொள்ளலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தாம்பரம் தொகுதியிலே இருக்கிற பம்மல், சிட்லபாக்கம், அனகாபுத்தூர், உள்ளகரம், புழுதிவாக்கம், செம்பாக்கம் போன்ற பகுதிகளில் உள்ளவர்கள் அதற்கான தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள். பணம் செலுத்தத் தயாராக இருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான உத்தரவை இந்த அவையிலே அறிவித்து, ஆய்வு வேலைகளைத் தொடங்குவதற்கான அனுமதி அளிப்பார்களேயானால், எவ்வளவு பணம் செலுத்த வேண்டுமென்று கணக்கு வந்தால், அந்தந்த பேரூராட்சிகளிலே இருக்கிற மக்கள் எல்லாம் பணம் செலுத்துவதற்கு, பங்குத் தொகையைச் செலுத்துவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்ற காரணத்தால், அதையும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11-25

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டில் இன்னும் 50 ஆண்டுகள் கழித்து — இந்தியாவில் இரண்டு மாநிலங்களில், தமிழ்நாட்டிலும் சேர்த்து — மிகப் பெரிய குடிநீர்ப் பஞ்சம் வரும் என்று நெதர்லாந்து மாநாட்டில் சுட்டிக்காட்டியதை எடுத்துக்கொண்டு, எங்கெங்கெல்லாம் மழைநீர் வீணாகப் போகிறதோ அவற்றைத் தடுத்து நிறுத்துவதன் மூலமாகக் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க ஒரு திட்டம் கொண்டு வந்து இருக்கிறார்கள். அண்மையில் இருக்கிற செங்கல்பட்டு கொளவாய் ஏரியில் இருக்கிற நீரைப் பயன்படுத்தினாலும்கூட, அதைப் போல் தாம்பரம் தொகுதியில், வண்டலூர் முதல் வந்து கொண்டிருக்கின்ற நீர் பள்ளிக்கரணை கழிவுநீர் வெளிப்பகுதியிலே தங்கி அங்கே இருக்கிற ஒக்கியம் பகுதியிலே சேர்ந்து கடலுக்குச் செல்கிறது. 1990 ஆம் ஆண்டிலே நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அணையைக் கட்டுவதற்குத் திட்டம் கொண்டு வந்தார்கள். ஆனால் எதிர்பாராதவிதமாக ஆட்சி கலைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் நின்றுவிட்டது. அண்மையில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் ஒரு மனுவைத் தந்திருக்கிறேன். அதிலே வரைபடம்



வரைந்து ஒரு பெரிய கால்வாயினை பள்ளிக்கரணை பகுதியிலேயிருந்து கொண்டு போய் ஒக்கியம் பகுதியிலே விட வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அப்படி தண்ணீரைவிட்டு, அங்கே அணையை அமைப்போமேயானால், அது சென்னையினுடைய குடிநீர்ப் பஞ்சத்தைப் பெருமளவுக்குப் போக்கும் என்ற காரணத்தால் அதையும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

வரும் ஆண்டு 6,000 ஆசிரியர்களையும், 4,000 காவலர்களையும் நியமிக்கவிருப்பதாக அறிவித்தது மட்டுமல்லாமல் — கடந்தகால ஆட்சியிலே மறந்த, எண்ணிப் பார்க்காமல் விட்டுவிட்ட கணினியை, பழைய ஆட்சி அதை முற்றிலுமாக மறந்துவிட்டது — தகவல் தொழில்நுட்பத் துறை மீது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தியதன் விளைவாக தமிழ்நாட்டிலே தகவல் தொழில்நுட்பத் துறையில் வல்லுநர்களாக இருப்பவர்களெல்லாம் தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பம் வளர்ந்திருப்பதைப் பார்த்து வியந்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனுடைய விளைவாக 666 மேல்நிலைப் பள்ளிகளிலே 1999-2000 ஆண்டிலேயே கணினிக் கல்வி அறிவிக்கப்பட்டுவிட்டது. வரும் ஆண்டிலே எல்லாப் பள்ளிகளுக்கும் அந்தக் கல்வி கிடைத்துவிடும் என்று கூறியிருப்பது, தமிழகத்தினுடைய எதிர்காலத் தலைமுறைக்கு மிகப் பெரிய வரப்பிரசாதம் என்றால் அது மிகையாகாது.

அதைப்போலவே வருமுன் காப்போம் திட்டம். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று சொல்வார்கள். 1,634 முகாம்கள் மூலம் இதுவரை 17.4 இலட்சம் மக்கள் பயன்பெற்றாலும், 10,000 முகாம்கள் நிறைவுபெறும்போது ஒரு கோடி மக்கள் பயன்பெறுவார்கள். கிராமத்திலே இருக்கிற, அடித்தளத்திலே இருக்கிற மக்கள், ஏழை விவசாய மக்கள், பாட்டாளி மக்கள், தங்களுடைய பிள்ளைகளை நகரப் பகுதிக்குக் கொண்டுபோய் சோதனை செய்து, அவர்களுடைய உடலுக்கு மருத்துவம் செய்துகொள்வதைவிட, கிராமப் பகுதிகளிலே தலைசிறந்த மருத்துவர்கள், தலைசிறந்த மருந்துகளோடு சென்று இந்த முகாம்களை அமைத்து நடத்துவது கிராமப் பகுதி மக்களுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

அதைப்போலவே மலர்ப் பூங்கா ஒன்று ஓசூரிலே அமைப்பதற்காக 70 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்வேன். பள்ளிக்கரணையிலே 20 கோடி ரூபாய் செலவிலே ஒரு மலர் பதனிடும் தொழிற்சாலை அமைக்கத் திட்டம் தீட்டி, பணிகள்

நடைபெறுகின்றன. அந்தப் பணிகளை விரைவுபடுத்தித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்து மக்கள் எந்த அளவுக்கு அரசுப் பணிகளிலே இடம் பெற்று இருக்கிறார்கள் என்ற சதவீதக் கணக்கைப் பார்ப்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் தலைமையிலும், மற்றும் ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் தலைமையிலும் இரண்டு குழுக்களை அமைத்தார்கள். நான்கூட அந்தக் குழுவிலே அங்கம் பெற்றிருந்தேன். அதிகாரிகள் மத்தியிலே இருந்து அந்தப் புள்ளிவிவரங்களைப் பெறுவதற்கு அந்தக் குழு பட்டபாடு எங்களுக்குத்தான் தெரியும். கடைசியில் பெற்றோம். ஆனால் அவையும் சரியான முறையில் நடைபெற்றதா என்று பார்ப்பதற்காக வெள்ளை அறிக்கை அளிப்பதாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த பட்ஜெட்டில் அறிவித்து இருப்பது, இந்த அரசு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உதவிகள் செய்வது மட்டுமல்ல, அவற்றில் எவ்வளவு வெளிப்படையாக இருக்கிறது, நியாயமாக நடந்து கொள்கிறது என்பதற்கு இது ஒரு அடையாளம் என்பதனை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, 3ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பு வரை பள்ளியில் பயிலும் 60,000 சீர்மரபினர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கு ஆண்டுக்கு 500 ரூபாய் என்ற வகையிலும், அதைப்போல 6 ஆம் வகுப்பு பயிலும் 30,000 மாணவியருக்கு மாதம் 100 ரூபாய் அளிப்பது, மிகப் பிற்படுத்தப்பட்ட சீர்மரபின மக்கள் கல்வி அறிவைப் பெறுவதற்கு மிகவும் சிறந்த முறையில் பயன்படும் என்பதனை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தரிசுநில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு 25 ஆயிரம் ஏக்கர், ரூ. 5.56 கோடியிலே வளப்படுத்தப்பட்டு, இந்த ஆண்டு 75 ஆயிரம் ஏக்கர் மேம்பாடு செய்யப்படும் என்று சுட்டிக்காட்டியதோடு அப்படி மேம்பாடு செய்கிற தரிசு நிலங்களில் மண் அரிப்பைத் தடுக்கவும் கடல் ஓரங்களில் காற்றுத் தடை ஏற்படுத்தவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், முந்திரி விவசாயம் பெரிதும் உதவுகிறது. எனவே முந்திரி பயிரிட நீண்டகால குத்தகைக்கு அளிக்கப்படும் என்று அறிவித்திருப்பது ஏழை எளிய மக்கள், அவர்கள் அன்றாடப் பிழைப்பிற்காக வேலையற்று இருப்பதை நீக்கி, வேலை வாய்ப்பு பெறுவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



முற்பகல் 11-30

அதேபோல நெசவாளர்கள் துயர்துடைப்பு. இங்கேகூட நெசவாளர்களைப் பற்றி யாருமே குறிப்பிடவில்லை என்று சொன்னார்கள் நெசவாளர்கள் 60 வயதுக்குப்பின் இறந்துவிட்டால் 50 ஆயிரம் ரூபாய் அளிப்பதோடு, அவர்கள் மாத ஓய்வூதியத்தை 150 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக உயர்த்தியது சிறப்பானதாகும். அதைவிடச் சிறந்தது, இந்தியாவிலே வேறு யாரும் செய்யாதது, நெசவாளர் வீட்டுப் பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்து தேசிய நாகரிக வடிவமைப்பு தொழில்நுட்பக் கல்வி நிலையத்தில், — National Institute of Fashion Technology— அதுவும் தாம்பரம் தொகுதியில்தான் தரமணியிலே அமைந்து, இப்போது கட்டடம் கட்டப்பட்டுக் கொண்டு வருகிறது. அங்கே பயிற்சி பெற்று சான்று பெறுகின்ற அளவுக்கு பயிற்சி அளிப்பதற்காக நெசவாளர் பிள்ளைகளைத் தேர்ந்தெடுப்பது குறித்து அறிவிக்கப்பட்டிருப்பது நெசவாளர் வாழ்க்கையிலே பெரும் முன்னேற்றத்தைக் கொண்டுவரும் என்றால் அது மிகையாகாது. (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

அதுபோலவே அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியம், தையல்காரர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள், வாடகை ஊர்தி ஓட்டுநர்கள், தனியார் கார் ஓட்டுநர்கள், அத்தனை பேருக்கும் தனித்தனியாக நல வாரியம் அமைக்கவிருப்பது தொழிலாளர் மத்தியிலே மிகப் பெரிய வளர்ச்சியைத் தரும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை என்பது, நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியதைப்போல, இந்த சமுதாயத்திலே இருக்கின்ற சிறு குழந்தைகள் முதல் முதியோர்வரை மட்டுமல்ல, எந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் பயன்பெறவில்லை என்று சொல்ல முடியாத அளவுக்கு, விவசாயிகள், தொழிலாளர்கள், மீன்பிடிப்பவர்கள், பாட்டாளி மக்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், அத்தனை பேரையும் உள்ளடக்கிய மிகச் சிறந்த பட்ஜெட்டாக இருக்கின்ற காரணத்தால் இதை இந்தியாவில் இருக்கின்ற அறிவார்ந்த அரசியல்வாதிகள் பாராட்டுகிறார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்கள் எல்லாம் ஏதுமில்லை என்று சுட்டிக்காட்டிக்கொண்டே இருக்கிறார்கள். எனவேதான் நான் ஆரம்பத்திலேயே சொல்லிக்கொண்டேன். சொல்லப்படுபவை செவி புண்படும் அளவுக்கு இருந்தாலும்கூட, பொறுமையாகக் கேட்டுக்கொள்கிற முதலமைச்சர் இருக்கின்ற காரணத்தினாலேதான், மிருக பலத்தோடு ஆளுங்கட்சி இருக்கின்றபோதுகூட, எதிர்க்கட்சியினருக்கு பேசுகின்ற வாய்ப்பை அதிகம் தந்துகொண்டிருக்கின்ற முதலமைச்சர் இருக்கின்ற

காரணத்தால்தான் இதைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்து இந்த மிகச் சிறந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 13-வது தடவையாக தாக்கல் செய்யப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை நான் கூற விழைகிறேன்.

குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில், விவசாயத்திற்கான, வேளாண்மைத் தொழிலுக்கான உயர்மட்டக் குழு அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருப்பதும், வரும் நிதியாண்டில் கோலப்பன் குழுவின் பரிந்துரைக்கேற்ப விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்படும் என்று குறிப்பிட்டிருப்பதும், பழங்குடியினர் நல வாரியம் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருப்பதும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர்களுக்கான இட ஒதுக்கீடு குறித்து, அதற்கென அமைக்கப்பட்ட குழுக்கள் ஆய்வு செய்திருக்கிற விஷயங்கள் குறித்து வெள்ளை அறிக்கை விரைவிலே அவையிலே சமர்ப்பிக்கப்படும் என்று சொல்லியிருப்பதும், இப்படிப்பட்ட புதிய நல்ல விஷயங்களை கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அதோடு மட்டுமல்லாமல், விரைந்து இதற்குரிய குழுக்களை அமைத்து, காலத்தோடு எதிர்பார்க்கக்கூடிய விவசாயிகளை பாதுகாப்பதிலேயும், மிக நீண்ட காலமாக இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகின்ற மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்திலேயும் செயல்படுத்த வேண்டுமென்றும் நான் பணிவோடு வேண்டிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் பிரிவைச் சார்ந்திருக்கக்கூடியவர்களுக்கும் இது ஒரு நல்ல வரப்பிரசாதமாக அமையும் என்று நாங்கள் கருதுகிறோம். அதோடு இன்னும் கிராமப்புறங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏழை எளிய, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் படிப்பதற்கு உதவித் தொகையாக 5 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற மாணவிகளுக்கு ஓராண்டுக்கு 500 ரூபாயும், 6 ஆம் வகுப்பு படித்தால் மாதம் ரூ. 100 ஊக்கத்தொகை அளிக்கப்படும் என்றும் அறிவித்திருப்பது வரவேற்புக்குரியதாகும். இதிலே மாண்புமிகு



முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவருகிறேன். இரண்டு கிலோமீட்டர் தூரத்திற்கு அப்பால் இருந்து வந்தால்தான் இந்த மாணவியர்கள் பயன்பெறுவார்கள் என்ற நிலை இன்றையதினத்திலே இருந்துகொண்டிருக்கிற காரணத்தால், பல மாணவர்கள் மனு செய்தும் இதில் பயன்பெறாமல் இருக்கக்கூடிய நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே இரண்டு கிலோமீட்டர் தூரம் என்பதை நீங்கள் எடுத்துவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இல்லையென்று சொன்னால், எந்தவொரு மாணவியரும் இந்தத் திட்டத்திலே பயன்பெற முடியாது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இன்றையதினத்திலே இருந்துகொண்டிருக்கிறது.

முற்பகல் 11-35

அதேபோன்று புறம்போக்கு நிலத்திலே 20 ஆண்டு காலத்திற்குக் குடியிருந்தால், அவர்களுக்கு மனைப் பட்டா வழங்கப்படும் என்று சொல்லி, பிறகு அதைப் பத்தாண்டுகளாகக் குறைத்திருப்பது என்பது வரவேற்க வேண்டிய அம்சம். ஏனென்றால், இது நீண்டகாலமாக இருக்கும் பிரச்சினை. இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருவது தனியார் இடத்திலே நீண்டகாலமாகக் குடியிருப்பவர்களும், இதிலே இடம்பெறும் வகையில் அவர்களையும் இதிலே சேர்த்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் நூற்றுக்கணக்கான பண்ணைத் தோப்புகளிலே குடியிருப்பவர்களுக்குப் பட்டா கொடுக்க முடியவில்லை. அரசாங்கம் பட்டா கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அரசாங்கப் புறம்போக்கு நிலத்திலே குடியிருப்பவர்களுக்கு மட்டும் கொடுக்கலாம் என்று சொல்லியிருப்பதைப் பார்க்கும்போது, அநேகமாக 70 சதவிகிதம் நிறைவேற்றப்படுகிற ஒரு திட்டமாகத்தான் இது இருக்கும். இதேபோல் தமிழ்நாட்டில் நீண்டகாலமாக அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்களில் குடியிருப்பவர்களையும் இதிலே இணைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து ,6,000 ஆசிரியர்கள், 4,000 சீருடைப் பணியாளர்கள், காவலர்கள் வேலையிலே அமர்த்திக்கொள்வோம் என்று சொல்லியிருப்பது வரவேற்க வேண்டிய ஒன்று. ஆனால் இது எந்த வகை ஆசிரியர்கள் என்பது சொல்லப்படவில்லை. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களா, நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களா, இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களா அல்லது பட்டதாரி ஆசிரியர்களை அமர்த்திக்கொள்ளப் போகிறோமா என்பதைப்பற்றி எந்தவொரு விளக்கமும் இல்லாமல் இருக்கிறது. பட்டப்படிப்பு

படித்திருக்கக்கூடிய ஆசிரியர்களும்கூட, பல ஆண்டுகாலமாக, வேலையில்லாமல் இருக்கிறார்கள். தங்களுடைய வயது வரம்பை எட்டக்கூடிய அளவிற்கு உள்ள அவர்கள் இப்போது எதிர்பார்ப்போடு இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் குறித்தும் பரிசீலித்து, பட்டதாரி ஆசிரியர்களையும் வேலையில் அமர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு, தனியார்களுக்கு ஊக்கம் அளிக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் தொழிற்சாலைகளை தமிழ்நாட்டிலே அமைப்பதற்கு தனியார்களுக்கு முன்னுரிமை கொடுத்துவரும் அதேநேரத்தில் மூடியிருக்கின்ற ஆலைகளைத் திறப்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே எந்தவொரு வரியையும் காண முடியவில்லை. ஆகவே நீண்டகாலமாக, பல ஆயிரக்கணக்கான பஞ்சாலைத் தொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கையில், பல்வேறு சிரமங்களிலே இருக்கிறார்கள். "ஆலையிலே வேலைசெய்ய வேண்டியதில்லை. எனவே, V.R.S.-லே அனுப்பிவிடுங்கள், நாங்கள் எங்கேயாவது போய் வாழ்க்கை நடத்திக்கொள்கிறோம்" என்ற நிலையில், இப்போது அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைக்கு என்ன உத்தரவாதம் அளிக்கப்போகிறோம் என்பதுதான் இன்றைக்கு இருக்கிற கேள்வி. அதற்கான எந்த உத்தரவாதமும் இல்லை. புதிய தொழிற்சாலைகளை நாம் கொண்டு வருவோம் என்று சொல்வதைவிட இருக்கின்ற தொழிற்சாலைகளைப் புனரமைத்து, வேலைவாய்ப்புகளுக்கு உத்தரவாதமுள்ள அளவிற்கு இந்த பட்ஜெட்டிலே எதுவுமே தென்படவில்லை. ஆகவே நீங்கள் அந்தத் தொழிலாளர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன். மூடியிருக்கின்ற ஆலைகளை நீங்கள் திறக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குறிப்பாக ஏற்கெனவே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் இங்கே பேசியபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு — விவசாயிகளை அழைத்து கருத்து கேட்டு, அதற்குரிய நடவடிக்கையை எடுப்பதாக அறிவித்திருந்தார்கள். அநேகமாக தமிழ்நாட்டிலே இருக்கிற விவசாயிகள், ஒன்றுபட்டிருக்கிற தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற விவசாயிகள், மிகப்பெரிய எதிர்பார்ப்போடு இருந்தார்கள். ஆனால் மிகப்பெரிய ஏமாற்றத்தை அடைந்திருக்கிறார்கள். *30-9-1999*-க்கு முன்பாகப் பெற்ற தவணை தவறிய கடனை வரக்கூடிய



*30-6-2000*-க்குள்ளாக வட்டியையும், முதலையும் கட்டுபவர்களுக்கு அபராத வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதனால் எந்தவொரு விவசாயியும் நீங்கள் எதிர்பார்க்கிற அளவிற்கு நன்மையைப் பெறமுடியாது. ஏற்கெனவே இதே மாமன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தைச் சொல்லி, அதையெல்லாம் கட்டினால், காலத்தோடு இந்த விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்று சொன்னார்கள். எந்தவொரு விவசாயியும் இதுவரை பயன்பட்டதாகத் தெரியவில்லை. இப்போதும்கூட விவசாயிகளுக்கு எந்தவொரு பயனையும் அளிக்க முடியாத ஒரு திட்டத்தை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். மாண்புமிகு மரியாதைக்குரிய விவசாயச் சங்கத்தினுடைய தலைவர் வீரய்யன் அவர்கள் குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். ஆக, விவசாயிகளாக இருக்கக்கூடிய ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு கட்சிக்கும் இவ்விஷயத்தில் ஒரு கருத்து இருக்கிறது. எனவே அவர்களை எல்லாம் ஒன்றிணைத்து கலந்து பேசித்தான் ஒரு திட்டத்தை நீங்கள் வடிவமைப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் என்று எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால் அவர்கள் *1997*-லிருந்து *1999* ஆம் ஆண்டு வரையிலும் கடன்களை வாங்கியிருக்கிறார்கள். நாம்தான் *1996* ஆம் ஆண்டு கடன்களை ஒத்திவைத்துவிட்டோம். கடுமையான வெள்ளம் ஏற்பட்டது. நான்கு ஆண்டு காலங்களில் வறட்சி ஏற்பட்டது. மாறி, மாறி வறட்சியும், வெள்ளமும் ஏற்பட்ட காரணத்தினால் அரசு அதை ஒத்திவைத்தது. ஆனால் ஒத்திவைக்கப்பட்ட பின்னாலும் இப்போது அவர்கள் கடனைத் திருப்பிக் கட்ட முடியாத சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் வேதனைக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆக இந்த சிறு விவசாயிகள், குறு விவசாயிகளின் கடனையும், வட்டியையும், அபராத வட்டியையும் முழுமையாக நீங்கள் தள்ளுபடி செய்தே ஆகவேண்டும் என்று உங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என்று சொன்னால் நிச்சயமாக அரசு கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும். இல்லையென்று சொன்னால் விவசாயிகளைப் பாதுகாக்க முடியாது. அந்த அளவிற்கு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நீங்கள் தொந்தரவு கொடுக்காமல், ஜப்தி நடவடிக்கை எடுக்காமல் ஒரு நல்ல காரியமாகச் செய்யுங்கள். நிலத்திற்காக வாங்கப்பட்ட கடன், உழவுத் தொழிலுக்காக வாங்கப்பட்ட கடன் — இப்படிப்பட்ட கடன்களை வாங்கிய யாரும் தன்னுடைய மனைவிக்கு அட்டிகை வாங்கிப் போட்டு அழகு பார்க்கவில்லை.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவரவர்களே, இந்த முறை கடனை ரத்து செய்துவிட்டால் அடுத்து விவசாயம் செய்ய அவர்களுக்குக் கடனே கிடைக்காதே, அப்போது என்ன செய்வது? NABARD நிறுவனத்திடம் கடந்த கால அரசு அப்படி ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டிருக்கிறது. கடனைத் தள்ளுபடி செய்தால் நீங்கள் பணம் தர வேண்டியதில்லை என்று ஓர் ஒப்பந்தமே ஆகியிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தை மீறிச் செயல்பட்டால், அடுத்து இப்போது பணத்தைக் கட்டாமல் இருந்துவிடலாம், ஜப்தி செய்யாமல் இருந்துவிடலாம், வலியுறுத்தாமல் இருந்துவிடலாம், கடனைத் தள்ளுபடி செய்துவிடலாம். அடுத்து, கூட்டுறவுக் கடன்களைப் பெறுவதற்கு என்ன வழி?

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கூட்டுறவு நலிவு பெற வேண்டும் என்று விரும்பவேயில்லை. அரசாங்கம் ஈடுசெய்துகொள்ள வேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன். இந்தக் கடனை அரசாங்கம் ஈடுசெய்துகொள்ள வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் நலிவு பெறாமல் இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. இப்போது மத்திய அரசு அரிசி விலையை உயர்த்தி, சீனி விலையை உயர்த்தி, gas விலையை உயர்த்தியதால் 1700 கோடி ரூபாயை மாநில அரசு ஈடுகட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசு அந்தப் பொருட்களின் விலையை உயர்த்திய காரணத்தினால் மாநில அரசு ஈடுகட்டிக் கொள்கிறது. விவசாயிகள் உணவு தானிய உற்பத்தியிலே ஈடுபட்டு இந்தக் கடனுக்கு அவர்கள் ஆட்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், ஏன் அரசு அதை ஈடுசெய்து கொள்ளக்கூடாது? அதேபோன்று ஏன் ஈடுகட்டிக்கொள்ளக்கூடாது என்பதுதான் இப்போது இருக்கக்கூடிய கேள்வி.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவரவர்களே, அரசே ஈடு செய்வதாக இருந்தால்கூட NABARD-ன் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. அதை மறந்துவிடக் கூடாது. அரசே ஈடுசெய்வதற்குக்கூட NABARD அனுமதிக்க வேண்டும். NABARD-ஐப் பற்றி கவலைப்படாமல் நாமே ஈடுசெய்துவிட்டால் அடுத்த முறை இந்தக் கூட்டுறவுக் கடன் NABARD மூலமாகக் கிடைக்காது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசே அந்தப் பணத்தைக் கொடுப்பதாக இருந்தாலும்கூட, NABARD அதற்கு அனுமதிக்க வேண்டும்



என்று சொன்னார்கள். அரசு அதை மானியமாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற ஒரு கொள்கை முடிவை எடுத்து நீங்கள் அதற்கான மானியத்தைத் தந்துவிட்டால் NABARD நிச்சயமாக அதை வலியுறுத்தப் போவதில்லை. அந்த வகையிலே அரசாங்கமே அசல், வட்டி எல்லாவற்றையும் தள்ளுபடி செய்வதற்கு ஒரு முறை ஆவன செய்ய வேண்டும். அதற்கு அரசு தயாராக இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தமே அதுதான். விவசாயிகளுக்குக் கொடுத்த கடனை விவசாயிகளிடமிருந்து மட்டும்தான் திருப்பிப் பெற வேண்டும். அரசாங்கம் மற்ற எந்த நிதியைக் கொண்டும் அதை அடைக்கக்கூடாது என்பதுதான் ஒப்பந்தமே. அரசாங்கம் நினைத்தாலும் அதைக் கட்ட இயலாது. அப்படிக் கட்டுவார்களேயானால், அரசாங்கம் தள்ளுபடி செய்து தருவார்களேயானால் அடுத்த ஆண்டிற்கு 5% வட்டிக்கு அவர்கள் கடன் தர மாட்டார்கள். விவசாயிகளுக்கு நம்மால் குறைந்த வட்டிக்கு கடன் தர இயலாது. அதனால்தான் அந்தக் கடனை ஏற்கெனவே.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** துணைத் தலைவர் அவர்களே, NABARD ஒத்துக்கொள்ளவில்லை என்றுதான் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளித்துக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களும் பதிலளித்துக் கொண்டிருக்கிறார்கள். NABARD வேளாண்மைக்காகவே உருவாக்கப்பட்ட வங்கி. ஆகையால் தொடர்ந்து இதேபோன்று 3 ஆண்டுகாலம் இயற்கைச் சீற்றத்தால் பாதிப்பு ஏற்பட்டால் அதைத் தள்ளுபடி செய்யலாம் என்று NABARD விதிகளில் இருப்பதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதன் Byelaw-வில் அப்படியிருந்தால் அதைப் பரிசீலனை செய்யுங்கள்.

*முற்பகல் 11-45*

தொடர்ந்து மூன்றாண்டுக் காலமாக, வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்பட்டால், மூன்றாண்டுக் காலம் விவசாயி கட்ட முடியாது என்று சொன்னால், அந்தக் கடனைத் திரும்பவும் தள்ளுபடி செய்வதற்கு, NABARD-ன் சட்டத்திலே இடம் இருப்பதாக இப்போது அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை நீங்கள் என்னவென்று பரிசீலித்துப் பாருங்கள். இல்லையென்று சொன்னால், விவசாயிகளைத் துன்புறுத்த வேண்டாம். விவசாயிகளினுடைய நிலங்கள்

அனைத்தையும் அரசாங்கமே கைப்பற்றிக்கொள்ளட்டும்; நிலத்தை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்; விவசாயிகளை விட்டுவிடுங்கள். விவசாயிகள் அத்தனைப் பேர்களையுமே கூலியாட்களாக வைத்துக்கொள்ளுங்கள். எந்தவொரு விவசாயியும் தன்னுடைய வாழ்க்கையை நடத்த முடியாத அளவுக்கு இன்றையதினத்திலே இருந்துகொண்டிருக்கிறான். எந்த ஒரு விவசாயியும் ஏதாவது கூட்டுறவுக் கடனை வாங்கி, வேறுவகையிலே, மகள் திருமணம், அப்படி இல்லையென்றால், வேறு ஏதாவது மாளிகைக் கட்டி வாழ்ந்து கொண்டிருக்கின்றானா என்பதைச் சொல்லுங்கள்.

திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் ஒவ்வொரு விவசாயியின் வீட்டிலே போய் நிற்கிறார்கள். ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள்: "நான் ஒரு விவசாயி வீட்டிற்குச் சென்றேன். அங்கே போய் நான் நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தேன். எனக்கு ஒரு பலகைகூட எடுத்துப் போடவில்லை. Coffee கேட்டேன்; என்னிடம் மாடு இல்லை; ஆகையினால், பால் இல்லை என்று சொல்கிறான். அவனுடைய குடிசையைப் பார்க்கிறேன். அது ஓலை குடிசையாக இருக்கிறது. அவனுக்கு 59 ஆயிரம் ரூபாய் கடன் இருக்கிறது" என்று சொல்கிறார். அவன் கடனை எப்படிக் கட்டமுடியும் என்று எண்ணுகிறீர்கள்? ஆகையினால், அவர்களுடைய கடனைப் பொறுத்தவரையில், எந்தவகையிலாவது அரசு ஈடு செய்துகொள்ள வேண்டும் என்பதுதான் இப்போது இருக்கிற பிரச்சினை. இல்லையென்று சொன்னால், அந்த மாவட்டத்தினுடைய விவசாயிகளைப் பாதுகாக்க முடியாது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) நான் வேறு எந்த மானியக் கோரிக்கையிலேயும் பேசப் போவதில்லை. அந்தவகையிலே, அவர்களுடைய கடனைத் தள்ளுபடி செய்வதை இந்த அவையிலே நீங்கள் அறிவிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு மோசமான நிலைமை விவசாயிகளுடைய வாழ்க்கையிலே இருக்கிறது. இல்லையென்று சொன்னால், வடநாட்டிலே ஏற்பட்ட துயரமான சம்பவம் நம் தமிழ்நாட்டிலேயும் ஏற்பட்டுவிடும். அவ்வாறு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதைத் தங்களுடைய கவனத்திற்கு கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் NABARD இதற்கு



முழுமையாக மறுத்துவிட்டது என்று சொல்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் என்றைக்காவது, பழைய அரசாங்கத்தால் போடப்பட்ட ஒப்பந்தத்தை இரத்து செய்து, விவசாயிகளுக்கு அந்தக் கடனை இரத்து செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அனுமதி கேட்டிருக்கிறதா? இதுவரையில் அந்தமாதிரி ஒரு தகவலே வரவில்லையே, அப்படிக் கேட்டீர்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தஞ்சை மாவட்டத்திலே அதிகமான மழை பெய்து, சேதம் ஏற்பட்டவுடனே, யாரும் அதைப்பற்றிச் சிந்திக்காதபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்தக் கடனை விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பதற்காக ஒரு முயற்சியை எடுத்தார்கள். மும்பை சென்று, NABARD-லே இருக்கின்ற அதனுடைய பொது மேலாளரைச் சந்தித்துப் பேசினார்கள். அவர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளவேயில்லை. மீண்டும் அவரை இரண்டு, மூன்று முறை சந்தித்துப் பேசி, ஆந்திராவிலே செய்திருப்பதைப்போலவாவது செய்ய வேண்டும் என்று சொல்லித்தான் கடந்த ஆண்டு கடனை ஓராண்டுக்காலம் தள்ளி வைத்ததோடு, தவறுதல் வட்டிக்கு நமது அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்ளலாம் என்று சொல்லி, 41 கோடி ரூபாயைக் கடந்த ஆண்டு ஒதுக்கித் தந்தார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள், எந்த விவசாயியும் அதிலே பயனடையவில்லை என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட, இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்காக பணம் செலுத்தி, அரசு சார்பாக 15 கோடி ரூபாய் அதற்காக ஈடு செய்யப்பட்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஈடுசெய்து தந்திருக்கிறோம் கடந்த ஆண்டு. இப்போதுகூட அதே திட்டத்தைத்தான் அமல் செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் தெரிவித்தபடி, ஒருசில விவசாயிகள் வேண்டுமானால் அப்படிக் கடன் செலுத்த முடியாத சூழ்நிலையிலே இருக்கலாம். நான் அதை மறுக்கவில்லை. ஆனால், ஒரு விவசாயி, நான் பெயர் குறிப்பிட விரும்பவில்லை. கடன் வாங்கி, பத்தாண்டுக் காலம் ஆகிறது. அவர், தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலே, தன்னுடைய கணக்கிலே 4-1/2 இலட்சம் ரூபாய் பணம் வைத்திருக்கிறார். கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்ட வேண்டிய பணத்தை, அதிகாரிகள் போய் கேட்டபோது, அந்த அதிகாரியை வீட்டிலே வைத்துப் பூட்டிவிட்டு, பணம் கட்ட முடியாது என்று சொல்கிறார். இப்படிப்பட்ட விவசாயிகள் இருக்கும்போது, எப்படி ஒரேநேரத்திலே கூட்டுறவுச் சங்கங்களையும் பாதுகாக்க முடியும்; கடனையும் ஒழுங்காக வழங்க முடியும் என்பது

தெரியவில்லை. ஆகவே, இதற்கான முயற்சி அரசின் சார்பாக. ஏற்கெனவே எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரி, பக்கத்து மாநிலம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, வட்டியையும் அபராத வட்டியையும் சேர்த்தே தள்ளுபடி செய்தார்கள். அதை NABARD வங்கி எப்படி அனுமதித்தது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரி, NABARD-லேயிருந்து கடன் வாங்கவில்லை. நாம்தான் வாங்கிக்கொண்டிருக்கிறோம். பாண்டிச்சேரியைப் பொறுத்தவரையிலே, NABARD-க்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை. அரசாகப் பார்த்து முடிவெடுக்கலாம். ஓராண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய், 5 சதவிகிதம் வட்டிக்கு NABARD-லிருந்து நாம் re-finance பெறுகிற காரணத்தினாலேதான், அந்தச் சட்டத்திற்கு நாம் உட்பட வேண்டியிருக்கிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லையென்றால், விவசாயிகள் பெற்றிருக்கின்ற கடன்களைப் பற்றிய கணக்கு உங்களிடம் இருக்கிறது; அதை விவசாயிகளிடம் கொடுத்துவிடுங்கள். நாங்கள் அப்படியே கூட்டுறவுச் சங்கங்களிலே கட்டிவிடுகிறோம். வேறு என்ன செய்வது அதை? வேறு ஒன்றும் செய்ய முடியாது. இல்லையென்று சொன்னால், எந்த விவசாயியும் விவசாயமே செய்ய முடியாது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இன்றையதினத்திலே இருக்கிறது. ஆகையினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கடனை தள்ளுபடி செய்வதற்கு திரும்பவும் ஆழமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோன்று விவசாயிகளுக்காக ஓர் உயர்மட்டக் குழு இப்போது அமைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 1972-லே இதுபோன்ற உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவால் விவசாயிகளுக்குப் பல நன்மைகள், பல்வேறு நலத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன; 1972-லே வகுக்கப்பட்டிருக்கிறது. இதேபோன்று, 1977-லே எம்.ஜி. பாலசுப்பிரமணியம், I.A.S.. திரவியம், I.A.S... வெங்கட்ராமன், I.A.S.. போன்றவர்களையும், இன்னும் உண்மையான விவசாயிகளைக் கொண்டும், குழு அமைக்கப்பட்டு, அதிலே பல்வேறு விவரங்கள், விவசாயிகளுடைய நன்மைகளைப் பற்றி அந்தக் குழுவின் Notes-லே இருக்கிறது. பொதுப் பணித் துறை, வேளாண்மைத் துறையில் இருக்கிற பல்வேறு அதிகாரிகள்



*அதிலே இடம் பெற்று இருக்கிறார்கள். அத்தகைய குழுக்கள் மூலமாகத்தான் விவசாயிகள் நன்மைகளைப் பெறமுடியும். அந்த வகையிலே நீங்கள் குழுவை அமைக்கிறபோது, அனைத்துத் தரப்பினரும் அந்தக் குழுவிலே இடம் பெறுவதற்குரிய முறையிலே நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 11-50*

**திரு. சி. வேலாயுதன்:** Point of order....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன Point of order?

**திரு. சி. வேலாயுதன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடன் வாங்கிய பிறகு திரும்பக் கட்ட வேண்டுமென்று சொல்லக்கூடிய நல்ல மனநிலை பாதித்துவிட்டதால், இப்போது என்ன ஆகிவிட்டது என்றால்*

*"கடன்பட்டார் நெஞ்சம் போல*
*கலங்கினான் இலங்கை வேந்தன்"*

*என்று சொல்லக்கூடிய அந்த எண்ணம் போய், கடன் கொடுத்தவன் இப்போது வேதனைப்படுகிறான். அத்தகைய மனநிலை மக்களுக்கு வந்துவிட்டது. அதனால் கடனை வாங்கிய ஆட்களுக்கு வட்டி மட்டும் இரத்து செய்தால் போதுமானது.*

*இன்னொன்று. 1947 ஆம் ஆண்டு, நம்முடைய நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தபோது 1,500 கோடி ரூபாய் வைப்பு நிதி இருந்தது. 1997-ல் நம்முடைய நாட்டிற்கு 3 இலட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் கடன். காரணம் என்ன? இதுபோல, எல்லாம் இனாம், இனாம் என்று சொல்லி, அந்தச் சந்தோஷத்தை மட்டும் பார்க்கிறார்களே தவிர, நாட்டினுடைய வருங்காலத்தினைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. கொஞ்சம் கஷ்ட நஷ்டம் அனுபவித்து; நேர்மையாக, ஒழுங்காக நல்ல மனநிலையோடு மக்களைக் கொண்டுபோக வேண்டும்.*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...*

**திரு. வை. சிவபுண்ணியம்:** *துணைத் தலைவர் அவர்களே,...*

**டாக்டர் அ. செல்லக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரமாக உங்களது பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** முடித்துவிடுகிறேன், நான் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அதிக நேரம் எடுத்துக்கொண்டீர்கள். சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் பற்றி தவறான கருத்தை வேலாயுதன் அவர்கள் சொல்கிறார்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன். விவசாயிகளைப் பற்றி அவருக்குக் கவலை கிடையாது. ஏனென்றால், பாரதிய ஜனதா ஆட்சிக்கு விவசாயிகளைப்பற்றிக் கவலை கிடையாது. நாட்டைப் பற்றிக் கவலை கிடையாது. அவர்கள் பொதுத் துறையையெல்லாம் தாரை வார்த்து தனியாருக்கு விற்பனை செய்துகொண்டு இருக்கிறார்கள். அதுமாதிரி விற்றுக்கொண்டிருக்கலாம். அதுபற்றி எல்லாம் ஒன்றுமில்லை. அப்படியே அரசாங்கத்தை நடத்தியிருக்கலாம். அந்த அரசாங்கம் வேறு, தனி. ஆனால், உண்மையான, பாதிக்கக்கூடிய விவசாயிகளைப் பற்றித்தான் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். இப்போது காவிரிப் படுகையை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், நேற்றைய செய்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. எண்ணெய் எரிவாயு மூலமாக 2000 கோடி ரூபாய் இப்போது மத்திய அரசுக்கு, அந்த மாவட்டத்திலிருந்து கிடைக்கிறது. இதனுடைய Royalty என்ற வகையில் 200 கோடி ரூபாய் நம்முடைய மாநில அரசுக்குக் கிடைக்கிறது. அதனுடைய வரியாக 45 கோடி ரூபாய் கிடைக்கிறது. 245 கோடி ரூபாய் மத்திய அரசு மூலமாகக் கிடைக்கிறது, அந்த மாவட்டத்திலே. அந்த Royalty மூலமாக, அந்த விவசாயிகளுக்கு ஏதாவது செய்யலாம். அதுபோல ஈடுசெய்யக்கூடிய முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அடுத்து சாலைப் பாலங்களை எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டிலே சில மாவட்டங்களிலே புதியதாகவே செய்யப்படுகிறது. தமிழ்நாட்டிலே பரவலாக்கப்பட்ட சாலைத் திட்டங்களை, பாலங்களைக் கட்டுவதைப்



பொறுத்தளவில் சமீபத்திலே செய்திருந்தாலும்கூட, சில மாவட்டங்களில் மட்டுமே, அந்தச் சாலைப் பணிகள் முழுமையாக நடைபெறுகின்றன. அதிலே, திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சை போன்ற மாவட்டங்களுக்கு சாலைப் பணிகளை நீங்கள் பரவலாக்க வேண்டும். இப்போது நிறைய சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மணியடிக்கப்பெற்றது)*

சீக்கிரம் முடித்துவிடுகிறேன், ஒரே ஒரு விஷயம். தொகுதிப் பிரச்சினை. திருத்துறைப்பூண்டி மருத்துவமனை பற்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். தற்போது 'வருமுன் காப்போம் திட்டம்' கொண்டு வந்திருக்கிறீர்கள். அதை வரவேற்கிறோம். அதிலே ஒன்றும் பிரச்சினை கிடையாது. 22 பேர் இருந்த மருத்துவமனையிலே, தற்போது 7 பேர்தான் இருக்கிறார்கள். அதிலேகூட, 'வருமுன் காப்போம் திட்டத்திற்காக' பல மருத்துவர்களை அனுப்பி விடுகிறார்கள். 22 பேர் இருந்த இடத்திலே 7 மருத்துவர்கள்தான் இருக்கிறார்கள். அந்த வகையிலே உரிய எண்ணிக்கையில் மருத்துவர்களை அங்கே நியமிக்க வேண்டும். அந்த மருத்துமனையின் கட்டடம் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சருடைய முன்முயற்சியால், சமீபத்திலே 60 இலட்சம் ரூபாய்க்குக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அது போதுமானதல்ல. அதற்கும் கூடுதலாக நிதி ஒதுக்கிக் கொடுத்து, அந்தக் கட்டடத்தை முழுமையான அளவில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தங்கம் தென்னரசு.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார்.

***திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய பார்வையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்தளித்திருக்கக்கூடிய பாதையில், தலைவர் கலைஞர் அவர்கள், இந்தப் புத்தாயிரம் ஆண்டு தொடக்கத்தில் புது வரிகள் ஏதும் இல்லாமல் அளித்திருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்திலே கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களை இங்கே

தெரிவிப்பதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவர் பேசட்டும், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஒன்றே ஒன்று கேட்கிறேன். நீங்களும் தி.மு.க.வினுடைய மாவட்டச் செயலாளர். யார் Point of order கேட்டாலும் வாய்ப்பு தருகிறீர்கள்....

*முற்பகல் 11-55*

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நாற்காலியிலே உட்கார்ந்திருப்பவரைப் பற்றி யார் குற்றம் சுமத்தினாலும் அவர்கள் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்தப் பகுதியிலே இருந்தாலும், அங்கேயிருந்து நீங்கள் கொடுக்கின்ற ஒவ்வொரு உத்தரவிற்கும் இந்த அவை கட்டுப்பட்டு இருக்கிறது. அப்படி இருக்கின்ற நேரத்திலே தினம், தினம், வேண்டுமென்றே சம்பந்தம் இல்லாமல் ஓர் உறுப்பினர் எழுந்து இப்படி அவையை நடத்துவதற்கு இடையூறாக இருப்பாரானால், அதை எப்படி இந்த மன்றம் தாங்கிக்கொண்டு இருக்கப் போகிறது? அதற்கு நீங்கள் முறையாக ஒரு தீர்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நான் பதில் சொல்லிவிடுகிறேன். நான் இந்த இருக்கையிலே வந்து உட்கார்ந்த பிறகு என்னுடைய பார்வைக்கு பாரபட்சம் கிடையாது. எல்லோரையும் சமமாகத்தான் நான் பார்க்கிறேன். நீங்கள் அடிக்கடி எழுந்து குறுக்கிட்டு, இதுமாதிரி குந்தகம் விளைவித்தால், அதை அனுமதிக்க என்னாலே முடியாது. சபையை நான் ஒழுங்காக நடத்திச் செல்ல வேண்டுமென்றால், நான் முறையாக நடத்திச் செல்வதற்கு நான் சொல்வதை நீங்கள் கேட்டாக வேண்டும். இங்கேயிருந்து நான் சொல்கிற ஒவ்வொரு வார்த்தையையும், நீங்கள் தீர்ப்பாக ஏற்றுக்கொண்டு உட்கார வேண்டும். திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். திரு. தங்கம் தென்னரசு, நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் உட்காருகிறேன். நீங்கள் B.J.P. உறுப்பினர் கேட்டால் மட்டும் அனுமதி கொடுக்கிறீர்கள். ஆளும் கட்சிக்கு ஜால்ரா போடுகிறார்கள் என்று அனுமதி கொடுக்கிறீர்கள். நான் ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியைச் சார்ந்தவன். அதனால்தான் கேட்கிறேன். அதற்கு நீங்கள் அனுமதி கொடுக்கவில்லை என்றால் எப்படி?



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கொஞ்சம் இருங்கள். நான் சொல்கிறேன். B.J.P. உறுப்பினர் பேசியதற்கு, திரு. பழனிசாமி பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) திரு. பழனிசாமி ஏற்கெனவே பதில் சொல்லிவிட்டார். ஆகையால், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் Point of order கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பழனிசாமி பதில் சொல்லிவிட்டார்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** திரு. வேலாயுதன் விவசாயிகளுடைய கடனை ஒழுங்காக வசூல் செய்ய வேண்டும் என்று சொன்னார். அது அவருடைய கருத்தா அல்லது அவருடைய கட்சியினுடைய கருத்தா என்பதை அவர் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** B.J.P. உறுப்பினர் பேசியதற்கு ஏற்கெனவே பேசிக் கொண்டிருந்த திரு. பழனிசாமி அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். ஆகையால், தயவுசெய்து நீங்கள் இப்பொழுது உட்காருங்கள். அடுத்து உங்களுக்குப் பேச வாய்ப்பு வரும்போது உங்கள் கருத்தை நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைக்குக் காலையிலே நீங்கள் பேசுகிறீர்களா என்று அவையிலே கேட்டதற்கு, நீங்கள் பேசுவதற்குப் பெயரைக் கொடுக்கவில்லை. பெயரைக் கொடுக்காமல் அடிக்கடி எழுந்து நின்று தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, B.J.P.-யினுடைய மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள், விவசாயிகள் வாங்கிய கடனை ஒழுங்காகச் செலுத்த வேண்டும் என்று ஆளும் கட்சிக்குச் சாதகமாக ஜால்ரா அடிக்கிறார். அவரை நீங்கள் பேசவிடுகிறீர்கள். (குறுக்கீடு) என்னுடைய கேள்வி (குறுக்கீடு) இருங்கள், முடித்துவிடுகிறேன், என்னுடைய கேள்வி, உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் கூறிய கருத்து, விவசாயிகளுடைய கடனை வசூல் பண்ண வேண்டுமென்ற கருத்து அவருடைய கருத்தா, கட்சியினுடைய கருத்தா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேலாயுதன் நீங்கள் சொல்லிவிடுங்கள்.

[2000 மார்ச் 27

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் விவசாயிகள் என்று குறிப்பிடவில்லை. பொதுவாகத்தான் நாட்டு மக்களுடைய மனநிலை....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேலாயுதன் சொல்வதைக் கேளுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** விவசாயியை நான் குறிப்பிடவே இல்லை. பொதுவாக நாட்டு மக்களுடைய மனநிலை, வாங்கிய கடனை திரும்பக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு எண்ணம் இருக்க வேண்டும். அது மொத்தத்திலே எடுத்துக்கொள்கிற எதுவாக இருந்தாலும் சரியில்லை, வட்டியை இரத்து செய்தால் போதுமானது. இது ஒன்று.

இன்னொன்று, இப்படியே இனாம், இனாம் என்றால் எப்படி அரசாங்கம் நடக்கும்? 1997-லே 3 இலட்சத்து 20 ஆயிரம் கோடி ரூபாய் கடன் இந்த நாட்டிற்கு. இன்னும், இனாம், இனாம் என்று கேட்டால் நாட்டை எப்படி நடத்த முடியும்? ஆகையால், நம்முடைய பொறுப்புள்ள அரசியல்வாதிகள் அத்தனைபேரும் சிந்திக்க வேண்டும். அதாவது நியாயமான முறையிலே வாங்கிய கடனை தொடுக்க வேண்டும் என்ற மனநிலை வளர வேண்டும். எப்பவுமே தர்மம், தள்ளுபடி எல்லோருக்கும் உண்டு. அறநெறி நாளும் காத்துக்கொள்ள வேண்டும்.

(திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. ஜி. பழனிசாமி ஆகியோர் ஒரே சமயத்தில் எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். திரு. தங்கம் தென்னரசு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) விவாதம் நீட்டித்துக்கொண்டே போகிறது. (குறுக்கீடு) விவாதம் நீட்டித்துக் கொண்டே போகிறது. (குறுக்கீடு) திரு. தங்கம் தென்னரசு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** பாரதிய ஜனதா கட்சியைப் பொறுத்தவரையில் விவசாயிகளைப்பற்றி அவர்களுக்குக் கவலையில்லை, நாட்டைப் பற்றியும் அவர்களுக்குக் கவலையில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, அவர் ஒரு நல்ல கருத்தைத்தான் சொன்னார். வாங்கியக் கடனை திரும்பக் கொடுக்க வேண்டும் என்றார். வேறு ஒன்றும் இல்லை. திரு. தங்கம் தென்னரசு, நீங்கள் பேசுங்கள்.



2000 மார்ச் 27]

(திரு. மு. அப்பாவு எழுந்து நின்று ஏதோ பேசிக்கொண்டே இருந்தார்.)

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

``Budget is not just a bland summary of Government Accounts. It is the single most important economic policy statement of the Government`` என்று சொல்வதற்கிணங்க தலைவர் கலைஞர் அவர்கள் (குறுக்கீடு) தமிழக மக்களுடைய சமூகப் பொருளாதார வளர்ச்சிக்காக இங்கே வைத்திருக்கக்கூடிய அவரது 13-வது நிதிநிலை அறிக்கை எல்லா வகையிலும் The first-class Budget என்று சொல்லக்கூடிய அளவிற்கு திறமை வாய்ந்த ஒரு பட்ஜெட்டாகத் திகழ்கிறது என்பதை நான் இந்தப் பேரவையிலே தெரிவிக்க விரும்புகிறேன். தமிழக வரலாற்றிலேயே முதன் முறையாக விவசாயிகள் சங்கங்களுடைய பிரதிநிதிகளை அழைத்து அவர்களுடைய கருத்துக்களை அறிந்து, வேளாண் பெருமக்களுடைய முன்னேற்றத்திற்கான பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய பட்ஜெட்டாக, இந்தியாவிலேயே முதன் முறையாக உயிரியல் தொழில் நுட்பக் கொள்கையை உருவாக்கக்கூடிய அந்த அறிவிப்பை உள்ளடக்கிய ஒரு பட்ஜெட்டாக, இந்தியாவிலேயே பெண் தொழில் முனைவர்களுக்காக உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை அறிவிக்கக்கூடிய பட்ஜெட்டாக, தகவல் தொழில்நுட்பக் கொள்கையில் அறிவித்திருக்கக்கூடிய முதல் மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் விளங்குகிறது என்பதைத் தெரிவிக்கக்கூடிய பட்ஜெட்டாக, தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திலே உலகிலேயே ஆங்கிலம் தவிர வேறு எந்த மொழிகளிலும் இணையம் வாயிலாகக் கல்வி அளிக்கும் பயிற்சி அமைப்பு, உலகில் வேறு எங்கிலும் இல்லாத ஒரு முன்னோடித் திட்டமாக அறிவிக்கக் கூடிய அந்த அறிவிப்பை உள்ளடக்கக் கூடிய ஒரு முதலாவது அறிக்கையாக, இப்படி பல முதலாவதுகளை உருவாக்கிய ஒரு முதன்மையான பட்ஜெட்டாக தலைவர் கலைஞர் அவர்களுடைய இந்த பட்ஜெட் திகழ்கிறது என்பதை நான் பெருமிதத்தோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நண்பகல் 12-00

அது மாத்திரமல்ல. இந்தச் சமுதாயத்தில் இருக்கக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களுக்கும் விவசாயிகள், கைவினைஞர்கள், மீனவர்கள், தொழில்முனைவோர்கள், இளைஞர்கள், மாணவ, மாணவியர்கள், தமிழ் அறிஞர்கள், விவசாயத் தொழிலாளர்கள், ஊனமுற்றோர்கள், முதியோர்கள்,

நெசவாளர்கள், தொழிலாளர்கள், பத்திரிகையாளர்கள், அரசுப் பணியாளர்கள், பெண்கள், ஆசிரியர்கள், வணிகர்கள் என்று இந்தச் சமுதாயத்திலே இருக்கக்கூடிய அத்தனை தரப்பு மக்களுக்கும்— அவரவர்களுடைய வளர்ச்சிக்கு ஏற்ற திட்டங்களை அளிக்கக்கூடிய பட்ஜெட்டாக, சமூக நீதியினுடைய அடிப்படையிலே பார்ப்போமென்று சொன்னாலும்கூட, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர் ஆகிய அத்தனை பேர்களுடைய நலன்களுக்கும் உறுதி அளிக்கக்கூடிய ஒரு பட்ஜெட்டாக இந்த பட்ஜெட் திகழ்கிறது.

இந்தத் தலைமுறையிலே இருக்கக்கூடிய மக்களை மாத்திரம் சிந்திக்காமல், வரக்கூடிய தலைமுறைகளிலே இனி வரும் மக்களுக்காகவும் சிந்தித்துத்தான் 2050-லே ஏற்படக்கூடிய குடிதண்ணீர்ப் பஞ்சத்தைக் கருதி, நிலத்தடி நீரைப் பாதுகாக்கவும், மழை நீரை சேகரிக்கவும், நிபுணர் குழுவை அமைத்திடக்கூடிய அந்த முயற்சி, உண்மையிலேயே நாம் அத்தனை பேரும் பாராட்டக்கூடிய ஒரு முயற்சியாக அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தினமணி பத்திரிகையிலேகூட இதைப்பற்றி எழுதுகின்றபோது, "சமுதாயத்தின் பல்வேறு தரப்பினரையும் வசீகரிக்கக்கூடிய பொலிவுமிக்க வரவு-செலவுத் திட்டம்'' என்று 25ஆம் தேதியிட்ட தினமணி தலையங்கத்திலே குறிப்பிடப்பட்டிருப்பதையும் இன்றைக்கு, வெளி வந்திருக்கக்கூடிய இந்து நாளிதழ் தலையங்கத்திலே இந்த பட்ஜெட்டைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது "....the full imprint of a policy calculated to please all sections of the people..." என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பதையும் நான் இந்த மன்றத்தினுடைய பார்வைக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்கொண்டோம் என்றால், இந்தியாவினுடைய மொத்த பொருளாதார வளர்ச்சி - G.D.P. இந்திய சராசரி 5.9 சதவீதம் என்று இருக்கக் கூடிய நிலையில் நாம் பெருமிதப்படத்தக்க அளவிற்கு தமிழகத்தினுடைய G.D.P. 6.6 சதவீதமாகவும், தொழிற்துறை வளர்ச்சியிலே Manufacturing Sector-ல் இந்தியாவினுடைய சராசரி 7 சதவீதமாக இருக்கக்கூடிய நிலையில், தமிழகத்தினைப் பொறுத்தமட்டில் நம்முடைய வளர்ச்சி 13 சதவீதமாகவும் இருக்கக் கூடிய ஒரு நிலைமையை எண்ணிப் பார்க்கின்றபோது, பொருளாதார வளர்ச்சியிலே தமிழகம் கண்டுகொண்டிருக்கக்கூடிய முன்னேற்றம் தெள்ளத்தெளிவாக இன்றைக்கு விளங்கும்.





அதேபோல் உணவுப்பொருள் உற்பத்தியை எடுத்துக் கொண்டோமேயானால், 1996 ஆம் ஆண்டிலே கழக ஆட்சி பொறுப்பினை ஏற்றுக்கொள்கிறபோது 64 லட்சம் டன்னாக இருந்த உணவு உற்பத்தி கடந்த ஆண்டு 94 லட்சம் டன்னாக இருந்து, வரக்கூடிய ஆண்டிலே 103 லட்சம் டன்னாக அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்டைப் பொறுத்தமட்டில் பல்வேறு சிறப்பு அம்சங்களை உருவாக்கக்கூடிய பட்ஜெட்டாக இது இருக்கிறது. வேளாண் கொள்கையை வகுக்கக் கூடிய வகையில் முதல்வர் தலைமையிலே ஒரு குழு; விவசாயிகளுடைய விழிநீரைத் துடைத்திட வியத்தகு திட்டங்கள்; தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கு சிறப்புமிகு திட்டங்கள்; வரும் 10 ஆண்டுகளில் 25 லட்சம் ஏக்கர் தரிசு நில மேம்பாடு; கைவினைஞர்களுக்காக பூமாலைத் திட்டம்; ஒருங்கிணைந்த மகளிர் நலத் திட்டம்; வாழ்ந்து காட்டுகிறோம்; என்ற பெயரால் ஒரு திட்டம், மீனவர் அங்காடி; பழங்குடியினருக்கு தனி இயக்ககம்; தமிழகமெங்கும் சாலை மேம்பாடு, உள்ளாட்சி மன்றங்களுக்கு மொத்த நிதி ஒதுக்கீடு 2401 கோடி ரூபாய்; அதைப்போல 9 பாசனத் திட்டங்களை விரைந்து முடிக்க நடவடிக்கை; ஆதரவற்றோர், முதியோர் உதவித்தொகை ரூ.200 ஆக உயரும் என்று இந்த பட்ஜெட்டினை திருப்பிய பக்கமெல்லாம் திட்டங்களுக்குரிய திருவிழாவாக அமைந்திருக்கிற இந்த நிலையிலே நான் அனைத்து திட்டங்களையும் பற்றி காலத்தினுடைய அருமைக் கருதி இங்கே குறிப்பிடாவிட்டாலும்கூட, தென் மாவட்டங்களினுடைய வளர்ச்சிக்காக அறிவித்திருக்கக்கூடிய திட்டங்களை, தென் மாவட்டத்திலேயிருந்து வந்திருக்கக்கூடிய சட்டப் பேரவை உறுப்பினர் என்ற முறையிலே அவற்றை நான் இங்கே பெரிதும் வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ இப்போதுதான் தென்மாவட்டங்களைப் பற்றித் தலைவர் கலைஞர் அவர்கள் எண்ணுகிறார் என்று யாரும் கருதக்கூடாது. தென் மாவட்டங்களினுடைய வளர்ச்சியிலே அவருக்கு இருக்கக்கூடிய பரிவும், கனிவும் பற்றி ஊட்டியிலே அவர் இருக்கிறபோது சொன்ன அந்த வாசகங்களை நான் இங்கே நினைவு கூற விரும்புகிறேன்.

"உதகையிலே குளிர்மலர்ச் சோலைகளிலே உலவிக்கொண்டு வந்தாலும் என்னுடைய எண்ணமெல்லாம் வறண்டு கிடக்கக்கூடிய இராமநாதபுரம் மாவட்டத்தை எண்ணிப் பார்க்கின்றது" என்று அவர்கள் குறிப்பிட்ட அந்த உள்ள உணர்வினுடைய உள்ளக் கிடக்கையினுடைய உணர்வுகளின் வடிகாலாகத்தான் இப்போது தென் மாவட்டங்களுடைய வளர்ச்சிக்கு இத்தகைய வியத்தகு திட்டங்களை அவர்கள் இங்கே அளித்திருக்கிறார்கள்.

[திரு. தங்கம் தென்னரசு] [2000 மார்ச் 27

இராமநாதபுரம், விருதுநகர், தேனி மாவட்டங்களில் இருக்கக்கூடிய தரிசு நிலங்களுடைய மேம்பாடு, NABARD உதவியோடு பாசன கண்மாய்களையும், குளங்களையும் புனரமைக்கக்கூடிய ஒரு நல்ல முடிவு, அதைப்போல மதுரை, திருநெல்வேலியில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் படித்த இளைஞர்கள் தகவல் தொழில் நுட்பம் மூலமாக பல்வேறு சேவை மையங்களை உருவாக்கி வேலைவாய்ப்பினை உருவாக்கக்கூடிய ஓர் அருமையான நிலை; நாங்குநேரியிலே Hi-tech தொழில் நுட்பப் பூங்கா; குளச்சல் துறைமுக விரிவாக்கத் திட்டம் என்று இந்த பட்ஜெட்டிலே தென் மாவட்டங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கக்கூடிய முக்கியத்துவத்திற்கு நான் மிகுந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-05*

அதைப்போல இந்தியாவிலே, ஏன் உலகளவிலே Knowledge Based Industry என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய, அதாவது அறிவியல் சார்ந்த தொழில்கள் என்று ஏற்பு அளிக்கப்பட்டிருக்கக்கூடிய உயிரியல் தொழில் நுட்பம் (Bio-Technology) அதைப்போல தகவல் தொழில் நுட்பம் (Information Technology) ஆகிய இரண்டு பிரிவுகளுக்கும் இந்த பட்ஜெட்டில் அழுத்தமாக ஒரு முத்திரை அளிக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே பாராட்டி வரவேற்கத்தக்க அம்சமாக விளங்குகிறது. அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் சமீபத்தில் இந்தியாவிற்கு வந்திருந்தபோது நாடாளுமன்றத்திலே அவர் உரையாற்றியபோது, "We want to see more Indians and Americans benefit from our economic ties specially in the cutting edge fields of information technology and bio-technology". என்று குறிப்பிட்டுச் சொன்னதை நான் இந்த நேரத்திலே நினைவுகூர விரும்புகிறேன்.

உயிரியல் தொழில் நுட்பத்தைப் பொறுத்தமட்டில் வேலைவாய்ப்பை உருவாக்கி மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துகிறது. உயிரியல் வளத்தைக் காக்கும் காடுகளையும், இயற்கைச் செல்வங்களையும் அழித்து விடாமல் இருக்கக்கூடிய விளைச்சல் நிலங்கள் மூலமாகவே அதிக உணவு உற்பத்திக்கு வழி வகுக்கிறது. அறுவடைக்குப் பின்னரான இழப்புகளைக் குறைத்து உணவுப் பொருட்களுடைய தரத்தை உயர்த்துவதன் மூலமாக ஊட்டச் சத்தைக் கூட்டுகிறது. உரங்கள், பூச்சிக் கொல்லிகளின் உபயோகத்தைக் குறைப்பதன் மூலமாக சுற்றுச் சூழலை பாதுகாக்க முடிகிறது. சுற்றுப்புறங்களை மாசுபடுத்தும் விவசாய முறைகளை தவிர்த்து, துல்லியமான விவசாயத்தையும், ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மையையும் அது ஊக்குவிக்கிறது என்ற வகையில் இந்த Bio-Technology பிரிவுக்கு



2000 மார்ச் 27] [திரு. தங்கம் தென்னரசு]

முக்கியத்துவம் கொடுத்து அந்தப் பிரிவிலே கேளம்பாக்கத்திலே மகளிர் தொழில் முனைவோருக்காக உயிரியல் பூங்கா ஒன்றினை அமைக்க முன்வந்திருப்பதும், உயிரியல் தொழில் நுட்பக் கொள்கையை இந்தியாவிலேயே முதன்முதலாக உருவாக்கித் தந்திருப்பதும் இந்தியத் தொழில் துறை வரலாற்றிலேயே ஒரு மைல் கல்லாக அமையும்.

உலக வங்கியிலிருந்து வரக்கூடிய ஒரு News release-World Bank News release-லே சொல்கிறபோது ஒன்றைச் சொல்கிறார்கள்.

"The world is at the cusp of new scientific revolution in the biological sciences, much like the one early in the 20th century when Einstein's theories fundamentally changed physics and the world."

இருபதாம் நூற்றாண்டுகளின் துவக்கத்தில் ஐன்ஸ்டீனுடைய கொள்கைகள் இயற்பியலையும் உலகத்தினுடைய அறிவியல் கொள்கையையும் எப்படி மாற்றியமைத்ததோ அதைப்போல அண்மையில் உயிரியல், அறிவியலில் ஏற்பட்டிருக்கக்கூடிய புரட்சி பல்வேறு மாறுதல்களை இப்போது உருவாக்கக்கூடும்.

"All possibilities are opening up. Food crops with higher yield and better nutrition content, plants that resist drought and pest, livestock that are immune to disease and fisheries that are sustainable." அதைப் போல அவர்கள் சொல்கிறபோது புதிய தாவர வகைகள், நோய் எதிர்ப்பு சக்திக்குரிய தாவர வகைகள், அதிக yield கொடுக்கக்கூடிய உணவு தானிய உற்பத்தி, அதைப்போல நோயைத் தாங்கக்கூடிய கால்நடைகள், பாதுகாப்பான மீன் வளம் ஆகியவற்றை உறுதி செய்யக்கூடிய வகையிலே இந்த Bio-Technology பிரிவு அமைந்திருக்கிறது. அதைச் சொல்லிவிட்டு இறுதியாகச் சொல்கிறார்கள். "But this is not just a scientific revolution. It is a revolution that's going to drive social and economic reactions," என்று. Bio-Technology துறையிலே ஏற்பட்டிருக்கக்கூடிய இந்தப் புரட்சி ஒரு சாதாரண அறிவியல் புரட்சி மாத்திரமல்ல. இந்த நாட்டு மக்களுடைய சமூகப் பொருளாதார முன்னேற்றங்களை, விளைவுகளை ஏற்படுத்தத் தக்க புரட்சியாக அமைந்திருக்கிறது என்பதை உலக வங்கி எடுத்துக் காட்டியிருக்கிறது.

அதைப்போல வேளாண் விரிவாக்க அலுவலர்களை Knowledge, workers-ஆக மாற்றியமைக்கக்கூடிய முயற்சி மிகவும் பாராட்டக்கூடிய ஒரு முயற்சியாக இருக்கிறது.

[திரு. தங்கம் தென்னரசு] [2000 மார்ச் 27

பிற்பகல் 12-10

தகவல் தொழில் நுட்பத்தைப் பொறுத்தமட்டில் இன்றைக்கு இந்து பத்திரிகையிலே Tamil Nadu has attuned itself to the new milieu of liberalisation and is legitimately emerging as a preferred destination for global investments. என்று மிக அழகாக அந்த பத்திரிகையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். தகவல் தொழில் நுட்பத்திலே தமிழகம் இப்போது எந்த அளவிற்கு ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதனை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே மிக விவரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 1998-99ஆம் ஆண்டு 1,246 கோடியாக இருந்த நம்முடைய Software exports 1997-98-ஐ விட 192 சதவிகிதம் அதிகமாயிருப்பது நாம் பெருமைப்பட வேண்டிய விஷயம். அதைப்போல தமிழ்நாட்டிலே மென் பொருள் வல்லுநர்கள் சென்னையிலே அதிகமாக இருக்கிறார்கள் என்பதும், அமெரிக்கத் தூதரகம் H1-B Visa வழங்குவதிலே சென்னையிலேயிருந்துதான் அதிகமாக விசா வழங்கப்படுகிறது என்பதைக் குறிப்பிட்டு இங்கே சொல்லியிருப்பதை நான் நினைவுகூர விரும்புகிறேன்.

Multimedia Software Application-ல் தமிழகத்தில் இருக்கக்கூடிய பெண்டாஃபோர் நிறுவனம் இப்போது உலகிலேயே இரண்டாவது இடத்தை வகிக்கக்கூடிய அளவிற்கு முன்னேறியிருக்கிறது. மென்பொருள் தொழில்கள் தொடங்குவதற்கு இந்தியாவில் சிறந்த இடம் சென்னையாகத் திகழ்கிறது என்பதை NASSCOM எடுத்துச் சொல்லியிருக்கிறது.

அதைப்போல தகவல் தொழில் நுட்பத்தில் உலக அளவில் முன்னிலை பெற செயல் திட்டம் வகுக்கப்பட்டிருப்பது நாம் பாராட்டி வரவேற்க வேண்டிய விஷயம் (மணியடிக்கப்பெற்றது). ஒரு நிமிஷம். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தகவல் தொழில் நுட்பத்தைப் பொறுத்தமட்டில், வன்பொருள், மென் பொருள், தொலைத் தொடர்பு ஆகிய மூன்றுமே, three great arms of Information Technology என்று சொல்லக்கூடிய அளவிற்கு விளங்குகின்றன. அதைப்போல, மென்பொருளுக்கும் தொலைத் தொடர்புக்கும் இங்கே பல்வேறு சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கும் நிலையில், வன்பொருள் தயாரிப்பு இன்னும் நம்முடைய நாட்டிலே சிறந்த முறையிலே அமைக்கப்படவில்லை. சென்னையை எடுத்துக்கொண்டால்கூட unorganised sector ஆகத்தான் hardware manufacturing இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. எனவே hardware manufacturing-க்கு சிறந்த முறையிலே ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில் நாம் ஒத்துழைப்பினை நல்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2000 மார்ச் 27] [திரு. தங்கம் தென்னரசு]

அதைப்போல வணிக வரிகளைப் பொறுத்தமட்டில் தமிழ் தினசரி நாட்காட்டிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதை வணிகர்களுடைய சார்பிலே வரவேற்கிறேன். அதேபோல நாட்டுச் சர்க்கரை, வத்தல், வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடி ஆகியவற்றிற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதை சாதாரண ஏழை எளிய பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய ஓர் அரிய வாய்ப்பு என்று கருதி இந்த பட்ஜெட்டை நான் மனப்பூர்வமாக இங்கே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றை மாத்திரம் சொல்லிவிட்டு நான் என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் மரியாதைக்குரிய ஞானசேகரன் அவர்கள் பேசுகிறபோது இங்கே ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர் திருக்குறளை இங்கே எடுத்துச் சொல்லி தலைவருக்கு அதை எடுத்துக் காட்டினார்கள். அவர்கள் திருக்குறளிலே அத்தனை அதிகாரங்களையும் மீண்டும் ஒரு முறை படிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைவிட ஒன்றைச் சொன்னார்கள், சொல்லிவிட்டு நீங்கள் தமிழ் மக்களுக்கு துரோகம் செய்யக்கூடிய அளவில் அவர்களின் முதுகிலே குத்தக்கூடிய அளவிலே உங்களுடைய உறவுகள் இருக்கின்றன, தந்தை பெரியாருடைய பாதையிலேயிருந்து நீங்கள் விலகுகிறீர்கள் என்ற ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். எனக்கு ஒரு கதைதான் நினைவுக்கு வருகிறது. அதைமாத்திரம் சொல்லி நான் எனது உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

ஒரு விமானத்திலே 3 பிரயாணிகள் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். நான் ஓர் அடையாளத்திற்காகச் சொல்கிறேன். யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. யாரையும் குறிப்பிட்டுச் சொல்வதாக நீங்கள் கருதிவிடக் கூடாது. அதிலே ஒரு பெரியவர் ஒரு மஞ்சள் துண்டை அணிந்திருந்தார் என்று வைத்துக்கொள்வோம். இன்னொருவர் கதர்ச்சட்டை போட்டிருந்தார் என்று வைத்துக்கொள்வோம். நான் ஓர் அடையாளத்திற்காகத்தான் இதை இங்கே சொல்கிறேன். தயவுசெய்து யாரையும் குறிப்பிடுவதாக நீங்கள் நினைக்கக்கூடாது. மூன்றாவது நபர் நாம் அன்றாட வாழ்க்கையிலே பார்க்கக்கூடிய ஒரு சாதாரண சராசரி மனிதர்; Mr. Public என்று நாம் அவரை வைத்துக்கொள்வோம். மற்றொருவர் விமான ஓட்டி. இப்படி நான்கு பேரும் சென்று கொண்டிருந்தார்கள்.

விமானம் சென்று கொண்டிருக்கும் நிலையில் திடீரென்று விமான ஓட்டி சொன்னார்; விமானம் பழுதடைந்துவிட்டது; ஆனால், விமானத்திலே மூன்றே மூன்று பாராசூட்டுகள்தான் இருக்கின்றன. நான், எப்படி இந்த விமானம் விபத்துக்குள்ளானது என்பதைத் தெரிவிக்க வேண்டும். எனவே, நான் முதலிலே விமானத்தை விட்டுக் குதித்து விடுகிறேன் என்று அவர் ஒரு பாராசூட்டை எடுத்து மாட்டிக்கொண்டு உடனடியாகக் குதித்துவிட்டார். அடுத்ததாக சடாரென்று அந்தக் கதர்ச் சட்டைக்காரர் எழுந்து மற்றவர்கள் இரண்டு பேரையும் பார்த்து நான் உடனடியாகப் போக வேண்டும், நான் சென்றுதான் ஆட்சியமைக்க வேண்டும். அப்படியில்லையென்றால், அமைக்கக்கூடிய ஆட்சியிலேயாவது நான் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று அவர்களிடத்திலே சொல்லிவிட்டு, அதற்கு அவர்களுடைய பதிலையும் எதிர்பார்க்காமல் அவர் கையிலே கிடைத்த ஒரு பொருளை எடுத்துக்கொண்டு அவர் சடாரென்று குதித்துவிட்டார்.

மஞ்சள் துண்டுக்காரரும் மற்றும் Mr. Public இரண்டு பேர் மட்டும்தான் அங்கே இருந்தார்கள். அவர், நம்முடைய மஞ்சள் துண்டுக்காரர் மிக நிதானமாக, Mr. Public-ஐப் பார்த்துச் சொன்னார். "ஐயா, இருப்பது ஒரு பாராசூட்தான், ஆகவே, நீங்கள் அதை எடுத்துக்கொண்டு குதித்துவிடுங்கள், என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். உங்களுக்காகவே தொண்டூழியம் செய்து கொண்டிருக்கக்கூடியவன் நான், உங்களுடைய வளர்ச்சிக்காக, உங்களுடைய வாழ்க்கைக்காக என்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறவன் நான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இக்கட்டான நேரத்தில் என்னைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள், இங்கேயிருக்கிற பாராசூட்டை எடுத்துக்கொண்டு நீங்கள் தப்பித்துக்கொள்ளுங்கள்" என்று Mr. Public-ஐப் பார்த்துச் சொன்னார். Mr. Public கலகலவென்று சிரித்துவிட்டுச் சொன்னார், "ஐயா, கவலைப்படாதீர்கள், நாம் இரண்டுபேருமே தப்பித்துக்கொள்ளலாம்" என்று. இவர், "எப்படி" என்று கேட்டார். அவர் சொன்னார், இப்போது கொஞ்ச நேரத்திற்கு முன்னால் குதித்தாரே கதர்ச் சட்டைக்காரர், அவர் தனக்கு இருக்கக்கூடிய நிதானத்தை விட்டு அவசர அவசரமாக, ஆட்சியிலே இருந்துவிட வேண்டும் அல்லது ஆட்சியிலே இடம் பெறவேண்டும் என்ற அவசரத்திலே நான் நான்கு வருடங்களுக்கு முன்னாலே தேவையில்லையென்று தூக்கிப்போட்டிருந்த பழைய Hold-all ஐ எடுத்துக்கொண்டு குதித்துவிட்டார் என்று சொன்னார். (சிரிப்பு) ஆகவே, துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையிலே சொல்வதெல்லாம், நான் ஒவ்வொருவருக்கும் உதாரணங்களைச் சொன்னேன். ஆனால், அந்த Hold-all, நான்கு வருடங்களுக்கு முன்னால்





Mr. Public தூக்கிப்போட்ட Hold-all எது என்பதை மாத்திரம் நான் உங்களுடைய நினைவிற்கு மட்டும் விட்டுவிட்டு, எங்களைப் பொறுத்தமட்டில் என்றென்றும் நாங்கள் மக்களோடு இருக்கிறோம். உங்களைப் பொறுத்தமட்டில், நீங்கள் யாரோடு சேர்ந்து Hold-all உடன் குதித்திருக்கிறீர்கள் என்பதை மாத்திரம் நினைவுபடுத்திக்கொண்டால் போதும் என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்தி அந்த அளவிலே என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்.

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தங்கம் தென்னரசு அவர்கள் பேசுகிறபோது ஒரு விமானக் கதையைச் சொன்னார். விமானக் கதை எந்த அளவிற்குப் பொருந்துகிறதோ இல்லையோ, ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் இன்று தூக்குக் கயிற்றையே தன்னுடைய கழுத்துக்கு மாட்டிக்கொண்டிருக்கிறது என்பதைத்தான் நான் சொல்வேனே தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கு எனக்குத் தெரியவில்லை.

**திரு. மு. அப்பாவு:** துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் முறையாக முன்னறிவிப்பு எதுவும் கொடுக்காமல் இப்படி அடிக்கடி எழுந்து நின்றால், நான் எப்படிச் சபையை நடத்துவது? உட்காருங்கள். திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:**

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, கடந்த 24-3-2000 அன்று 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தமிழகத்தினுடைய தன்மானத் தலைவர் மாண்புமிகு முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கின்றார்கள். இந்த

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [2000 மார்ச் 27

நிதிநிலை அறிக்கையினை தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பாக வரவேற்று வாழ்த்தி சில கருத்துக்களை இங்கே எடுத்துச்சொல்ல முன்வருகிறேன்.

எதிர்க்கட்சியினுடைய தலைவர்களும், தமிழகத்திலே வாழக்கூடிய அனைத்து அரசியல்வாதிகளும், ஏழை எளியோர், பாட்டாளி மக்கள், பாமரர்கள், விவசாயிகள், வியாபாரிகள், ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்கள் அத்தனை பேர்களும் பாராட்டக்கூடிய வரி இல்லாத ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இங்கே சமர்ப்பித்து இருக்கின்றார்கள். ஆகவே இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்பதிலே நாங்கள், எங்களுடைய தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பிலே பெருமையும் பேருவுகையும் கொள்கின்றோம்.

*53* பக்கங்களிலே *146* திட்டங்கள் குறித்து இங்கே நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். தொலைநோக்குப் பார்வையோடு இந்த நிதிநிலை அறிக்கையில் பொதுத் தேர்தலை எதிர்நோக்கி இல்லாது, பொது மக்களுடைய நலனுக்காக நல்ல திட்டங்களை அறிவிப்புச் செய்திருக்கின்றார்கள். ஆகவே எதிர்க்கட்சிகாரர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் முதல்வர் அவர்களைப் பாராட்டியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே வியாபாரிகளை அழைத்து விவசாயிகளை அழைத்து அவர்களுடைய குறைகளை எல்லாம் கேட்டறிந்து நிவர்த்தி செய்திருக்கின்ற ஓர் அரசுதான் இது. மாண்புமிகு முதல்வர் இந்த நிதிநிலை அறிக்கையிலே நல்ல திட்டங்களை வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் அறிவிப்புச் செய்திருக்கின்றார்கள் என்றால் உண்மையிலேயே அதனைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பகுத்தறிவுப் பகலவன், ஈரோட்டுச் சிங்கம், வெண்தாடி வேந்தர், கர்மவீரர், பேரறிஞர் அண்ணா ஆகியோருடைய வழியிலே இந்த அரசை நடத்திச் செல்கின்ற முத்தமிழறிஞர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 'சமத்துவபுரம்' கண்ட சரித்திர நாயகனாக, தமிழகத்திலே வாழக்கூடிய அனைத்துத் தரப்பு மக்களையும் ஒன்றிணைத்து எல்லோருக்கும் எல்லா வகையிலும் எல்லா நலன்களையும் இங்கே அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். ஆகவே அப்படி இருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று இங்கே ஒருசில கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் *12-20*

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், பாசன வசதிகளில் உள்ள சில குறைகளை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2000 மார்ச் 27] [திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்]

என்னுடைய தொகுதியில் நங்காஞ்சி ஆற்றுப் பணிகள் கடந்த நான்காண்டுகளாக நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே கடந்த கால ஆட்சியிலே அந்தப் பணிகளுக்கு ஏலம் விடப்பட்டு, எதிர்க்கட்சிக்காரர்கள் அந்த ஏலத்தை எடுத்து, இப்போது ஆளுகின்ற அரசுக்கு ஓர் அவப்பெயரை உருவாக்க வேண்டுமென்ற நிலையிலே அந்த ஏலத்தை எடுத்தவர்கள் முறையாக அந்த நங்காஞ்சியாற்றுப் பணியைக் கட்டி முடிக்காமல் விட்டுவைத்திருக்கிறார்கள். நான்காண்டுகாலமாக அந்த வேலைக்கு நிதி ஒதுக்கப்பட்டதில் குறைபாடு இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள். அந்தத் துறைக்கு அமைச்சராக இருக்கக்கூடிய மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள், அந்த நங்காஞ்சியாற்றைப் பார்வையிட்டு, அதற்கு நிதியை ஒதுக்கீடு செய்து, அந்தப் பகுதியில் வாழ்கின்ற ஏழை விவசாயிகளுடைய துயரைத் துடைப்பதற்காக, நங்காஞ்சியாற்று அணையை உடனடியாகக் கட்டிக் கொடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று எங்களுடைய பகுதியில் இருக்கக்கூடிய நங்காஞ்சியாற்றில் ஒரு Check Dam கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி, இப்போது அந்தப் பணிகளும் தொடங்கியிருக்கின்றன. இதுபோன்று சிறுசிறு அணைகளான கருப்புசாமி ஆண்டி அணை, முனியப்பன் அணைத் திட்டங்களுக்கு—இதுபோன்று அங்கே எங்களுடைய பகுதியில் குடகனாறு, நங்காஞ்சியாறு ஆகிய ஆறுகளின் குறுக்கே வருகிற காரணத்தால்—நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பகுதியில் இருக்கிற ஏழை விவசாயிகளுடைய துயரைத் துடைப்பதற்கு நீங்கள் நீர்ப்பாசன வசதி செய்து தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் எங்களுடைய பகுதியில் ஆண்டுக்கு ஒருமுறை பொதுப் பணித் துறை மூலமாக—ஏரிகள் தூர் எடுக்கப்படுகின்ற பணிகளில் ஈடுபட்டு—இப்போது மூன்று ஏரிகளில் தூர் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே பொதுப் பணித் துறையின்கீழ் வரும் ஏரிகளை மட்டும் எடுத்திருக்கிறார்கள். ஆனால் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக பராமரிக்கப்படும் சில ஏரிகளும் இருக்கின்றன. அவற்றிலும் தூர் வாரிக் கொடுத்தால், ஏழை விவசாயிகளுக்குப் பயன் உள்ளதாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு இந்த மன்றத்திலே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனெனில் அந்தப் பகுதியில் உள்ள கால்வாய்களில் இருந்து வரக்கூடிய தண்ணீர் மூலம் சில பகுதிகள் பயன்பெறும். ஏற்கெனவே அரவக்குறிச்சி பகுதி வறட்சிக்குட்பட்ட பகுதியாக இருக்கின்ற காரணத்தால், பரமத்தி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் அங்கு இருக்கிற விவசாயிகள் அந்த ஏரிகளிலிருந்து

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [2000 மார்ச் 27

வரக்கூடிய கால்வாய்களை அகலப்படுத்தி அவற்றைத் தூர் எடுத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தக் கால்வாய்களைத் தூர் எடுப்பதற்கு உடனே நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டுமாய் இந்த மாமன்றத்தில் நான் விவசாயிகள் சார்பாக கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று எங்களுடைய பகுதியில் இருக்கக்கூடிய இணைப்புச் சாலைகள் மற்றும் கிராமச்சாலைகள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை அறிவிப்பு செய்து, ஒவ்வொரு பகுதியிலேயும் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஆண்டுதோறும் ஒதுக்கிக் கொடுத்திருக்கிற அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் பயனாக கிராமங்கள் முழுவதிலும் இப்போது சாலை வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற நிதிநிலையைக் கொண்டு ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகச் செய்ய முடியாத சில ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பஞ்சாயத்தின் நிதியைக் கொண்டு செய்யப்பட வேண்டுமென்று சொன்னால், பஞ்சாயத்துக்கும் நிதிநிலை இல்லாத காரணத்தால் அவை செய்யப்படாமல் இருக்கின்றன. கிராமப்புறச் சாலைகளை இணைக்கிற வகையில் சில கிராமப் புறச்சாலைகளையும் அங்கே இருக்கிற பாலங்களையும் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழிவகை செய்து கொடுக்க வேணுமாய் தொகுதி மக்கள் சார்பாக வேண்டிக்கொள்கிறேன்.

அதேபோன்று பெண்களுக்காக "வாழ்ந்து காட்டுவோம்" என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி, பெண்களுக்கு 33 சதவீதம் ஒதுக்கீடு செய்திருக்கிற மத்திய, மாநில அரசுகளுடைய திட்டத்தை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பெண்களுக்காக, எங்களுடைய பகுதியில் தொழிற்சாலை ஒன்றைத் திறந்து கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு சமூக நலத் துறையினுடைய அமைச்சர் அவர்களிடமும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். குறிப்பாக எங்களுடைய இஸ்லாமியப் பெண்களுக்காகவும் அந்தப் பகுதியில் வாழக்கூடிய சிறுபான்மை சமுதாய மக்களுக்காகவும் ஒரு தொழிற்சாலையைத் தொடங்கி வைக்கவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறேன்.

எங்களுடைய தொகுதியில் முருங்கைக் காய் அதிகமாக விளைகிறது; அந்த முருங்கைக் காய்களைக் கொண்டு ஒரு தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்று கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்தேன்.



2000 மார்ச் 27] [திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்]

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நகைச்சுவையாக, ஒரு திரைப்பட நடிகரை வைத்து அதைத் திறந்து வைக்கலாம் என்றுகூட அந்தக் கூட்டத்தொடரின்போது என்னிடம் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். மீண்டும் அதை நினைவுபடுத்தும் வகையில், எங்களுடைய பகுதியில் ஏராளமான முருங்கைக்காய் விளைகின்ற காரணத்தால், அந்தப் பகுதியில் ஒரு தொழிற்சாலை தொடங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வுசெய்து ஆவன செய்யவேண்டுமாய் அந்தத் தொகுதி விவசாய மக்களின் சார்பாகப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று சத்துணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மானியம் மாணவர் ஒருவருக்கு தினமொன்றுக்கு 18 பைசாவாக இருந்ததை இப்போது 23 பைசாவாக உயர்த்தி ஏழை எளிய சாதாரணப் பள்ளிகளில் பயிலுகின்ற மாணவ மாணவிகளின் துயரைத் துடைப்பதற்கான திட்டத்தை அறிவிப்புச் செய்திருக்கின்றார்கள்.

பிற்பகல் 12-25

அதேபோல் தமிழகத்தைப் பொறுத்தவரையில் கணினிமயமாக்கப்படுவதை இப்போது மற்றைய மாநிலங்களுடைய பத்திரிகைகள்கூட பாராட்டுகின்ற அளவுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அறிவிப்பு செய்திருக்கிறார்கள். ஆகவே அதை வரவேற்கின்றோம், பாராட்டுகின்றோம். நிதிநிலை அறிக்கையின் 32-வது பக்கத்திலே 24-10-2001-லே மருது பாண்டியர்களுக்காக ஒரு நினைவுச் சின்னம் திறக்க இருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மருது பாண்டியர்கள் நடத்திய சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக அவர்கள் தூக்கிலிடப்பட்ட இருநூறாவது ஆண்டினை நினைவுகூர்ந்திடும் வகையில், நினைவுச் சின்னம் அமைத்து 24-10-2001 அன்று புகழாஞ்சலி நிகழ்ச்சி நடத்துவதற்கான வழிமுறைகளை வகுத்திட ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அறிவிப்பு செய்திருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் உங்களிடம் பணிவோடு நாங்கள் ஒரு கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். சிறுபான்மை சமுதாய மக்களுக்காக, இஸ்லாமிய மக்களுக்காக நீங்கள் செய்து வருகின்ற நன்மைகளைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். கடந்த கூட்டத் தொடரிலே நீங்கள் அறிவிப்பு செய்தீர்கள். கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுக்காக ஒரு நினைவு மண்டபம் மேடவாக்கத்திலே திறக்கப்படும் என்று அறிவிப்பு செய்தீர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலேயும், செய்தித் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் பணிவோடு

சொல்லிக்கொள்கிறோம். நீங்கள் மேடவாக்கத்திலே திறப்பதற்குப் பதிலாக, சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்ற சென்னையினுடைய மத்தியப் பகுதியிலே — நம்முடைய அமைச்சர் பெருமக்கள் குடியிருக்கின்ற பகுதியிலே, அல்லது ராஜ் பவனிலிருந்து இங்கு வரக்கூடிய, சிலைகள் அமைத்திருக்கிற பகுதியிலே ஏதாவது ஒரு பகுதியிலே — கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுக்கு நீங்கள் நினைவு இடத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமாய் இஸ்லாமியப் பெருங்குடி மக்களின் சார்பாக பணிவோடு இந்தக் கோரிக்கையை உங்கள் முன்னால் இந்த நேரத்திலே எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஆண்டு அறிவிப்புச் செய்திருந்தீர்கள். இந்த ஆண்டாவது அவருடைய பிறந்ததின விழாவிலே அதை நீங்கள் செய்து கொடுப்பீர்கள் என்று நாங்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

அடுத்து இப்தார் நிகழ்ச்சியிலே நீங்களும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், நம்முடைய தோழமைக் கட்சியாக இருக்கின்ற பாட்டாளி மக்கள் கட்சியினுடைய மரியாதைக்குரிய டாக்டர் இராமதாஸ் அவர்களும் கலந்துகொண்டபோது இரண்டு திட்டங்களை அறிவிப்பு செய்தீர்கள். ஒன்று, உருது அகாடமி திறந்து கொடுப்பதும்; இரண்டாவது இட ஒதுக்கீடு செய்து கொடுப்பதும். இந்த இரண்டு திட்டங்களை நீங்கள் செய்து கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறீர்கள். அந்த அடிப்படையிலே நீங்கள் இப்போது உருது அகாடமியை உருவாக்கி இஸ்லாமிய மக்களுடைய பாராட்டுதலையும் புகழ்ச்சியையும் பெற்றிருக்கிறீர்கள். இட ஒதுக்கீடு குறித்து நீங்கள் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடுவீர்கள் என்று இஸ்லாமிய மக்கள் ஏராளமான பேர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றையதினம் ஏக்கத்திலே இருக்கிறார்கள், தாக்கத்திலே இருக்கிறார்கள். அருள்கூர்ந்து இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பதில் அளிக்கும்போது இட ஒதுக்கீட்டை குறைந்த அளவு செய்து கொடுப்பீர்கள் என்று ஆவலோடு இருக்கிறார்கள். இதனை இஸ்லாமிய பெருங்குடி மக்களின் சார்பாக உங்களிடத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள்தான் இந்த இஸ்லாமிய மக்களுடைய பாதுகாவலராக இருந்து, ஒவ்வொரு திட்டத்தையும் நிறைவேற்றி வருகிறீர்கள். குறிப்பாக காயிதே மில்லத் பெயரில் கல்லூரி அமைத்துக் கொடுத்தீர்கள். நபிகள் நாயகம் பிறந்த தின விழாவிற்கு விடுமுறை அளித்தீர்கள். இஸ்லாமிய மக்களுக்கு "உள்ளதைச் சொல்வோம், சொன்னதைச் செய்வோம்" என்ற சொல்லுக்குச் சொந்தக்காரராக இருந்து இன்றையதினம் செயல்படுத்திக் கொண்டிருக்கிற மூத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த இட ஒதுக்கீட்டையும் — 69 சதவீத இட ஒதுக்கீடு பிரச்சினை நீதிமன்றத்திலே இருந்தாலும்,





மரியாதைக்குரிய டாக்டர் இராமதாஸ் அவர்களும் இப்தார் நிகழ்ச்சியிலே சொல்லும்போது, நிச்சயமாக முதல்வர் அவர்கள் இஸ்லாமிய மக்களுக்கு அறிவிப்புச் செய்வார்கள் என்று சொன்னதற்கிணங்க — செய்து கொடுக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மேடவாக்கத்திலே 48 ஏக்கர் நிலத்தை காயிதே மில்லத் கல்லூரிக்காக இடம் ஒதுக்கீடு செய்து தந்தீர்கள். இப்போது அந்தக் கல்லூரி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் கல்லூரியிலேகூட சில முறைகேடுகள், சில தவறுகள் நடந்து வருவதாக இஸ்லாமிய மக்கள் சில குறைபாடுகளை எங்கள் மத்தியிலே எடுத்துச் சொன்னார்கள். அதுகுறித்து சில ஆதாரங்களையும் இப்போது இந்தக் குழுவின் சார்பாக எடுத்துச் சேகரம் செய்து கொண்டிருக்கிறார்கள். விரைவிலே உரிய துறையினுடைய அமைச்சரான மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலும் அந்தக் கல்லூரியினுடைய விவரங்களை உங்கள் முன்னால் சமர்ப்பிக்க இருக்கிறோம். அவற்றையும் நீங்கள் சீர்தூக்கிப் பார்த்து, நல்ல நிர்வாகத்திற்குரிய முயற்சிகளை நீங்கள் முழுமையாக செய்து கொடுக்க வேண்டுமாய் இந்தநேரத்திலே பணிவோடு உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இஸ்லாமிய மக்களுக்காக இப்போது வக்ஃப் வாரியத்திலே ஓய்வூதியமாக நீங்கள் சங்கைக்குரிய ஆலிம் உலமாக்களுக்கு 500 ரூபாய் வழங்கிக் கொண்டு வருகிறீர்கள். உங்களுடைய ஆட்சியிலே, கடந்த 1996-லே நீங்கள் 400 ரூபாய் வழங்கினீர்கள். நீங்கள் ஆட்சி பொறுப்பேற்ற பின்னால் 100 ரூபாய் சேர்த்து 500 ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். இன்றைய விலைவாசி ஏற்றத்திற்கு ஏற்ப மற்றவர்களுக்கு எல்லாம் ஓய்வூதியத்தைக் கூட்டிக் கொடுத்திருப்பதுபோல, சங்கைக்குரிய ஆலிம் உலமாக்களுக்கும் நீங்கள் அந்த ஓய்வூதியத்தை கூட்டிக் கொடுப்பதோடு, உறுப்பினர்களாக விண்ணப்பம் போட்டு இருப்பவர்களில் காத்திருப்போர் பட்டியலில் ஏராளமானபேர் இருக்கிறார்கள். உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை கூடுதல் செய்வதற்கு அதிக நிதியை ஒதுக்கீடு செய்து கொடுப்பீர்கள் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே நாங்கள் எதிர்பார்த்தோம். அது குறைவாக இருக்கிறது. அதையும் கூடுதலாகச் சேர்த்து நீங்கள் ஒதுக்கித் தரவேண்டுமாய் இந்த நேரத்தில் உங்களிடம் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

பிற்பகல் 12-30

அடுத்து வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி இருக்கிறீர்கள். கடந்த காலங்களில் மற்ற சமுதாயத்துக்கு மட்டும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் உங்களுடைய பொற்கால ஆட்சியிலே இப்போது எங்களுடைய

பகுதியில்கூட இஸ்லாமிய மக்களுக்கு ஏராளமான வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியிருக்கிறீர்கள். இன்னும் காத்திருப்போர் நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்கும் நீங்கள் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டுமாய் இந்த நேரத்தில் கேட்டு இந்த, பட்ஜெட்டினை வரவேற்று உரையாற்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி,

'வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித் திருநாடு'

என்று போற்றிப் புகழ்ந்தவனாக எனது உரையை நிறைவு செய்து விடை பெற்றுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

## 4. தகவல் கோரல்-தொடர்ச்சி

### (ஆ) தீப்பிடிக்காத வீடுகள் கோரி ரிசர்வ் வங்கி எதிரில் குடியிருப்போர் கோட்டை முன் சாலை மறியல்

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி. (குறுக்கீடு) திரு. அப்பாவு. எந்த அறிவிப்பும் கொடுக்காமல், திடீரென்று எழுந்து நின்றால் எப்படி? நீங்களே சொல்லுங்கள், அவர் பேசியதில் ஏதாவது Point of order இருக்கிறதா? சொல்லுங்கள் அனுமதி கொடுக்கிறேன். (குறுக்கீடு) உங்களை நான் அனுமதிக்கவில்லை, திரு. அப்பாவு உட்காருங்கள். திரு. வ. வேலுசாமி.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சைகையில் சொல்லிவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தப்பாக ஒன்றும் சொல்லவில்லை. நம்முடைய Hostel-லுக்குப் போகவேண்டி வெளியே போனேன். அங்கே பஸ் மறியல். பொதுமக்களெல்லாம் இருக்கிறார்கள். என்னவென்று விவரத்தைக் கேட்டேன். Reserve Bank எதிரில் சத்யா நகர் காலனியில் 419 வீடுகள் கடந்த 10 தினங்களுக்கு முன்பு தீ பிடித்தது. Road-roko எல்லாம் செய்தார்கள். நம்முடைய அமைச்சர் திரு. சுந்தரம் அவர்கள் தலையிட்டு உங்களுக்கு தீ பிடிக்காத வீடுகளை ஓரிரு நாட்களில் கட்டித் தருகிறோம்





என்று சொல்லி உத்தரவாதம் கொடுத்து இருக்கிறார்கள். அப்படி கல்நார் வீடு, தீ பிடிக்காத வீடு கட்டித் தருவதாகச் சொன்னதால் அவர்கள் அமைதியாக இருந்திருக்கிறார்கள். அன்றைக்கு அப்படிச் சொல்லிவிட்டு—

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** முதலில் மாண்புமிகு உறுப்பினர், இங்கிருக்கிற பேருந்தை விட்டுவிட்டு, Hostel-லுக்குப் போக பஸ் இல்லையென்று சொன்னார். அதுதான் அவருடைய கோரிக்கை. ஆகவே Hostel-லுக்கு பஸ் போகிறதா இல்லையா என்று கேட்க வேண்டும். ஆனால் அதை route-ஆக வைத்துக்கொண்டு — அதற்கப்புறம் என்ன பிரச்சினை — வெளியில் நடக்கிற ஒரு பிரச்சினையை தந்திரமாக இதில் கொண்டு வருகிறார். Hostel-லுக்கு பஸ் போகிறதா இல்லையா என்றுதான் நீங்கள் கேட்டீர்கள். பஸ் போகிறது, போய்விட்டு வாருங்கள். (சிரிப்பு)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இப்பொழுதுதான் பேசியிருக்கிறேன். சபைக் குறிப்பில் நான் பேசியதையெல்லாம் இருக்கிறதா என்று பாருங்கள். Hostel-லுக்கு பஸ் போகவில்லை என்பது சபைக் குறிப்பில் இல்லை. சபைக் குறிப்பிலே மாண்புமிகு அமைச்சர் சொன்னது போல Hostel-லுக்கு பஸ் போகவில்லை என்று எதுவுமே சொல்லவில்லை. நான் இப்போதுதான் பேசவே ஆரம்பித்திருக்கிறேன்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அப்படியானால் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த அடிப்படையில் இவர் பேசுகிறார். ஒன்று Point of order என்று சொல்லியிருக்க வேண்டும்; அல்லது Point of clarification என்று சொல்லியிருக்க வேண்டும் அல்லது Point of information என்று சொல்லியிருக்க வேண்டும். ஒன்றுமே சொல்லாமல், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வெளியே போனேன், பஸ் இல்லை, Hostel-லுக்குப் போகலாம் என்று போனேன், பஸ் இல்லையென்று சொன்னார்கள். என்னவென்று கேட்டேன் என்று சொல்லி, அதற்குப் பிறகு அதன் ஊடே உள்ளே நுழைந்து, வெளியில் நடக்கிற செய்தியை திடீரென்று சொன்னால் எப்படி? நீங்களாவது வெளியில் போய்விட்டு வருகிறீர்கள்; நாங்கள் எல்லோரும் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். உடனே எப்படிச் சொல்ல முடியும்? இது தவறான ஒரு நடைமுறையை உருவாக்கும். என்ன கேட்க வேண்டுமோ அதைக் கேட்க வேண்டும். அதோடு முடிக்க வேண்டும். திருச்சிராப்பள்ளியில் ஒன்று நடக்கிறது என்றால் எப்படித் தெரியும்? எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள நாங்கள் எல்லோரும் மந்திர சக்தியையா வைத்திருக்கிறோம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி. (குறுக்கீடு) திரு. அப்பாவு, அதுதான் சொல்லிவிட்டார்களே, உட்காருங்கள். திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசில் குவிந்திருக்கிற அதிகாரங்கள் பரவலாக்கப்பட....

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தகவலை முறைப்படி — நம்முடைய முதல்வர் அவர்களேகூட சொல்லிவிட்டார்கள். சொல்லித்தான் பேசச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களிடம் நான் இப்போது கேட்க வந்து இருப்பது, 419 வீடுகளுக்கும் தீ பிடிக்காத வீடு கட்டித்தருகிறேன் என்று அமைச்சர் சொல்லிவிட்டு, இப்போது அவர்களை இடத்தைக் காலி பண்ணுங்கள் என்று சொன்னதால், அவர்கள் சாலை மறியலில் இறங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் நல்ல அறிவிப்பை அறிவித்திருக்கிறார்கள். 10 ஆண்டுகாலம் குடியிருந்தவர்களுக்கு அந்த இடத்தைப் பட்டா செய்து அவர்களுக்குக் கொடுப்பதாக.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, அவருடைய எண்ணம் அநேகமாக ஈடேறிவிட்டது. இந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்று விரும்பினார். அந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டுவிட்டது. அதற்கான விளக்கத்தை நானும் சொல்ல விரும்புகிறேன். இங்கே சில வீடுகள் எரிந்தன, ஒரு வாரத்திற்கு முன்பு. அந்தத் துறைக்குரிய அமைச்சர் அந்த இடத்தையெல்லாம் பார்வையிட்டு, தீ பிடிக்காத வீடுகள் கட்டித் தருவதாக வாக்களித்து இருக்கிறார். அதுவும் உண்மை. இந்த ஆட்சியில் பல இடங்களில் இப்படி தீ பிடித்தபோதெல்லாம் தீ பிடிக்காத வீடுகள் கட்டித் தருவதாக வாக்களிக்கப்பட்டு அவையும் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. அதுமாத்திரமல்ல. குடிசைமாற்று வாரியத்தை உருவாக்கியதே தீ பிடிக்காத வீடுகளைக் கட்டுவதற்காகத்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அது போதாது என்பதற்காகத்தான் கல்நார் வீடுகள் இப்போது கட்டப்பட்டு வருகின்றன. அதையும் மாண்புமிகு உறுப்பினர் மிக நன்றாக அறிவார்.

இந்த வீடுகளைப் பொறுத்தவரையில் அவர்கள் முதலிலே எங்களுடைய வாக்குறுதியைக் கேட்டுக்கொண்டு சும்மாதான் இருந்தார்கள். நாங்கள் வீடுகள் கட்டலாம் என்று ஆரம்பித்தபோது, ஏற்கெனவே Secretariat Association என்று ஒன்று இருக்கிறது, அவர்கள் அந்த இடம் தங்களுடையது என்று கூறி அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறார்கள். அதனால்தான் தாமதம் ஆகிறது. அந்தத் தாமதத்தைத்



தவிர்த்து வேறு பகுதியிலே இந்த வீடுகளைக் கட்ட முடியுமா என்று Chief Secretary ஆராய்ந்து கொண்டிருக்கிறார். இதற்கிடையிலே ஒருவர் வேண்டுமென்றே, வெகுதூரத்திலிருந்து வந்து, சிதம்பரம் பக்கத்திலேயிருந்து இங்கு வந்து, அழகிரி அல்ல, வேறொருவர், அங்கிருந்து வந்து, பழைய தென்னாற்காடு பகுதியிலேயிருந்து ஒருவர் வந்து, அந்த மக்களையெல்லாம் தூண்டிவிட்டு இன்றைக்கு சாலை மறியல் என்று ஏற்பாடு செய்திருக்கிறார். அதைப் பற்றி போலீசாரும் மற்றவர்களும் விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சாலை மறியலைக் கைவிட்டால், பிறகு ஆக்கபூர்வமான பணிகள் நடைபெறும். கைவிட மறுத்தால் போலீசார் சட்டப்படி கடமையைச் செய்வார்கள்.

*பிற்பகல் 12-35*

## 7. வரவு-செலவுத் திட்டம், 2000-2001, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *அடுத்து, 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதம் தொடரும். திரு. வ. வேலுசாமி.*

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசில் குவிந்து இருக்கக்கூடிய அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாநில சுயாட்சி மலர வேண்டும் என்பதற்காகவும், மத்திய ஆட்சி மொழியாக அனைத்து மொழிகளும் ஆக வேண்டும் என்றாலும் முதற்கட்டமாக தமிழ் மொழி ஆக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், சமூகச் சீர்திருத்தத்திலே கொள்கை அளவிலே ஆரம்பத்திலிருந்து அதை ஒரு குறிக்கோளாக எடுத்து நடத்தி வரக்கூடிய நம்முடைய ஒப்பற்ற தலைவர் அவர்கள் 69 சதவீதம் கிடைப்பதிலே மாநில அரசுகளே அந்த முடிவினை எடுத்துவிட வேண்டுமென்பதற்காகவும், ஏழை எளிய நடுத்தர, தாழ்த்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் ஆகியோரின் முற்போக்கு வழியிலே குறுக்கிடும் தடைகளை உடைத்தெறிந்து முன்னேற வேண்டும் என்பதற்காகவும், சிறுபான்மை சமுதாய மக்கள் பாதுகாப்பு, மத நல்லிணக்கம், மனிதநேயம் மற்றும் சமூக ஒற்றுமை ஓங்க யாராலும் எந்தக் காலத்திலும் அசைக்க முடியாத நம்பிக்கை உறுதி கொண்டிருக்கக்கூடிய கொள்கை முழக்கத்தோடு தமிழக மக்களுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் அளித்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையில் பேசக்கூடிய வாய்ப்பு பெற்றமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. வ. வேலுசாமி] [2000 மார்ச் 27

இந்த நிதிநிலை அறிக்கையை ஒருவர் இருவர் அல்ல, அனைவருமே பாராட்டுகின்றனர். பொதுவாகச் சொல்லப்போனால், விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கை எங்களுக்காகவே தயாரிக்கப்பட்டதோ என்று அவர்கள் ஒருபுறம் சொல்கின்றனர். ஆனால் மற்றவர்கள் அப்படியில்லை. வர்த்தகர்களைப் பொறுத்தளவிலே எந்தவிதமான வரியும் இல்லாமல் இது வர்த்தகர்களுக்காகவே தயாரிக்கப்பட்ட அறிக்கை என்று அவர்கள் ஒருபுறம் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். சினிமாத் துறையினரைப் பொறுத்தளவிலே, "இல்லை, இல்லை, இது எங்களுடைய துறை வளர்வதற்காக முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட உரை" என்று அவர்கள் ஒருபுறம் சொல்கின்றார்கள். கிராமப்புற மக்களோ, 'கிடையாது, கிடையாது, இதுவரையிலும் இருந்த நிலை மாறி இப்போது சாலைகள் எல்லாம் தார்ச் சாலைகளாகவும், வீதிகள் எல்லாம் சிமெண்ட் தளங்களாகவும் ஆக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி, சாலைகள் இல்லாத கிராமங்களே இல்லை, குடிநீர் இல்லாத கிராமங்களே இல்லை என்ற அளவிலே உருவாக்கி வந்திருக்கிறார்கள். ஆகவே இந்த அறிக்கை எங்களுக்காகத்தான்' என்று அவர்கள் ஒருபுறம் சொல்கின்றார்கள். அதெல்லாம் கிடையாது என்று பத்திரிகையாளர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து 'இது எங்களுடைய நன்மைக்காகப் போடப்பட்ட அறிக்கை' என்று அவர்கள் ஒருபுறமும், பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இனத்தவர்கள் எங்களுடைய வாழ்க்கை வசதிக்காக, எங்களுடைய குழந்தைகள் படித்தவர்களாக, பண்புள்ளவர்களாக உருவாக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்திலே தலைவர் கலைஞர் அவர்கள் இந்த உரையை உருவாக்கியிருக்கிறார்கள்' என்று அவர்களும், 'அதெல்லாம் கிடையாது என்று மென்பொருள் துறையைச் சார்ந்தவர்கள் இந்த உலக அளவிலே தமிழகம் முதலிடம் பெறுவதற்காக தலைவர் கலைஞர் அவர்களுடைய அறிவு முதிர்ச்சியால், அனுபவத்தால் இப்படிப்பட்ட ஒரு மிகப் பெரிய திட்டத்தைத் தீட்டி இந்த மென்பொருள்களிலே தமிழகம் முதலிடம் பெறவேண்டுமென்று உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள், அந்த வகையிலே அவர்களுக்கு நாங்களும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம் என்றும் சொல்கின்றார்கள்.

*பிற்பகல் 12-40*

பல்வேறு தலைவர்களும் பாராட்டக்கூடிய நம்முடைய நிதிநிலை அறிக்கையை ஒருசிலர் மாத்திரம் வேறுவிதமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அறிக்கையானது நலிவடைந்த அறிக்கை



2000 மார்ச் 27] [திரு. வ. வேலுசாமி]

என்று ஒரு சிலர் சொல்கிறார்கள். ஆமாம், உண்மையிலேயே நம்முடைய ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பாக சொல்லியதைப் போல, இந்த அறிக்கையானது ஊரை அடித்து உலையிலே போட்டு பகட்டானவர்களால் பகட்டான மக்களுக்காகப் போடப்பட்ட அறிக்கை இல்லை. இது சாதாரணமான ஏழை எளிய நலிந்த மக்களுக்காக, நலிந்தோரிடத்திலே அதிகமான ஆசை கொண்டு, அவர்களை முன்னேற்ற வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கக்கூடிய சாதாரணமான ஒருவரால் போடப்பட்ட ஒரு சாதாரண அறிக்கைதான். இந்த மக்களை உயர்த்தவேண்டுமென்று, இன்று நேற்றல்ல, தன்னுடைய அரசியல் வாழ்க்கையையே மக்களுக்காக அர்ப்பணித்துக் கொண்டிருக்கக்கூடிய தலைவனால் போடப்பட்ட அறிக்கைதான் இந்த அறிக்கை. ஒருசிலர் வேண்டுமென்றால் வேண்டுமென்றே குறை சொல்லிக்கொண்டிருக்கலாமேயொழிய, வேறு ஒன்றும் இல்லை.

பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்த அளவிலே தமிழகம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. ஏற்கெனவே இருந்த ஆட்சிகளால் பொருளாதாரத் துறையிலே, தொழில் துறையிலே பின்தங்கிக் கிடந்த தமிழகத்தை இன்று முதன்மையான நிலைமைக்குக் கொண்டு வந்தவர் நம்முடைய ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். அந்த வகையிலே எடுத்துக் கொண்டோம் என்றால், இன்று மொத்த உற்பத்தியிலே *6.6* சதவீதத்தையும், அதைப்போலவே தொழில் வளர்ச்சியிலே *13* சதவீதத்தையும் பெற்று இன்று இந்தியாவுக்கே ஒரு எடுத்துக்காட்டாக தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது என்றால், அதற்குக் காரணமே நம்முடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அதைப்போலவே இன்று கிராமப்புறங்களிலே சாலைகளுக்காக அதிகமான தொகையை ஒதுக்கி, அத்தனை சாலைகளும் மிகச்சிறப்பான முறையிலே அமைந்திட வேண்டும் — வாகனங்கள் ஓடுவதிலே தடை இருக்கக்கூடாது, அத்தகைய தடை இருக்கக்கூடிய காரணத்தினால் எரிபொருள்களுடைய செலவு என்ன? பழுதாகக்கூடிய உதிரி பாகங்களுடைய விலை என்ன என்பதையெல்லாம் கணக்கில்கொண்டு அனைத்து சாலைகளும் சரியான முறையிலே இருக்கவேண்டும்—என்பதற்காக ரூ. *1685* கோடியை சாலைகளுக்காக மாத்திரம் ஒதுக்கி இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களுடைய முன் அனுபவம்தான் இதை எல்லாம் செய்யத் தூண்டியிருக்கிறது.

அதைப்போலவே தொலைத் தொடர்புத் துறையிலே மத்திய அரசோடு சேர்ந்து *2285* கோடி ரூபாயை ஒதுக்கி, இன்று தொலைத் தொடர்புத்

[திரு. வ. வேலுசாமி] [2000 மார்ச் 27

துறையிலே தமிழகம் முன்னணியில் இருக்கக்கூடிய ஒரு வாய்ப்பினையும் செய்திருக்கிறார்கள். குடிநீர் வழங்கல், துப்பரவுப் பணி, நகர்ப்புற வளர்ச்சி கட்டமைப்பு போன்ற திட்டங்களுக்காக 1407 கோடி ரூபாயையும், மின் உற்பத்தியிலே தமிழகம் இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளிலே எந்த அளவிலும் குறை இல்லை என்ற அளவிலே நாம் உபரியாக மின்சாரத்தை மற்றவர்களுக்கு வழங்கலாம் என்ற அந்த நிலையை எட்ட மின் உற்பத்தித் துறைக்கு ரூ.1034 கோடியும், தனியார் துறைக்கு 1332 கோடியும் வழங்கி இந்த வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டுக் கொண்டிருக்கக்கூடியது நம்முடைய தமிழக அரசு. அதைப்போலவே துறைமுக வளர்ச்சிக்காகவும் மத்திய அரசினுடைய உதவியோடு 482 கோடி ரூபாயை நம்முடைய தமிழக அரசு இப்போது ஒதுக்கி இருக்கிறது.

உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்த அளவிலே, மாநில அரசு வரி வசூலிலே இருந்து உள்ளாட்சி மன்றங்களுக்காக ரூ. 845 கோடி வழங்கப்பட்டு வந்ததை, வரும் நிதியாண்டிலேயிருந்து ரூ. 1036 கோடியாக உயர்த்தியதோடு கேளிக்கை வரியோடு சேர்த்து மொத்தம் 2401 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு எதுவுமே வழங்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு உச்சந்தலையில் அடித்ததைப்போல உள்ளது. தமிழகம் மாத்திரம்தான் இந்திய நாட்டிலே மற்ற மாநிலங்களைவிட அதிகமான அளவிலே உள்ளாட்சிகளுக்கு மரியாதை கொடுக்கிறது. அதற்குரிய தொகையையும் அளிக்கிறது என்பதைச் சிறப்பாக இது எடுத்துக்காட்டுகிறது. அதைப்போலவே ஊரக வளர்ச்சியிலும் சரி, வேலைவாய்ப்பிலும் சரி, மழை பெய்யாது பொய்த்துவிட்டால், கிராமப்புற மக்களுக்கு எந்தவகையிலாவது வேலைவாய்ப்பை ஏற்படுத்திட வேண்டும் என்பதற்காக கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தையும், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தையும் ஏற்படுத்தி அதற்காக மத்திய அரசினுடைய துணையோடு 292 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதும் பாராட்டுக்குரியதாகும்.

சாலைகளைப் பொறுத்த அளவிலே 11,600 கிலோமீட்டர் கிராமச் சாலைகள் தார்ச் சாலைகள் ஆகவும், கிராமங்களிலே, நகரங்களிலே உள்ள 5,000 கிலோமீட்டருக்குரிய தெருக்கள் எல்லாம் சிமெண்ட் தளங்களாகவும் ஆவதற்காக ரூ.900 கோடி ஒதுக்கி இருப்பதும் மிகச் சிறந்த ஒன்றாகும்.

அதைப்போலவே நம்முடைய ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களால் இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கக்கூடிய உழவர் சந்தை என்பது உலக வரலாற்றில் மிகச்சிறந்த ஒன்றாகும். பொதுவாக வேளாண் பெருமக்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு வரப்பிரசாதம் என்றுதான் சொல்ல



2000 மார்ச் 27] [திரு. வ. வேலுசாமி]

வேண்டும். நான் ஒரு விவசாயி என்ற முறையிலே சொல்கிறேன். சந்தையிலே கொண்டுபோய் விற்கும்போது அதிலே எந்த அளவிலே கமிஷன் எடுக்கிறார்கள், எந்த அளவிலே தூக்குக் கூலி, இறக்குக் கூலி என்று எடுக்கிறார்கள் என்பது எல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் அவை எல்லாம் இல்லாமல், விவசாயிகளே நேரடியாகச் சென்று தங்களுடைய பொருட்களை விற்பதினால் அதிகமான பணத்தையும், அதே அளவிலே நுகர்வோர்களுக்கு ஆதாயமான முறையிலே அவர்கள் பெற்றுக்கொள்வதும் மிகச் சிறந்த ஒன்று. இது மக்களால் பெரிதும் பாராட்டப்படுகிறது, வரவேற்கப்படுகிறது. உழவர்களுக்கு பால் வார்க்கக்கூடிய இந்த உழவர் சந்தைகளை பல்வேறு இடங்களிலே ஆரம்பித்து அவர்களுக்கு உதவி வழங்கிட வேண்டுமென்பதினையும் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

அதைப்போலவே 'பூமாலை' என்ற வணிகச் சின்னத்தோடு எல்லா மாவட்டங்களிலும் விற்பனை மையங்களை ஏற்படுத்தி இருப்பதும் உழவர்களுக்காக இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்து இருப்பதும் உழவர் பெருமக்களை மேலும் ஊக்குவிப்பதாக இருக்கிறது.

மத்திய அரசு இப்போது நிறைவேற்றியுள்ள பூகோளக் குறியீடுகளின் (Geographic indications) பிரகாரம் சட்டத்தின் மூலமாக காஞ்சிபுரம் பட்டு, மதுரை சுங்கடிச் சேலை, தஞ்சாவூர் தட்டு, பவானி ஜமக்காளம், பத்தமடை பாய், சுவாமிமலை வெண்கலச் சிலை போன்ற முக்கியமான ஒருசில பொருட்கள் எங்கேயுமே மற்றவர்களால் தயாரிக்கப்பட முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தப் பொருட்களை அவர்கள் மட்டுமே தயாரிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி, இந்தியா மட்டுமின்றி, உலக அளவிலே அவற்றை வேறு யாரும் தயாரிக்கக் கூடாது என்றும், உலக வர்த்தக நிறுவனம் - World Trade Organisation என்று சொல்லக்கூடிய அந்த வர்த்தக நிறுவனத்தால் உறுதிசெய்யப்பட்டு இருப்பதற்கும், உலகச் சந்தை கிடைக்க முயற்சி எடுப்பதற்கும், மதுரை சுங்கடிச் சேலைக்கு பெயர் போன மதுரைக்காரன் என்ற முறையிலே தலைவர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அதைப்போலவே அண்ணா மறுமலர்ச்சித் திட்டமும், நமக்கு நாமே திட்டமும் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று அதிகமான முறையிலே அவை பயன்பட்டு வருகின்றன.

[திரு. வ. வேலுசாமி] [2000 மார்ச் 27

ஊரகக் குடிநீர்த் திட்டம் பற்றி எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 7 நாட்களுக்கு ஒரு முறை, 10 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் வருகிறது என்று சொன்னார்கள்; எங்களைப்போன்ற வறட்சியான மாவட்டத்தைச் சார்ந்த இராமநாதபுரம் பகுதியில்கூட நாங்களெல்லாம் குடங்களைத் தூக்கிக்கொண்டு ஊர் ஊராக, கிராமம் கிராமமாக அலைந்து ஒரு குடம் தண்ணீர்கூடக் கிடைக்காமல் இருந்த ஒவ்வொரு கிராமத்திற்கும் இப்போது வேண்டிய அளவுக்குத் தண்ணீர் கிடைக்கக்கூடிய வகையிலே பல்வேறு இடங்களிலே, கடல்நீரைக்கூட நன்னீராக ஆக்கி ஒவ்வொரு கிராமத்திற்கும் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது; போதுமான அளவில் அது வழங்கப்பட்டு வருகிறது என்பதனையும் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அதுமாத்திரமல்ல. அதற்காக ஒதுக்கி இருக்கக்கூடிய தொகையையும் அதிகப்படுத்தி அனைத்து மக்களும் குடிநீர் பெறுவதற்காக உழைத்து வரக்கூடிய தலைவர் கலைஞர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையிலே மீண்டும் விவசாயிகளுக்காக பல்வேறு வழிகளிலே ஒப்பற்ற தலைவர் அவர்கள் பல திட்டங்களை உருவாக்கி இருக்கின்றார்கள். புதிய வேளாண் கொள்கையை உருவாக்கி, உயர்நிலைக் குழுவை அமைத்து இருக்கின்றார்கள். அதேபோல பல்வேறு மாவட்டங்களிலே குளிர்பதனக் கூடங்கள், இன்னும் எத்தனையோ சிமெண்ட் தளங்கள், விவசாயிகளுக்கு சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள், பாசன ஏரிகள் சீர்படுத்துதல், நில உரிமைப் பதிவேடு முறையை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தக்கூடிய ஒரு தன்மை; தவணை தவறிய கடன்களுக்கு அபராத வட்டித் தொகை தள்ளுபடி—இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களை உருவாக்கியதோடு, நம்முடைய தலைவர் அவர்கள் இப்போது ஓர் அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதிலேகூட கண்ணுக்குத் தெரியாத அளவிலே விவசாயிகளுக்காக அவர்கள் பயன்படுத்திய மின்சாரத்திற்காக 836 கோடி ரூபாயையும் தள்ளுபடி செய்து இருக்கிறார்கள் என்பது உழவர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமேயொழிய, வேறு ஒன்றுமில்லை.

அதைப்போல மீனவர்களையும் விட்டுவைக்கவில்லை; கடலிலே சென்று கொண்டுவரக்கூடிய மீன்களை விற்பனை செய்ய இயலாத நிலை மீனவர்களுக்கும் இருக்கிறது. அதற்காக தலைவர் கலைஞர் அவர்கள் மீனவர்கள் அங்காடிகள் அமைத்து, ஏலக் கூடங்களையும் உலர் தளங்களையும் அமைத்து இருக்கிறார்கள்.



2000 மார்ச் 27] [திரு. வ. வேலுசாமி]

கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தினை ஆரம்பித்து பல இலட்சக்கணக்கான கால்நடைகளைப் பாதுகாத்து அதன்மூலம் கால்நடை அபிவிருத்தி செய்வதற்காக திட்டங்கள் உருவாக்கப்பட்டு இருப்பது வரவேற்கக்கூடியதாகும்.

அதைப்போலவே தொழில் வளர்ச்சியிலே தமிழகம் முதலிடம் பெற்று இருக்கிறது என்றால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய முயற்சியால், அவர்களுடைய கடுமையான உழைப்பால், அவர்களுடைய சிறந்த தந்திரத்தால் பல்வேறு இடங்களிலிருந்து தொழில் முனைய வருபவர்கள் இங்கே வந்து ஆரம்பித்துக் கொண்டிருக்கிறார்கள். *(மணியடிக்கப்பெற்றது)* அதன்காரணமாக இன்று கார் தொழிற்சாலை வந்தது. இந்த கார் தொழிற்சாலை மூலமாக பல நிறுவனங்கள் உருவாகி பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கிறது. இப்போது பன்னாட்டு விமான நிலையமும் ஆரம்பிக்கப்பட உள்ளது. பல்வேறு கலவரங்கள் நடந்து வரக்கூடிய எங்களுடைய தென் பகுதியிலே தொழில் ஆரம்பித்தால், அந்தக் கலவரங்கள் எல்லாம் தடுக்கப்படும் என்ற முறையிலே நாங்குநேரியிலே உயர் தொழில் நுட்ப தொழிற் பூங்கா ஒன்றும் - (High-tech Industrial Park) அதைப்போல கடலூரிலே தொழிற் பூங்காவும், சென்னை அருகே ஆடை தயாரிக்கும் பூங்காவும் ஓசூரில் மலர்ப் பூங்காவும்-இப்படி பல்வேறு வகையிலே தொழிற் பூங்காக்கள் ஆரம்பிக்க இருப்பதால், தொழில்கள் பெருகி, மக்கள் தங்களுடைய கவனத்தை அங்கே செலுத்தி, வீண் சச்சரவுகளை நீக்குவதற்கு வழிவகை செய்யும் என்பதையும் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-50*

தகவல் தொழில்நுட்பத் துறையில் `Information Technology'-யைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது. உலக அளவிலே பேசக்கூடிய அளவிலே, உலகத்திற்கே மென்பொருட்களை ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிலே முதல் இடமாக சென்னை வந்து கொண்டிருக்கிறது என்பதை நினைக்கும்போது—நாம் பொதுவாக இந்தியர்கள், அதிலும் குறிப்பாக தமிழர்கள். தமிழர்கள் கெட்டிக்காரர்கள், சிறந்தவர்கள், வல்லவர்கள், வல்லுநர்கள் என்பதை தெள்ளத்தெளிவாகக் காட்டக்கூடிய ஒரு நிலையை உருவாக்கி இருப்பதே நம்முடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். இதை மிகச் சிறப்பான முறையிலே—நான் மாத்திரம் அல்ல, பல்வேறு நாடுகளிலே இருக்கக்கூடிய நிறுவனங்களும் பல்வேறு ஏடுகளும், பல அறிக்கைகள் வாயிலாகத்

[திரு. வ. வேலுசாமி] [2000 மார்ச் 27

தெரியப்படுத்தும்போது நாமெல்லாம் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கு எந்த வழியில் கடமைப்பட்டிருக்கிறோம் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

இப்போது மென்பொருள் ஏற்றுமதியிலே இந்திய அளவிலே தமிழகம் முதல் இடம் வகிக்கிறது என்றால், 1996-க்குப் பிறகு, தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்திட்ட நடவடிக்கையும், அதற்காக உழைத்திட்டவர்களும்தான் இதற்கு முழுமுதற் காரணமாக இருந்திருக்கிறார்களேயொழிய வேறு எவரும் இல்லை. இதற்கு முன்பாக இருந்த அரசுகள் எல்லாம் இதைப் பற்றிச் சிந்திக்காமல், என்னவென்றே தெரியாத அளவிற்கு இருந்தார்கள். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாக கடந்த 4 ஆண்டுகளிலே தமிழகம் மிகச் சிறப்பான அளவில் முதல் இடம் பெற்றிருக்கிறது என்பதை நினைத்து நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இதற்காக நம்முடைய தலைவர் அவர்களை நாம் பாராட்டுவதற்கும் கடமைப்பட்டிருக்கிறோம்.

கல்வியைப் பொறுத்தவரையில் அதற்கான நிதியை உயர்த்தி, கல்விக்கூடங்கள் இல்லாத குக்கிராமங்களே இல்லை என்ற நிலை இப்போது உருவாக்கப்பட்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலனைப் பொறுத்த அளவிலே அவர்களெல்லாம் தலைவர் அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறார்கள் 6 ஆம் வகுப்பு படிக்கக்கூடிய மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபின இனத்தைச் சேர்ந்த 30,000 மாணவியருக்கு தலா 100 ரூபாய் வீதம் மாதந்தோறும் வழங்கப்போவதாக தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லியிருப்பதும், அதைப்போலவே, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின இன மாணவிகள் நடுநிலைப் பள்ளி வரை படிக்கச் செய்வதற்கான வசதி வாய்ப்பினை ஏற்படுத்திட வேண்டுமென்பதற்காக 3 ஆம் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்பு வரையில் பயிலும் 60,000 மாணவியர்களுக்கு ஓராண்டுக்கு ரூபாய் 500 ஊக்கத் தொகை கொடுக்கக்கூடியது மீண்டும் அவர்களை உற்சாகப்படுத்தி—பல்வேறு இடங்களிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும்—இப்படிப்பட்ட மக்கள்தான் தேவையில்லாத முறையிலே சண்டை சச்சரவுகளிலே ஈடுபட்டு, கலவரங்களெல்லாம் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிறது. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்ட நம்முடைய ஒப்பற்ற தலைவர் அவர்கள், சமூகப் பொருளாதார ரீதியில் கல்வியிலே, அவர்கள் குறைவாக இருக்கக்கூடிய காரணத்தினாலும், அறியாமையின் காரணமாகவும் இப்படிப்பட்ட விளைவுகள் எல்லாம் வருகின்றன என்பதைக் கருத்தில் கொண்டு—எப்படியும் அவர்களை படித்தவர்களாக ஆக்கிட வேண்டுமென்பதற்காக



2000 மார்ச் 27] [திரு. வ. வேலுசாமி]

தலைவர் கலைஞர் அவர்கள் இப்போது உதவி செய்யக்கூடிய இந்தத் திட்டத்தினை உருவாக்கி இருக்கிறார்கள். இந்தத் திட்டத்திற்காக மிகப் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர் மரபினர் மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்த பட்டா வழங்கக்கூடிய திட்டம். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய 15 வட்டங்களில் 4 வட்டங்கள் புறம்போக்கு இடங்கள். புறம்போக்கு இடங்கள் என்றால், மிகச் சிறிய இடத்திலே ஒரு சந்துக்குள்ளே சென்று வந்தால், ஆயிரக்கணக்கானவர்களைச் சந்திக்கக்கூடிய அளவிலே, மிகச் சிறிய பகுதியிலே வசிக்கக்கூடியவர்களுக்கு 50 ஆண்டுகாலமாக அங்கே வசித்தாலும் அவர்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை. இதை சட்டமன்றத்திலே பல்வேறு சந்தர்ப்பங்களிலே நானும் பேசியிருக்கிறேன். அதன் வாயிலாக இப்போது ஒரு வரப்பிரசாதமாக இந்த மக்களுக்கெல்லாம் பால் வார்க்கக்கூடிய தன்மையிலே, அதுவும் 20 ஆண்டு என்று இருந்ததை 10 ஆண்டாகக் குறைத்து, குடியிருக்கக்கூடிய அனைவருக்கும் பட்டாக்கள் வழங்கப்படும் என்று சொல்லியிருப்பது, ஏழையெளிய மக்களுக்கு கை கொடுத்து உதவியது போல் ஆகும் என்பதையும் இந்த நல்ல நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மதுரையைப் பொறுத்தவரையிலே அது நெசவாளர்கள் அதிகமாக வசிக்கக்கூடிய தொழில் செய்யக்கூடிய இடம். நெசவாளர்களைப் பொறுத்தவரையிலும், நம்முடைய தலைவர் அவர்கள், 60 வயதிற்கு உட்பட்டவர்கள் இறக்க நேரிடின் அவர்களுக்கு காப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டு வந்த ரூ.35,000 என்பதை 40,000 ரூபாயாக உயர்த்தி, அதற்குப் பின்பு இப்போது 50,000 ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அதைப்போல 60 வயதைத் தாண்டிய நெசவாளர்கள் பயன்பெறும் வகையிலே அவர்களுக்கு ஓய்வூதியத் தொகையாக வழங்கப்பட்டு வந்த 150 ரூபாயை 200 ரூபாயாக உயர்த்திருப்பதும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். ஆகவே நெசவாளர் பெருமக்கள் அனைவரும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு பொதுவாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-55

தொழிலாளர்களைப் பொறுத்த அளவிலே சொல்லவே வேண்டாம். எத்தனையோ நல வாரியங்கள். அமைப்பு சாரா தொழிலாளர்கள் அனைவருக்கும் தனிப்பட்ட முறையிலே பல்வேறு நல வாரியங்களை அமைத்துத் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். விவசாயத் தொழிலாளர்களுக்கு இதுவரையில் இல்லாத அளவிலே, சட்டமன்றக்

[திரு. வ. வேலுசாமி] [2000 மார்ச் 27

கூட்டத்திற்கு முன்பே, அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி அவர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு நல வாரியம் அமைத்ததுபோல தையல் தொழிலாளர்களுக்கும் நல வாரியம் அமைத்திருக்கிறார்கள். ஆட்டோ ஓட்டுநர்களும், வாடகை ஊர்தி ஓட்டுநர்களும் அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினால் அவர்கள் அனைவரையும் அழைத்துப்பேசி நிச்சயம் உங்களுக்கென்று ஒரு தனி நல வாரியம் அமைக்கப்படும் என்று சொல்லி, இப்போது அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்றால், தொழிலாளர்கள் அனைவரும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்து தென்மாவட்டங்களுடைய வளர்ச்சி. தென் மாவட்டங்களினுடைய வளர்ச்சிக்காக தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு குழுவையே ஏற்படுத்தி உள்ளார்கள். ஓய்வு பெற்ற நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் அவர்களுடைய தலைமையிலே ஏற்படுத்தப்பட்ட அந்தக் குழு இப்போது இடைக்கால அறிக்கையை அளித்திருக்கிறது. அந்த மாவட்டங்களின் மக்கள் எல்லாம், தொழிலிலே ஈடுபட்டுவிட்டால் கலவரங்கள் இருக்காது என்பதற்காக பல்வேறு திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இராமநாதபுரம், விருதுநகர், தேனி போன்ற இடங்களில் புதிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களையும், குளங்கள், கண்மாய்கள் புனரமைப்புத் திட்டங்களையும், தென்மாவட்டங்களில் தொழில்நுட்பவியல் வசதிகளை உருவாக்கி அதன்மூலம் வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்கவும், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலே மென்பொருள் தொழில்நுட்ப பூங்காக்களை அமைத்து, அதன் வாயிலாக வேலைவாய்ப்பை அதிகப்படுத்தவும், கன்னியாகுமரியிலே இரப்பர் தொழிற் பூங்கா, நாங்குநேரியிலே High-tech தொழில்நுட்பப் பூங்கா, குளச்சல் துறைமுக மேம்பாடு போன்ற பல்வேறு திட்டங்களைப் புகுத்தி, தென்மாவட்ட மக்கள் எல்லாம் நல்ல முறையிலே வாழ்வதற்குரிய திட்டங்களை உருவாக்கி இருக்கிறார்கள். நான் தென் மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை மாநகரத்திலே எங்களுக்கெல்லாம் கிடைக்கவே கிடைக்காத ஒன்று இப்போது கிடைத்திருக்கிறது. தென்பகுதியிலே உள்ள 16 மாவட்டங்களுக்காக உயர் நீதிமன்றத்தினுடைய ஒரு கிளையை ஆரம்பிக்க வேண்டுமென்று நாங்கள் பல்லாண்டுகளாக எடுத்துரைத்தோம். பல்வேறு போராட்டங்களை நடத்தினோம். முன்னால் இருந்த அரசுகள் எல்லாம் இதைப்பற்றிக் கவலை கொண்டதாகவே தெரியவில்லை. நம்முடைய ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றவுடன்



2000 மார்ச் 27] [திரு. வ. வேலுசாமி]

உடனடியாக அதற்குரிய நிலத்தைக் கையகப்படுத்தி, இப்போது வர இருக்கின்ற ஏப்ரல் 13 ஆம் தேதியன்று அடிக்கல் நாட்ட வருகின்றார்கள் என்று சொல்லும்போது தென்னக வழக்கறிஞர்களின் சார்பாக, நானும் ஒரு வழக்கறிஞர் என்ற முறையிலே, தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வணிக வரியைப் பொறுத்த அளவிலே ஒன்றே ஒன்று. அறைஞாண் கயிறு, எனது பகுதியிலே அதிகமாகத் தயாரிக்கக்கூடிய ஒன்று. அதுபோலவே நாட்டுச் சர்க்கரை மற்றும் கற்கண்டு; அவையும் என்னுடைய பகுதியிலே அதிக அளவில் தயாரிக்கக் கூடியவை. தமிழ் தினசரி காலண்டர், காகித உரைகள் மற்றும் பைகள் இவற்றிற்கு வணிக வரியைக் குறைக்க வேண்டுமென்று—இவை ஒரு சாதாரண குடிசைத் தொழில் போன்றது என்று—கேட்டுக்கொண்டதற்கிணங்க தலைவர் கலைஞர் அவர்கள் குறைத்திருக்கிறார்கள். குறைக்கவில்லை, அறவே நீக்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின்கீழ் மிகவும் அதிகமான வேலைகளைச் சிறப்பான முறையிலே செய்ய இயலுகிறது. எனவே, அதை இன்னும் கொஞ்சம் சிறிது கூட்டித் தந்தால், மிக நன்றாக இருக்கும். சொன்ன வேலையைச் செய்ய இயலும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு) 1 கோடி ரூபாயா? நீங்கள் எல்லோரும் கேளுங்கள், நானும் சொல்கிறேன். இந்த அருமையான நிதிநிலை அறிக்கையிலே பேசக்கூடிய வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தமைக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

***திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை, தோட்டத்தில் உள்ள பல மலர்களை காயப்படுத்தாமல் வீசுகின்ற காற்றைப்போல, நம்முடைய முதல்வருடைய உள்ளத்தில் எழுந்த பிரதிபலிப்புகள்தான் என்பதை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள் 'வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்று சொல்வார்கள். அதைப்போல 'வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும், தமிழ் நாடாக இருக்கட்டும், தமிழ் மக்களாக இருக்கட்டும்' என்ற உன்னத நோக்கத்தோடு இந்த நிதிநிலை அறிக்கை படைக்கப்பட்டதாகவே நான் கருதுகிறேன். எனவேதான் நம்முடைய முதல்வர் அவர்கள் கருவிலே உருவாகும்

[திரு. ரா. சேதுநாதன்] [2000 மார்ச் 27

குழந்தை முதல் இடுகாட்டிற்குச் செல்லும் முதியவர் வரைக்கும் எண்ணற்ற திட்டங்கள், ஊதிய உயர்வுகள், ஓய்வு ஊதியங்கள் என்று இப்படி எண்ணற்ற சாதனைகளைத் தங்களுடைய முத்திரையாக நிதிநிலை அறிக்கையிலே படைத்திருக்கிறார்கள், பதித்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-00*

கடந்த காலத்தில் சாலைகளைப் பற்றி கவலைப்படாமல் தன்னுடைய சேலைகளைப் பற்றி மட்டுமே கவலைப்பட்டவர்கள் ஆண்ட காலத்தில், சாலைகள் இருந்த நிலைகளை எல்லாம் நாம் அறிவோம். ஆனால் நடப்பு நிதியாண்டிலும், வரும் நிதியாண்டிலும் தார்ச் சாலைகள் 15,200 கிலோ மீட்டர் அளவுக்கு போடப்பட இருக்கின்றன. சிமெண்ட் வீதிகள் 7,800 கிலோ மீட்டர்கள் போடும் பணி நடந்து முடிந்தும் சில இடங்களில் நடைபெற்றுக்கொண்டும் இருக்கின்றன. இவற்றைப் பார்க்கின்றபோது நாட்டு மக்கள் பிரமிக்கிறார்கள். வேலைகளை எண்ணிப் பார்க்கிறார்கள். இந்தச் சாலைகள் எங்கே இருந்து வந்தன என்று எண்ணிப் பார்க்கிறார்கள். நாங்கள் கிராமங்களுக்குச் செல்கின்றபோது சாலையில் குண்டும், குழியும் இருக்கிறதே, இதில் பார் மண் கொட்டக் கூடாதா என்று கேட்பார்கள். ஆனால் இப்போது மக்கள் நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள். ஒரு கான்கிரீட் சாலை போடுங்கள் என்று கேட்கிறார்கள். அந்த அளவுக்கு மக்களின் எண்ணத்தை, நாட்டின் தரத்தை, கிராமத்தின் வளத்தை எண்ணத்திலேகொண்டு நம்முடைய முதல்வர் அவர்கள் தீட்டி இருக்கின்ற திட்டங்கள் நாட்டு மக்களுக்காக, நம்முடைய மக்களுக்காக என்பதை நாங்கள் உணர்கிறோம், மக்களும் உணர்கிறார்கள்.

உழவர் சந்தை பற்றி எத்தனை முறை சொன்னாலும் இனித்துக் கொண்டே இருக்கும். குறிப்பாக, திண்டிவனத்திலே ஒரு நாளைக்கு 8,000 பேர், 9000 பேர் நுகர்ந்து கொண்டு இருக்கின்ற சந்தையில் ஏறத்தாழ 50,000, 60,000 ரூபாய்க்கு வியாபாரம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்கள் மகிழ்ச்சியுடன் சந்தைக்கு வருகிறார்கள். இரண்டு மணி நேரத்தில் கொண்டுவந்த பொருட்களை விற்றுவிட்டு வீடு திரும்புகிறார்கள். ஒரு நாள் முழுவதும் நாங்கள் கத்தி, கத்தி சாலைகளில் விற்றால் அல்லது கடைத் தெருவில் விற்றால் பாதி விலைக்குத்தான் போகும்; ஆனால் உட்கார்ந்த இடத்தில் இப்போது நல்ல விலைக்கு நாங்கள் எங்கள் பொருட்களை விற்று, பணத்தை எடுத்து, விரைவாக வீடு செல்கிறோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். நம்முடைய கலைஞருடைய சிந்தையிலே உதித்த இந்த 'உழவர் சந்தை' திட்டம் மகத்தான ஒரு திட்டம். இந்த நேரத்தில் என்னுடைய



2000 மார்ச் 27] [திரு. ரா. சேதுநாதன்]

வேண்டுகோள் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். உழவர் சந்தை இருக்கிற வளாகத்திலே ஒரு நாளைக்கு 5,000, 6,000 மக்கள் வந்து போகிறார்கள். மகளிர் வந்து போகிறார்கள். காய் கறிகளை வாங்கிச் செல்வதற்கு பெண்கள் வந்து செல்கிறார்கள். எனவே அந்த வளாகத்திலே ஒரு 'Super Market' ஏற்படுத்தி, அவர்கள் மளிகைப் பொருட்களையும் வாங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் 'பூமாலை' திட்டம். கிராமப் பகுதியில் உருவாக்கப்படுகின்ற கைவினைப் பொருட்களை விற்பதற்கு இடம் இல்லாமல் மக்கள் தெருவில் அலைகிறார்கள். மரத்தடியிலும் விற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அந்த நிலையைப் போக்கி, உழவர் சந்தை இருக்கிற இடத்திலேயே, அந்த வளாகத்திற்குள்ளாகவே ஏழை எளிய மக்கள் செய்கின்ற கைவினைப் பொருட்களை விற்பதற்கு ஓர் இடத்தைத் தெரிவு செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் 4 ஆண்டுகளில் 2,84,000 இலவச கான்கிரீட் வீடுகள் பயனாளிகளால் கட்டி முடிக்கப்பட்டு நன்றாக இருக்கின்றன என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. அதே நேரத்தில் இப்போது 90 கோடி ரூபாய் செலவில் 31,000 வீடுகள் முடிக்கப்படும் நிலையில் உள்ளன. என்னுடைய வேண்டுகோள் 10, 15 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்ட ஓட்டு வீடுகள், கான்கிரீட் வீடுகள் பழுதடைந்து, சிலகமாக இருக்கின்றன, விழுகின்ற நிலையில் இருக்கின்றன. உண்மையிலேயே சொல்கிறேன். மக்கள் அங்கே உள்ளே குடி இருக்காமல், வெளியே கொட்டகை போட்டுக்கொண்டு, அந்த வீட்டை தனிமைப்படுத்திவிட்டார்கள். குடியிருக்கிற வீடுகளை விட்டுவிட்டு கொட்டகைகளில் இருக்கிறார்களே, அந்த நிலையைப் பார்த்து ஒரு வீட்டிற்கு 5,000, 6,000 ரூபாய் என்று ஒதுக்கி—ரூ. 35,000 ஒரு வீட்டிற்கு என்று கொடுக்கிறோமே, அந்தப் பணத்தை சராசரியாக 7 வீடுகளுக்குப் பிரித்து—அந்த வீடுகளைச் செப்பனிட்டால் கொட்டகைகளிலே வாழ்கிறவர்கள் மீண்டும் அந்த கான்கிரீட் வீடுகளில் வாழ்வார்கள். அதைப் பயனாளிகளே கட்டுவதற்கு அனுமதித்தால் நலமாக இருக்கும். வீடும் பலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அந்த இடிந்த வீடுகளில் குடி இருக்காமல் மரத்தின் கீழும் குடி இருக்கிறார்கள். ஏனென்றால் சுவர் விழுந்து விடுமோ, ஓடு விழுந்து விடுமோ, கான்கிரீட்டில் ஒட்டிக் கொண்டிருக்கிற சிமெண்ட் விழுந்து விடுமோ என்று பயந்துகொண்டு வெளியே இருக்கிறார்கள். எனவே தாங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே இடிந்த வீடுகளைப் புதுப்பிப்பதற்காக ரூ.5,000

[திரு. ரா. சேதுநாதன்] [2000 மார்ச் 27

அல்லது 6,000 ஒதுக்கினால் போதும் என்று கேட்டுக்கொண்டு அதைப் பரிசீலிக்க வேண்டும் என்றும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறார்கள். ஆனால் ஒரு வேண்டுகோள். அரிசியைப் பொறுத்தவரையில் 82 சதவிகிதம்தான் எங்களுடைய மாவட்டத்திற்குக் கொடுக்கப்படுகிறது. அது போதாமல் இருக்கிறது. நான் வேண்டிக்கொள்வது என்னவென்றால், 92 சதவிகிதம் அல்லது 90 சதவிகிதம் கொடுத்தால் அனைத்து மக்களுக்கும் 20 கிலோ கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆனால் அதிகாரிகள் சொல்கிறார்கள் சிலர் வந்து வாங்குவது இல்லை, அது வீணாகவே இருக்கிறது என்று. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது வறுமையான மாவட்டம். அனைத்து மக்களும் அரிசி வாங்குகிறார்கள். அந்த மக்களுக்கு வழங்கப்படும் 82 சதவீதத்தை உயர்த்தி 92 சதவீதமாகக் கொடுத்தால் அனைவருக்கும் 20 கிலோ அரிசி நிறைவாகக் கிடைக்கும் என்றும் அந்தக் குறையைப் போக்க வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அடுத்து சாதி, வருமானம், இருப்பிடச் சான்றிதழ்களைப் பொறுத்தவரையில் அது மிகச் சாதாரணமாக இருக்கலாம். ஆனால் மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களும் தாலுகா அலுவலகத்திற்குச் சென்று எத்தனை முறை நடந்தால் அந்தச் சான்றிதழ் கிடைக்கும் என்பது நமக்குத் தெரியும். ஆனால் கலைஞர் அவர்கள் அது குறித்து தெளிவாக உணர்ந்து, அந்தப் பிள்ளைகளுடைய நிலையை அறிந்து இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். எங்கள் திண்டிவனத்தைப் பொறுத்தவரையில் நானே ஒரு பள்ளிக்குச் சென்று, ஒரு நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சாதிச் சான்றிதழ்களை வழங்கியிருக்கிறேன். அறிவிக்கின்றபோதே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது என்று சொன்னால், வேகமான முதலமைச்சர், விவேகமாகச் செயல்படுகின்ற காரணத்தால் அரசு ஊழியர்களும் ஒத்துழைப்பு கொடுத்து வேகமாகச் செயல்படுகிறார்கள் என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மண்ணெண்ணெய் பங்க்கள் இப்போது நகரங்களில் இருக்கின்றன. அது வரவேற்கக்கூடிய ஒன்று. 5 ஆயிரம் மக்கள் இருந்தால் அங்கே ஒரு பங்க் என்று அறிவித்திருக்கிறீர்கள். பாராட்டுக்குரியது. இதையெல்லாம் பாராட்டாமல்—எதிரிலே இருப்பவர்கள் குறை சொல்ல வேண்டும் என்று விரும்பவில்லை—எதிரிலே இருப்பவர்கள் ஏதோ



2000 மார்ச் 27] [திரு. ரா. சேதுநாதன்]

பேசுவார்கள், ஏதோ கூச்சல் இடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். இல்லை. பேசவில்லை. உள்ளத்திலே மறைத்துக்கொண்டு உதட்டிலே பேசுகிறார்கள். அவர்கள் வார்த்தையில் வேகமில்லை; அவர்கள் வார்த்தையிலே சூடு இல்லை. வேறு எதையும் நான் சொல்ல விரும்பவில்லை. அத்துடன், அவர்கள் அமைதியாக இருப்பது பாராட்டுக்குரியது. அவர்கள் வேகமாகப் பேசவில்லை. காரணம், உள்ளம் இடம் தரவில்லை. உன்னதத் திட்டங்களைக் குறை சொல்வதற்கு யாருக்கு உள்ளம் இடம் கொடுக்கும்? எனவே அவர்களை நான் பாராட்டுகிறேன்; நீங்களும் பாராட்டுகிறீர்கள். நான் ஏடுகளைப் பார்க்கிறேன். நாட்டு மக்களோடு நெருங்கிப் பழகுகிறேன். யாராவது குறை சொல்வார்களா என்று கேட்கிறேன். என்னங்க குறை இருக்கிறதா? நான் மற்றக் கட்சிக்காரர்களைக் கேட்கிறேன்? 'ஒன்றும் குறை இல்லிங்க, ரொம்ப சூப்பர் பட்ஜெட்டுங்க, உங்கள் தலைவர் சூப்பர் பட்ஜெட் போட்டிருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். நான் நெகிழ்ந்து போனேன். நீங்களும் அந்தக் கருத்துக்களைச் சொல்லி இந்த மன்றத்திலே பரிமாறிக்கொள்ள வேண்டுமென்ற ஆசையோடு இதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வேலைவாய்ப்பிலே நமது தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. பட்டியலிட்டால் நேரம் போதாது என்ற காரணத்தால், நான் சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

அடுத்து ஆசிரியர் பணியிடங்கள். புண்டத்தைப் போட்டு முண்டமாக்கியவர்கள், அன்று கல்வி அறிவைப் பற்றி கவலைப்படாதவர்கள், பள்ளிகளைப் பற்றிக் கவலைப்படாதவர்கள், நாளைய சமுதாயத்தைப் பற்றி கவலைப்படாதவர்கள், சந்ததியைப் பற்றி கவலைப்படாதவர்கள் அவர்கள். ஆனால் கவலைப்பட்டவர்கள் நாம். நீங்கள் இந்தத் துறையை மிகச் சிறப்பாகச் செயல்படுத்துகிறீர்கள். 40 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வேலை, போக்குவரத்துத் துறையிலே பல ஆயிரம் பேருக்கு வேலை, சாலைப் பணியாளர்கள் 10 ஆயிரம் பேருக்கு வேலை, காவலர்கள் 10 ஆயிரம் பேருக்கு வேலை, மக்கள் நலப் பணியாளர்கள் 18 ஆயிரம் பேருக்கு வேலை, இந்த நிதிநிலை அறிக்கையிலே 6 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வேலை, 4 ஆயிரம் சீருடைப் பணியாளர்களுக்கு வேலை, இன்னும் பல துறைகளிலே பல வேலைகள் கொடுக்கப்பட்டு, நேர்மையாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து நாட்டு மக்கள் மகிழ்ச்சியோடு உங்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும் வெளிநாட்டுத் தொழில் உதவியுடன் பல ஆலைகள் திறக்கப்பட்டு பல ஆயிரம் பேருக்கு வேலை அளிக்கப்பட்டு, இப்போது

[திரு. ரா. சேதுநாதன்] [2000 மார்ச் 27

மக்கள் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு, கடந்த தேர்தல் என்பதை மட்டும் நீங்கள் நெஞ்சிலே நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரவிருக்கும் தேர்தலை மனதிலே நிறுத்தி போடப்பட்ட பட்ஜெட் என்று சொன்னார்கள். நான் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். நாளைய தேர்தலைப் பற்றி சிந்தித்திருந்தால் மக்களுக்கு பயன் கிடைத்திருக்குமா என்று கேட்க விரும்புகிறேன். நாங்கள் தேர்தலைப் பற்றிக் கவலைப்படவில்லை. இந்தத் தேர்தலிலே வாய்ப்பை இழந்தவர்கள் அடுத்த தேர்தல் என்ன ஆகுமோ என்று கவலைப்படுகிறார்கள். நாங்கள் கவலைப்படவில்லை. மக்கள் நம் பக்கம் தெளிவாக இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு, முக்கனி, முத்தமிழ் என்று சொல்வதைப்போல திருச்சியும், நெல்லிக்குப்பமும், அறந்தாங்கியும் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் கேட்கிறேன், 50 ஆண்டுகளுக்குப் பின்னால் வரவிருக்கின்ற தண்ணீர்ப் பிரச்சினையை ஆய்ந்து, ஐ.நா. சபையில் வைத்த அந்த அறிக்கையை ஆய்ந்து முடிவு எடுக்கின்ற முதலமைச்சர் தமிழகத்தை ஆண்டு கொண்டிருக்கின்றார்கள். இது நாளைய தேர்தலுக்காகவா? இல்லை. நாளைய தலைமுறை ஒரு முதலமைச்சர் ஆண்டார், அவர் தண்ணீர்ப் பிரச்சினையைக் கொண்டுவந்து விட்டார், அப்போதே கவனித்திருந்தால் நீரைத் தடுத்து நிறுத்தியிருந்தால், குட்டைகளில் தண்ணீரைத் தேக்கியிருந்தால், மழை நீரைக் காத்திருந்தால், தண்ணீர்ப் பிரச்சினை வந்திருக்காது என்று அந்தச் சமுதாயம் சொல்லக் கூடாது என்பதற்காக இப்போது முதலமைச்சர் அவர்கள் முடிவெடுத்து, அந்த முயற்சியிலே இறங்கி இருக்கிறார்கள். இது தேர்தலுக்காக அல்ல.

சாதி, இருப்பிட, வருமானச் சான்றிதழ்கள் நாளைய தேர்தலுக்காக அல்ல. நாளைய தலைமுறை—நான் உண்மையிலேயே சொல்லிக்கொள்கிறேன், ஒரு சாதிச் சான்றிதழ் இல்லாமல் கல்லூரிக்கு மனு போடுகின்ற காலம் கடந்துவிட்ட வரலாறுகள் உண்டு, நிகழ்வுகள் உண்டு, அதை நினைப்பதுண்டு. அதை மறக்காமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல 666 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிமயம். இது நாளைய தேர்தலுக்காகவா? இல்லை. நாளைய சமுதாயத்திற்காக, இளைஞர்களுக்காக, பகுத்தறிவு பெறவிருக்கின்ற சமுதாயத்தைத் தெளிவுபடுத்துவதற்காக, வறுமையற்ற சமுதாயம், செழுமையான சமுதாயம் இந்த நாட்டிலே வளரவேண்டும், வாழவேண்டும் என்பதற்காக வாழ்ந்து கொண்டிருக்கின்ற முதல்வர் அவர்கள் தீட்டுகின்ற திட்டங்கள்



2000 மார்ச் 27] [திரு. ரா. சேதுநாதன்]

இவை. அதில் குறை சொன்னால், உதட்டளவில், அதை மறப்போம்; மன்னிப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

அடுத்து ஆரம்பப் பள்ளிகள் இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது என்று சொன்னால், அடுத்த தேர்தலுக்காகவா? இல்லை. இந்தத் தலைமுறை பகுத்தறிவு பெற வேண்டும்; பெரியார் சொன்ன கருத்துகள், அண்ணா சொன்ன கருத்துகள் இந்த நாட்டிலே தெளிவு பெற வேண்டும்; உறுதி பெற வேண்டும்; சட்டம் ஆக்கப்பட வேண்டும் என்ற உணர்வோடுதான் எல்லாக் கிராமங்களுக்கும் பள்ளிகள் என்ற ஓர் அருமையான திட்டம், கல்விக் கண் திறக்கின்ற திட்டம், கருத்தான திட்டம், முத்தான திட்டம். அது முதல்வரின் திட்டம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். என்னிடத்திலே ஒரு நண்பர் சொன்னார். இந்தப் பெண் பிள்ளைகளுக்கு, நடுநிலைப் பள்ளிகள் வரையிலே, ஏதாவது கொடுக்கச் சொல்லுங்கள்; M.B.C.-க்கெல்லாம் கொடுப்பதில்லை என்று சொன்னார். நான் இங்கே வந்து பேசலாம் என்று வந்தேங்க. இந்த அறிக்கையைப் பார்த்தால், நிதிநிலை அறிக்கையிலே சொல்லிவிட்டாருங்க; அங்கே ஒருவர் நினைத்ததை இங்கே நம் முதல்வர் நினைத்து, அறிவித்திருப்பதைக் கண்டு உண்மையிலேயே நான் உள்ளமெல்லாம் பூரித்துப் போகிறேன். மக்கள் தெளிவாகப் பாராட்டுகிறார்கள். என்னுடைய நண்பர்களெல்லாம் புகழ்கிறார்கள். இது ஏதோ நான் இந்த மன்றத்திலே புகழ வேண்டும் என்று அல்ல, அந்த அவசியமும் எங்களுக்கு இல்லை. ஆனால் மக்கள் சொல்கின்ற கருத்துகளை, எண்ணங்களை, உணர்வுகளை, நினைவுகளை இந்த மன்றத்திற்குச் சொல்வது என்னுடைய தார்மீகக் கடமை என்ற காரணத்தினால் சொல்கிறேன்.

மக்களை மதிக்கின்ற அரசு இந்த அரசு. ஆனால் கடந்த ஆட்சியில் மொட்டை அடித்து போராட்டம், கோவணப் போராட்டம், போன்றவை நடந்தன. நிர்வாணப் போராட்டம்தான் அப்போது இல்லை? ஏனென்றால் நடக்காது; சட்டப்படி தடுக்கப்பட்டுவிடும். அப்படிப் போராட்டம் செய்தவர்களை யார் பார்த்தார்கள்? ஏறெடுத்துப் பார்க்க மாட்டேன்; கோரிக்கையைக் கேட்க மாட்டேன்; எதையும் பேச மாட்டேன் என்று அரிதாரம் பூசியவர்கள் பிடிவாதம் செய்த காலம் மாறிவிட்டது. இப்போது விவசாயிகளை, வியாபார சங்கங்களுடைய பிரதிநிதிகளை, விவசாயச் சங்கங்களுடைய பிரதிநிதிகளை அழைத்து, உட்கார வைத்துப்பேசி, கருத்தைக் கேட்டு முடிவெடுத்து, பல சலுகைகளை அளித்ததால், அந்த மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் பாராட்டைப்

[திரு. ரா. சேதுநாதன்] [2000 மார்ச் 27

பெற முடியுமா? அவர்கள் பாராட்டுகிறார்கள். ஒருசில குறைகள் இருக்கும். வீடிருந்தால் குறை இருக்கும். அதைப்போல, சிறு குறைகளைப் போக்குவதற்கு கலைஞர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் ஒட்டுமொத்தமாக பெரும்பாலான மக்கள் பாராட்டுகின்ற ஒரு வரவு-செலவுத் திட்டம் இது என்பதில், உங்களுக்கும் ஐயமில்லை; எங்களுக்கும் ஐயமில்லை; நாட்டு மக்களுக்கும் ஐயமில்லை பல ஏடுகளுக்கும் சந்தேகம் இல்லை; பாராட்டிக் கொண்டிருக்கின்றன.

அடுத்து பட்டா வழங்குவதைப் பொறுத்தவரையில், 20 ஆண்டுகளை 10 ஆண்டுகளாகக் குறைத்துள்ளீர்கள். என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், மக்கள் ஆவலோடு இருக்கிறார்கள். இதற்கு அதிகாரிகளைக் கொண்ட குழுக்களைப் போட்டிருக்கிறீர்கள். அதிகாரிகள் சில நேரங்களில் சட்டத்தைப் பேசி நியாயத்தை, தர்மத்தை விட்டுவிடுவார்கள். அந்த நேரத்தில் நியாயமும், தர்மமும் புறக்கணிக்கப்படாமல் பார்ப்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாக முடிவெடுத்து அறிவிக்க வேண்டும். ஒரு குட்டைப் புறம்போக்கு என்று எடுத்துக் கொண்டால், அது குட்டைங்க; அந்த classification-ல் கொடுக்க முடியாது என்று சொல்வார்கள். நான் கேட்கிறேன்; குட்டையிலே தண்ணீர் இருக்காது. குட்டையே அங்கே இருக்காது. சிறியதொரு ப்ள்ளம் இருக்கும். அதைக் கொடுக்க முடியாது என்று சொல்வார்கள். ஆனால், மக்கள் அங்கே மெத்தைவீடு கட்டி இருக்கிறார்கள். ஓட்டுவீடு கட்டி இருக்கிறார்கள். அதையெல்லாம் புறக்கணித்து விட்டால், சற்று சங்கடம் வந்துவிடும். எனவே தர்மத்தோடும், நியாயத்தோடும் பரிசீலிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு அதிகாரிகளுக்கு நீங்கள் உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நெசவாளர்களுக்கு ஓய்வூதியம். 150-லேயிருந்து 200 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. "அப்பா, இந்தக் கிழவன், கிழவியெல்லாம் பார்த்தால் அய்யோ, ஒரே சிரிப்புதான். என்னம்மா, 200 ரூபாயா என்றால், அப்படியே சிரிக்கிறார்கள். அப்படிப்பட்ட மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். 200 ரூபாய் வரையில் டக்கு, டக்கு, டக்கு என்று உயர்த்தினார்கள் என்றால், என்ன அர்த்தம்? நிதியைப் பற்றிக் கவலைப்படாமல், நாட்டு மக்களின் நிலையைப் பற்றிக் கவலைப்படுகின்ற ஒரு முதலமைச்சர் இந்த நாட்டை ஆண்டுகொண்டு இருக்கிறார் என்ற உணர்வு அந்த மக்களிடத்திலே இருக்கிறது. ஏதோ கணக்கைப்போட்டு, கவிழ்த்துவிடலாம் என்று நினைத்தால், கவிழ்ந்து போவார்கள். அந்தக் கணக்கு தப்பாகிவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 மார்ச் 27] [திரு. ரா. சேதுநாதன்]

அதேபோல இணைப்புச் சாலைகள் திட்டம். நான்கூட பல ஊர்களுக்குப் போகும்போது கேட்டேன். அப்போது சுற்றிக்கொண்டு போக வேண்டும் என்று சொல்வார்கள். எத்தனை கிலோமீட்டர் என்று கேட்டால், ஐந்து கிலோமீட்டர் என்று சொல்வார்கள். குறுக்கே போனால் எவ்வளவு தூரம் என்று கேட்டால், அது கொடி வழிங்க, போகாதீர்கள் என்று சொல்வார்கள். 1/2 கிலோமீட்டர் இருக்கும், 1/2 கிலோமீட்டர், 1 கிலோமீட்டருக்கு எல்லாம் சாலை போட்ட 'காரணத்தால், ஐந்து கிலோமீட்டர் சுற்றிச் செல்கின்ற அந்த நிலை மாறியதால், அந்த மக்களும் மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனால் இதெல்லாம் எப்படி கலைஞருக்குத் தெரிகிறது என்று அவர்கள் வாயாரப் போற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதை நான் இங்கே சொல்வதற்குக் காரணம், மன்றத்தினுடைய ஓர் உறுப்பினர் என்ற முறையிலே அவர்களுடைய எண்ணங்களைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது.)* ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன்.

அதேபோல கல்விக்கு என்ன செய்தார்கள் என்று கேட்கிறார்கள். நாளைய தேர்தலைப் பற்றிச் சிந்திக்காமல், சமுதாயத்தைப் பற்றிச் சிந்திக்கிறார்கள் நம்முடைய முதல்வர் அவர்கள், கல்வி அமைச்சர் அவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு, முந்தைய ஆண்டைவிட 523 கோடி ரூபாய் கல்விக்கு அதிகம் ஒதுக்கியிருக்கிறார்கள். யார் கேட்கப் போகிறார்கள்? சமுதாயத்தைப்பற்றிச் சிந்திக்காத காரணத்தால் கேட்கிறார்கள். இந்த நிதிக்காகப் பாராட்டுகிறோம். மேலும் பள்ளிக்கூடங்கள் உயர்த்தப்பட வேண்டும், நிறைய கொடுக்கப்பட வேண்டும், படிப்பறிவு பெற வேண்டும், பகுத்தறிவு பெற வேண்டும், வறுமை ஒழிய வேண்டும், அதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எங்கள் மாவட்டத்திலே ஒரு கோரிக்கை. விழுப்புரத்திலே தலைமை நீதிமன்றம் இருக்கிறது. நல்ல கட்டடம் இல்லாமல் ஒழுகலாக இருக்கிறது; கிலகமாக இருக்கிறது. ஆகவே, நீங்கள் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தினை விழுப்புரத்திற்குத் தாருங்கள். நான் ஒரு வழக்கறிஞன் என்ற முறையிலே கேட்டுக்கொள்கிறேன். கோரிக்கையை ஏற்றுத் தாருங்கள், தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

இறுதியாக ஒன்று. நம்முடைய தலைவரைப் பொறுத்தவரையில், எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பதல்ல; வாழுகின்ற காலத்தில் எதைச் செய்தோம்; இந்தச் சமுதாயத்திற்கு எதைச் சாதித்திருக்கிறோம் என்ற

[திரு. ரா. சேதுநாதன்] [2000 மார்ச் 27

உணர்வோடு ஒவ்வொரு நொடியும் வாழுகின்ற தலைவர். வாழுங்கள், வாழுங்கள்; வரவு-செலவுத் திட்டங்கள் பல தாருங்கள்; நாட்டு மக்கள் ஏக்கத்தைப் போக்குங்கள், போக்குங்கள் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

***திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள் அளித்த பட்ஜெட் மீது ஒருசில கருத்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதல்வர் அவர்கள், கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம், இந்தச் சபையில் எந்தவிதமான அலுப்பும் காட்டிக்கொள்ளாமல், எந்தவிதமான தடுமாற்றமும் இல்லாமல், தண்ணீரும் அருந்தாமல், சிறப்பான முறையிலே அதனை அளித்தார்கள். அதை அளித்தபோது, இன்னொன்றையும் சொன்னார்கள். நான் விவசாயிகளை அழைத்துப் பேசினேன் என்று சொன்னார்கள். அதை நாங்கள் வரவேற்றாலும்கூட, கரும்பைப் பற்றி எங்கள் கொறடா திரு. ஞானசேகரன் அவர்கள் பேசினார்கள். உண்மையிலேயே நீங்கள் உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே சொல்லி இருக்கிறீர்கள். அவையெல்லாம், இந்தத் தடவையாவது வருமென்று, நாங்களெல்லாம் கரும்பு விவசாயிகள் என்ற முறையிலே எதிர்பார்த்தோம். ஒரு டன்னுக்கு ஆயிரம் ரூபாயாவது கொடுப்பீர்கள்; கொடுப்பதற்கான சிபாரிசுகளைச் செய்வீர்கள் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். அது கிடைக்காமல் போய்விட்டது. 8.5 சதவிகிதம் recovery வருகிறது. 8.5, 9 அல்லது 10 சதவிகிதம்கூட வருகிறது, நல்ல தண்ணீர் இருந்தால் அப்படி வருகிறது கரும்பிலே. அந்தமாதிரி வரக்கூடிய இடங்களில் எல்லாம், நீங்கள் ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கான நிலையை உருவாக்கிக் கொடுத்தால், நன்றாக இருக்கும். ஓராண்டுக்கு ஒரு ஏக்கருக்கு எவ்வளவு செலவாகிறது என்று பார்க்க வேண்டும். இப்போதெல்லாம் 100 ரூபாய் இல்லாமல் யாரும் வேலைக்குப் போவதில்லை. பெண்கள் 50 ரூபாய் இல்லாமல் வேலைக்குப் போவதில்லை. ஏன்தான் கொஞ்சம் நிலம் எங்களுக்கு இருக்கிறதோ என்று எனக்குத் தெரியவில்லை. அந்த நிலத்தைக்கூட எடுத்துக்கொண்டால் பரவாயில்லை. அரசாங்கமே எங்களுக்கு, கஞ்சி, தண்ணீர், துணி மணிகள் வாங்குவதற்குக் கொடுத்துவிட்டால், வேறு ஒன்றுமே தேவையில்லை.

"உழுபவன் கணக்குப் பார்த்தால், உழக்குக்கூட மிஞ்சாது" என்பது பழமொழி. அதுமாதிரிதான் இருக்கிறது. அந்தமாதிரி சூழ்நிலை இருப்பதனால், கரும்பு விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய அளவில்—எத்தனையோ செலவுகள் செய்கிறீர்கள்— நீங்கள் நினைத்தால்



2000 மார்ச் 27] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

இதையும் செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சர் இதை நினைக்கவில்லை. அவர்கள் மனதிலே வந்து இது நிறைவேற வேண்டும். எனவே ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கான வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வாங்கிய கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எனக்குச் சொல்ல மனம் வரவில்லை. ஏனென்றால், வாங்கிய கடனைத் திருப்பிக் கட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அபராத வட்டியைத் தள்ளுபடி செய்யலாம் என்று சொல்கிறீர்கள். அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதோடு, வட்டியையும் முழுமையாக நீங்கள் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை நீங்கள் திரு. சி. ஞானசேகரன் அவர்களுக்குச் சொல்கிறீர்களா? (சிரிப்பு)

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** ஆனால், முழுக் கடனையும் தள்ளுபடி செய்ய மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் ஒரு தடவை தள்ளுபடி செய்துவிட்டால், பிறகு எல்லோரும் பணம் வாங்கலாம்; தள்ளுபடி செய்துவிடுவார்கள் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியிலே உண்டாக்கக் கூடாது. மக்கள் மத்தியிலே வாங்கிய கடனைக் கட்டியாக வேண்டும் என்ற ஒரு நிலைமை உருவாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அபராத வட்டியோடு, வட்டியையும் தள்ளுபடி செய்து, வாங்கிய கடனுக்கு, அசலுக்கு, ஒரு கால நிர்ணயம் செய்து, இத்தனை ஆண்டுகளுக்குள்ளாக அசலைக் கட்டுங்கள் என்று சொல்லி வசூல் செய்தால், அது விவசாயிகளுக்குப் பேருதவியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மழை நீரைத் தேக்கி, நிலத்தடி நீரை வளப்படுத்துவதற்காக ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். ஏன், இதற்குக் குழு தேவையா? ஏன் குழு வேண்டும்? ஏழெட்டு வருடங்களுக்கு மழை குறைவான நிலைமை என் தொகுதியில் ஏற்பட்டது. நான் அந்த Agricultural Engineers-ஐ அழைத்தேன். B.D.O. அலுவலகத்தில் அமர்ந்து கொண்டேன். ஏன் ஐயா, எங்கெங்கெல்லாம் கண்மாய் கட்ட முடியுமோ, எங்கெங்கெல்லாம் தண்ணீரைக் கட்டுப்படுத்த முடியுமோ, மழை நீரைத் தேக்குவதற்கு எங்கெங்கெல்லாம் இடம் இருக்கிறதோ, அங்கெல்லாம் சென்று பார்த்துவிட்டு வந்து, அங்கே மழை நீரைத் தேக்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, அந்தமாதிரி என்னுடைய தொகுதியிலே 27 இடங்களில் கண்மாய்களில் நீரைத் தேக்கினோம். இன்றைக்கும் அங்கு தண்ணீர் நிரம்புகிறது. ஆகையினால் இதற்கு நிபுணர்

குழு இல்லாமல், அந்தந்த ஒன்றியங்களிலே அந்தப் பணியை ஒப்படைத்து, நீங்கள் அந்த வேலைகளைச் செய்யுங்கள் என்று சொன்னால், அதுவே போதுமானது என்பதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கதிரடிக்கும் களம் அவசியம் வேண்டும். சோழவந்தான் தொகுதி, என் தொகுதி. பத்தாண்டுக் காலத் தொகுதி அது. அங்கெல்லாம் களம் இல்லாமல், விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகையினால் நிலம் தனியாரிடமிருந்தாலும்கூட, அதை எடுத்து, அங்கு களம் அமைத்துக் கொடுப்பதற்கு அரசு முனைய வேண்டும்.

*பிற்பகல் 1-20*

அடுத்து உழவர் சந்தை. உழவர் சந்தை எல்லோருக்கும் பயன்படவில்லை. ஏழைகளுக்குப் பயன்படுவது உண்மைதான். காய்கறிகளை எல்லாம் பேருந்திலே இனாமாக எடுத்துச் செல்லலாம் என்று சொல்லிவிட்டீர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் ஒரு மூடை காய்கறியாக இருந்தால், தூக்கிக் கொண்டு போகலாம். அந்த Bus Driver, Conductor-களுக்கு Collection Batta வேண்டும். நாங்கள் காய்கறிகளைத் தூக்கிக் கொண்டுபோவதைப் பார்த்தால், பேருந்துகளை நிறுத்த மாட்டார்கள். ஒரு ஏக்கரிலே கத்திரிக்காய் போட்டேன் என்று வையுங்கள். எனக்கு 10 மூடை வருகிறது. நான் அவற்றை எப்படி Bus-ல் free-யாக தூக்கிக் கொண்டு போக முடியும்? ஆகையினால், விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்றால், தயவுசெய்து அதற்கென்று தனியாக லாரிகளை ஏற்பாடு செய்யுங்கள். லாரிகளை ஏற்பாடு செய்து அதன் மூலமாக அந்தக் காய்கறிகளைக் கொண்டுபோக ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் நாங்கள் உடனே அதனை விற்றுவர முடியாது. நாங்களே போய் கடை போட்டுக்கொண்டு இருக்க முடியுமா என்றால், அதுவும் முடியாது. அங்கே இருக்கக்கூடிய யாராவது ஒரு ஏஜென்டோ அல்லது வேறு யாரோ வாங்கிக் கொள்ளலாம். அதற்கு இங்கே அரசாங்கத்திலே ஆட்களை நியமித்து அந்தக் காய்கறிகளை எடுத்துக்கொண்டு இங்கு என்ன விலையோ, அந்த விலையை அந்த விவசாயிக்குக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினால் அதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். அது நன்றாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.





வத்தலகுண்டில் நிறைய காய்கறி வருகின்றது. அதையெல்லாம் பேருந்தில் கொண்டுவர முடியவில்லை. ஜீப்பில் கூட கொண்டு வரமுடியவில்லை. அவ்வளவு காய்கறிகள் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். மலையிலே பள்ளக்காடு தாண்டி, பூலத்தூர், கொடைக்கானல் ஆகிய இடங்களில் உற்பத்தியாகின்ற காய்கறிகள்தான் அங்கெல்லாம் வருகின்றன. ஆனால் வத்தலகுண்டில் பொதுமக்களிடம் இடம் இல்லை. நீங்கள் அங்கே உழவர் சந்தையை ஏற்படுத்தி அந்தக் காய்கறிகளையெல்லாம் அங்கே கொண்டு வரச்சொல்லி, அங்கிருந்து திண்டுக்கல்லுக்கோ, மதுரைக்கோ அனுப்பக்கூடிய ஒரு சூழ்நிலையை அரசாங்கமே ஏற்பாடு செய்தால்தான் அந்த உற்பத்தியாளர்களுக்கு போதுமான விலை கிடைப்பதற்கு ஒரு நல்ல சூழ்நிலை இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

என்னுடைய பகுதியில் நிறைய மல்லிகைப் பூ விளைகிறது. மாலைக்கு எல்லாம் உபயோகப்படுகின்ற சம்பங்கிப் பூவும் நிறைய விளைகிறது. நான் ஏற்கெனவே இரண்டொரு முறை இங்கே சொல்லியிருக்கிறேன். அந்த மல்லிகைப் பூவிலிருந்து தயாரிக்கப்படுவது jasmin தைலம். உலக நாடுகளிலே அதிலும் குறிப்பாக, இலண்டன் நகரத்தில் சிறிய பாக்கெட் தைலத்தின் விலை மிக அதிகம் என்று சொல்கிறார்கள். ஆகையினால் இந்த மல்லிகைப் பூவிலிருந்து jasmin தைலம் தயார் செய்வதற்கும் முயற்சி மேற்கொள்ள வேண்டும். சம்பங்கிப் பூவிலிருந்து எண்ணெய் தயாரித்து உபயோகித்தால் முடி உதிராது, நன்றாக வளரும் என்றெல்லாம் கூறி, அந்தக் காலத்திலேயே நாங்கள் சின்னப் பெண்களாக இருக்கும்போது நாங்கள் எல்லாம் சிறிய பிள்ளைகளாக படிக்கும்போது என்னுடைய அப்பா எங்களுக்கெல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிறார். ஆகையினால் அந்த எண்ணெய் தயாரிப்பதற்கும் இப்போது 413 ஏக்கர் எடுத்திருக்கிறீர்கள். எடுத்திருக்கிறீர்கள் என்று நானும் விடாமல் சொல்லிக் கொண்டிருக்கிறேன். முதல்வர் காதிலே வாங்குகிறார். எங்கேயெல்லாமோ செய்து கொண்டிருக்கிறார். ஆனால் நான் சொல்வதை செய்யக் காணோம். அந்த 413 ஏக்கர் பரப்பளவுள்ள இடம், நல்ல போக்குவரத்து வசதி, National Highways, Railway Station அத்தனை வசதிகளும் உள்ள இடத்தில் இருக்கின்றது. அந்த இடத்தை எடுத்து, அதில் ஏதாவது ஒரு நல்ல தொழில் பூங்காவை அமைப்பீர்கள் என்று நான் எதிர்பார்த்தேன். சாலை வசதி மற்றும் தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது; அதோடு மின்சார வசதியும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. இத்தனை வசதிகளையும் செய்து விட்டு, ஒரு ஏக்கர் நிலத்தை யாராவது தொழிலதிபர்கள் இங்கே தொழிலை ஆரம்பிப்பதற்காகக் கேட்டால்,

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [2000 மார்ச் 27

நம்முடைய அதிகாரிகள் ஒரு ஏக்கர் ரூ.5 இலட்சம் என்று சொல்கிறார்களாம். ரூ.5 இலட்சத்திற்கு ஒரு ஏக்கர் நிலத்தை யார் வாங்க வருவார்கள்? நீங்கள் வாங்கியதும் ஐந்திலே ஒரு பாகம்தான்; அரசாங்கம் வாங்கியது ஐந்தில் ஒரு பாகம். ஆனால் அங்கே ஒரு ஏக்கர் நிலம் எடுத்து, அதிலே தொழில் பூங்கா ஆரம்பிக்க வேண்டுமென்று யாராவது ஒரு தொழிலதிபர் கேட்டால் ஒரு ஏக்கர் நிலம் 5 இலட்சம், 5-1/2 இலட்சம் ரூபாய் என்று சொன்னால் யாருமே வாங்க வரமாட்டார்கள். எனவே தயவுசெய்து அதிக விலையைச் சொல்வதை நிறுத்தி, ஒரு ஏக்கருக்கு ஒரு இலட்சமோ அல்லது ஐம்பதாயிரமோ நீங்கள் சொல்லி, இலாப நஷ்டக் கணக்கைப் பார்க்கக்கூடாது என்று சொல்கிறேன் நான். இலாப நஷ்டம் யார் பார்ப்பது? வட்டிக்கு விடுபவர்கள்தான் பார்ப்பார்கள். நாம் மக்கள் பணி செய்வதற்குத்தானே இங்கே இருந்துகொண்டு இருக்கிறோம்? எத்தனை முறை, எங்களைக் கேட்டீங்களே அய்யா, இருபது ஆண்டு காலமாகிவிட்டது என்று சொன்னீர்கள் அன்றைக்கு. ஆனால், 33 ஆண்டு காலமாக இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறீர்கள். உங்களை நம்பித்தான் மக்கள் ஓட்டு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களுக்குச் செய்ய வேண்டிய பணியை நீங்கள் தவறாமல் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதை அழுத்தந்திருத்தமாக உங்கள் மத்தியிலே சொல்ல விரும்புகிறேன். எனவே அதைக் குறைத்துக் கொடுப்போமேயானால், நிச்சயமாக அங்கு தொழில் தொடங்குவதற்கு எல்லோரும் வருவார்கள். அது சிறப்பான முறையிலே அமையும்.

அடுத்து வெள்ளம், வெள்ளம் என்று நான் சொல்லிக்கொண்டே இருக்கின்றேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவிரி பிறந்த பகுதியிலே இருந்து வந்ததாலே காவிரிதான் நினைப்பிலே வரும் போல் இருக்கிறது. இந்த வைகைப் பகுதியை அவர் நினைப்பதே இல்லை. நான் ஒரு முறை இல்லை, பலமுறை வெள்ளத்தைப் பற்றிச் சொல்லியிருக்கின்றேன். என்னுடைய பகுதியில், சென்ற முறை 1998 என்று நினைக்கிறேன். நம்முடைய மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள், அருமைத் தம்பி பெரியசாமி இங்கே இருக்கிறார்கள். பல முறை வெள்ளம் வந்துவிட்டது. என் தலையெழுத்தோ என்னமோ தெரியவில்லை. அந்த முறையும் வெள்ளம் வந்துவிட்டது. நாங்கள் அங்கே போவதற்குள்ளே கலெக்டர் படகில் போய்விட்டார். மல்லியம்பட்டி, சித்தலன்நத்தம், பறையப்பட்டி, சக்கிலிப்பட்டி, இந்த நான்கு ஊர்களும் வெள்ளத்தில் முழுமையாக அடித்துப் போய்விட்டன. அதேபோல குன்னுவாரன்கோட்டை என்ற ஊரும் அடித்துப் போய்விட்டது. இங்கே ஒரு கூட்டத்திற்கு வந்த நான், விஷயம் அறிந்து அங்கே போகும்போது



2000 மார்ச் 27] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

அமைச்சர் வந்துவிட்டார்கள். அப்போது படகை எடுத்துக்கொண்டு கலெக்டர் எல்லாம் போய்விட்டார்கள். இவ்வளவு தண்ணீரா, இவ்வளவு தண்ணீரா என்று அமைச்சர் சொல்லிக்கொண்டு முன்னால் சென்றார். நான் சின்னப் பிள்ளை அல்ல. வயதான பெரிய மனுஷி. நானும் ஒரு துணியோடு அந்தத் தண்ணீரிலே சென்றேன். பெரியசாமி அவர்கள் பார்த்துவிட்டு நீங்கள் முன்னால் செல்லுங்கள் அக்கா என்று சொன்னார்கள். நான் பின்னாடி வருகிறேன். நீங்கள் முன்னாடி போங்க அக்கா என்று சொன்னார்கள். ஒரு வெள்ளம் பலமாக வந்தால் எனக்கு என்ன சக்தி இருக்கிறது. அந்த வெள்ளத்திலே நான் அடித்துப் போய் இருக்க வேண்டும். நல்ல வேளை, கடவுளை கும்பிட்டுக்கொண்டே போனேன். அங்கே ஒரு அனுமார் கோவில் இருக்கிறது. அந்த ஆண்டவனைக் கும்பிட்டுக்கொண்டே போனேன். அப்பா, என்னை வெள்ளம் அடித்துக்கொண்டு போய் விடக்கூடாது, நான் பெரிய பேச்சுக்கு ஆளாகிவிடுவேன் என்று கும்பிட்டுக்கொண்டே போனதாலே, அந்த வெள்ளத்திலிருந்து தப்பித்து, அங்கே சென்று, ஹெலிகாப்டரிலிருந்து உணவுப் பொட்டலங்களைப் போடுவதற்கு ஏற்பாடு செய்தோம். நானும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும், கலெக்டரிடத்திலே சொல்லி, உணவுப் பொட்டலங்களைப் போடுவதற்கான ஏற்பாடு செய்தோம்.

பிற்பகல் 1-25

அடுத்து ஒரு குடும்பத்திற்கு ஒரு சேலை, ஒரு வேஷ்டி என்று அரசாங்கம் கொடுக்கிறது. 5 கிலோ அரிசி. அது பச்சை, பச்சையான அரிசி என்றெல்லாம் சொல்லவில்லை. நானும், தம்பியும் பேசிவிட்டு, சரிப்பா, அதை ஜலித்துப் போடு என்று சொல்லிவிட்டோம். ஆனால் என்னுடைய தலையெழுத்து, ஒவ்வொரு முறையும், வெள்ளம் வந்த சமயத்திலேயெல்லாம், நான் தனியாக வாங்கிக் கொடுத்தே பழகிப்போய் விட்டேன்.

பிறகு, நானும் ஆயிரம் சேலை, ஆயிரம் வேஷ்டி, ஒரு மூடை அரிசி 1350 ரூபாய் என்று 30 மூடை வாங்கி, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு சேலை என்று அதை சின்னாளம்பட்டியிலே வாங்கினேன். சின்னாளம்பட்டியிலே 110 ரூபாய் சேலையை எனக்கு 85 ரூபாய்க்கு விலை போட்டுக் கொடுத்தார்கள். அந்தக் கடனைக்கூட இப்போதுதான், கொஞ்சம், கொஞ்சமாக ஒரு புண்ணியவானிடம் சொல்லி, என்னுடைய பணத்திலிருந்து 5 ஆயிரம் ரூபாயாகக் கொடுத்தேன். மற்றதெல்லாம், என்ன சாமி, நீங்கள் கொடுங்கள், அக்கா மாட்டிக்கொண்டேன், அக்கா மாட்டிக்கொண்டேன் என்று சொல்லி, அவர்களுக்கு இரக்கம் இருந்த

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [2000 மார்ச் 27

காரணத்தாலே, அந்தக் கடனை, ஒவ்வொரு மாதமும், 6,000 ரூபாய் கடனை நானே அடைத்தேன். இதை ஏன் சொல்கிறேன் என்றால், இந்த வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கு, அங்கே ஒரு தடுப்புச் சுவர் கட்ட வேண்டும்.

முதலமைச்சருக்கும், மற்ற அமைச்சர்களுக்கும், திருச்சியைத்தான் தெரியும். திருச்சியிலே வெள்ளம் வந்தால் போய்ப் பார்க்கிறீர்கள். நாங்கள், பாதிக்கப்பட்டது தெரியவில்லையா? உங்களுக்கு இரக்கம் இல்லையா? எத்தனை வேலை செய்து கொடுத்திருக்கிறீர்கள்? என்ன பயன்?

அவர்களுக்கு 1000 வீடுகள் வேண்டும். அதைப்பற்றிக்கூட நான் கேள்வியாகப் போட்டுவைத்து இருக்கிறேன். ஒரு வீட்டிற்கு 50,000 ரூபாய் என்று கொடுங்கள். நீங்கள் முழுமையாகக்கூட இனாமாகக் கொடுக்க வேண்டாம். 25,000 ரூபாய் கடனாகக் கொடுங்கள், வட்டியில்லாக் கடன். 25 ஆயிரத்தை இனாமாகக் கொடுங்கள், அந்த மக்கள் வீடு கட்டிக் கொள்ளட்டும் என்று. அதையும் நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். ஆனால் இந்த வேலையைச் செய்வது மாத்திரமல்லாமல், குன்னுவார் கோட்டையிலிருந்து, பேரணை வரைக்கும் தடுப்புச் சுவர் எத்தனை ஆயிரமானாலும், எவ்வளவு பணமானாலும், கட்டினால்தான், என்னுடைய மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியும். இல்லாவிட்டால், உண்மையிலேயே நான் சட்டமன்ற உறுப்பினராக 7 முறை, 8 முறை வந்தும்கூட, பயனற்றவளாகத்தான் ஆகிவிடுவேனே தவிர, நான் மக்களுக்கு பணியாற்றக்கூடியவளாக ஆக முடியாது என்பதை நான் இந்த நேரத்திலே மிக்க வருத்தத்துடன் கூறிக்கொள்கின்றேன். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சற்று இரக்கப்பட வேண்டும். அவர்களுக்கு இரக்கச் சிந்தனை இப்போதுதான் அற்றுப்போய்விட்டதோ, என்னவோ தெரியவில்லை. சொன்னதையெல்லாம் செய்தார். எப்படியெல்லாம் செய்தார். ஆனால் இப்போது என்னவோ மனதைக் கல்லாக்கிக் கொண்டார். அப்படியே பேசாமல் கட்டுப்படுத்திக் கொண்டுவிட்டார். ஆகையினாலே இந்த அம்மாவும் பாவம், அன்றைக்கு சின்னப் பெண்ணாக இருந்தது. அப்போது நீங்கள் எல்லாம் கனல்பறக்க சபையிலே பேசினீர்கள்; அன்றைக்கு வந்த அந்த அம்மா பாவம் இல்லையா, வயதாகிவிட்டது இல்லையா, அந்த அம்மா சொல்வதைச் செய்யலாம், என்று அப்படி மனதிலே நல்ல எண்ணத்தை வைத்து, தயவுசெய்து, இந்த ஆண்டிலேயே அந்தத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கான ஒரு முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



2000 மார்ச் 27] [திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள்]

அடுத்து, பெண்கள் குறித்து, மறவர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் இனப் பெண் குழந்தைகளுக்கு மூன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரைக்கும் 60 ஆயிரம் குழந்தைகளுக்கு, ஆண்டு ஒன்றிற்கு, 500 ரூபாய் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். அது மாதிரி, ஆறாம் வகுப்பு படிக்கும் 30 ஆயிரம் பெரிய குழந்தைகளுக்கு மாதம் 100 ரூபாய் வழங்கப்படும் என்று சொல்லி இருக்கின்றீர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் நீங்கள் ஒரு பள்ளியிலே எல்லா ஜாதிக் குழந்தைகளும் படிக்கும்போது, ஹரிஜன குழந்தைகளும் படிக்கும்போது, ஒரு பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் பணத்தைக் கொடுத்தால், பாக்கியுள்ள குழந்தைகள் என்ன நினைப்பார்கள், கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள். பாக்கியுள்ள குழந்தைகள், அந்த ஹரிஜனக் குழந்தைகள் நமக்குப் பணம் இல்லையே என்று நினைக்க மாட்டார்களா, அந்தத் தாய்மார்கள் குமுற மாட்டார்களா? எனவே இதனை மாற்றி எல்லாக் குழந்தைகளுக்கும், பெண் குழந்தைகளுக்கும், இந்த உதவிப் பணம் கொடுக்க வேண்டும்....

*** மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மட்டும்தான் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட ஆதிதிராவிட சமுதாயத்தில் பிறந்த பெண்களின் கல்வி தடை படாமல் இருக்க வேண்டுமென்பதற்காக, 'தடைபடா பெண் கல்வி' என்ற ஒரு அற்புதத் திட்டத்தைத் தந்து, அந்த மாணவியர்களுக்கு கடந்த ஆண்டு ரூ. 6 கோடி வழங்கியது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** கொஞ்சம் நேரம் கிடைக்கும் என்பதற்காகத்தான் கடைசியில் பேசினேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

[2000 மார்ச் 27

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** நன்றி. தென் ஜில்லாக்களில் மிகவும் பாதிப்பு ஏற்படுகிறது என்று சொல்லி, அங்கே அவர்களுக்கு பல காரியங்கள் செய்ய வேண்டுமென்று கமிஷனை நாம் அமைத்தோம். அதாவது, மேன்மைதங்கிய ஜஸ்டிஸ் இரத்தினவேல்பாண்டியன் அவர்கள் தலைமையிலே ஒரு கமிஷன் அமைத்தோம். அந்தக் கமிஷனிலே அவர்கள் பல நல்ல காரியங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த தென் ஜில்லாக்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு கோளாறு ஏற்படாமல் தடுப்பதற்கு. அங்கே சாதிக் கலவரம் ஏற்படாமல் தடுப்பதற்கு, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதோடு மாத்திரம் அலலாமல், எல்லாத் துறைகளிலும் அந்த ஜில்லா மக்களுக்கு எல்லா உதவியும் செய்ய வேண்டும் என்று அவர்களே அதிலே பரிந்துரை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 23-1-2000-லே ஒரு G.O. போட்டு அதை நீங்கள் வாபஸ் வாங்கிவிட்டீர்கள். போட்ட அந்த ஆணையையே அரசு வாபஸ் வாங்கி இருக்கிறது. இது நியாயம் இல்லை. ஒரு கமிஷனைப் போட்டு, அதுவும் ஒரு ஜஸ்டிஸ் தலைமையிலே போட்டு, நமது சீதாராமதாஸ் ஐ.ஏ.எஸ்., அவர்கள், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்தாலும்கூட மிகச் சிறப்பான முறையில் பணியாற்றக்கூடியவர்— அவர்களை எல்லாம் உறுப்பினராகப் போட்டு, அவர்கள் எல்லாம் ஊரெல்லாம் போய்ப் பார்த்துவிட்டு வந்தபிறகு, இப்போது நீங்கள் போட்ட ஆணையையே வாபஸ் வாங்கிவிட்டீர்கள் என்றால் (குறுக்கீடு) அதாவது 23-1-2000-லே ஒரு G.O. போட்டோம், அந்தச் சலுகைகள் வாபஸ் பெறப்பட்டன என்று. அந்த தென் ஜில்லாக்களுக்கு செய்யப்பட்ட சலுகைகள் வாபஸ் பெறப்பட்டன என்று ஒரு G.O. போட்டிருக்கிறோம். அதை வேண்டுமானால் எழுதிக்கொடுக்கிறேன். நான் தருகிறேன். (குறுக்கீடு) கமிஷன் இருக்கிறது சார், ஆனால் செய்யக்கூடிய சலுகைகள் இல்லையே சார். செய்யக்கூடிய சலுகைகள் என்ன ஆயிற்று? போட்ட ஆணையை வாபஸ் வாங்கிவிட்டோம். அவர்களுக்கு செய்யக்கூடிய சலுகைகள் என்ன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, இப்போது நீங்கள் சொல்வது தெளிவாகப் புரியவில்லை. எந்த ஜி.ஓ. எப்போது வாபஸ் வாங்கினார்கள்?

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** 23-1-2000 அன்று போடப்பட்ட ஜி.ஓ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எந்த ஜி.ஓ.?



2000 மார்ச் 27]

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** அதாவது தென் ஜில்லாக்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்ய வேண்டிய சலுகைகள் பற்றி எந்தச் சலுகை, என்ன சலுகை என்றால் அவர்களுக்கு எல்லாம் வீடு கட்டிக் கொடுப்பது. வேலைவாய்ப்பு கொடுப்பது, கலவரத்தில் ஈடுபடாமல் இருக்க அவர்களுக்கு தொழில் துறையில் வேலைவாய்ப்பை ஏற்படுத்துவது. இந்த சலுகைகள்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** அதை நான் எழுதிக் கொடுக்கிறேன். தயவுசெய்து இதை நீங்கள் வாபஸ் பெறாமல் அந்த G.O.-வை இன்னும் 5 ஆண்டுகள் அமல்நடத்தி அந்தப் பகுதி மக்களுக்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒன்று தான். என்ன சார், கடைசியாக அதிக நேரமே கொடுக்கவில்லையே சார். கடைசியாகப் பேசுகிறேன். கொஞ்சம் அனுமதியுங்கள்.

வாழ்ந்து காட்டுவோம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறீர்கள். அதை உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன். 24,000 குழுக்களை அமைத்து 4 இலட்சத்து 42 ஆயிரம் பெண்களை அதிலே அங்கத்தினர்களாக சேர்த்து அவர்களுக்கு வங்கியின் மூலமாக 97 கோடி ரூபாய் கடன் வாங்கிக் கொடுத்து, அவர்களை சுயதொழில் செய்யச் சொல்லி, இப்போது அவர்கள் மூலமாக 32 கோடி ரூபாயை சேமிப்பு செய்யக்கூடிய ஒரு நிலைமையை நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள் என்றால் நான் அதைப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா மாவட்டங்களுக்கும், எல்லாப் பகுதிக்கும் இதை நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கமிஷன் போட்டீர்கள். அந்த வெள்ளை அறிக்கை வைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஒரு துறையிலேகூட S.C, S.T-க்கு 18 சதவிகிதம் நிரப்புவதே இல்லை. எதிலுமே இல்லை. ஐந்து, ஏழு, தான். ஒன்றே ஒன்றில்தான் 11. இந்த அரிசனவாழ் அதிலேகூட இல்லை. அந்த அளவிற்கு இருக்கிறது. ஆகையால் அவர்களுக்கு அந்த 18 சதவிகிதம், S.T.-க்கு ஒரு சதவிகிதம், மொத்தம் 19 சதவிகிதம் எல்லாத் துறைகளிலும் கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்க வேண்டும். அதுமாதிரி, நீதித் துறை, இராணுவம் . . . . (மணியடிக்கப்பெற்றது)

[2000 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் உரையை முடித்துவிட்டதாகக் கருதப்படுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும், நாளை (28-3-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 1-34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

98. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 22-2-1999 ஆம் நாளிட்ட 55 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

99. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம ஊராட்சிகள் (தொகைகளை வசூலிப்பது மற்றும் வசூலிக்க முடியாத வரிகள், கட்டணங்கள் முதலியவற்றை தள்ளுபடி செய்வதற்கான அதிகாரம்-வரையறைகளும், கட்டுப்பாடும்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 2-12-1999 ஆம் நாளிட்ட 244 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

100. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிகள் (மாவட்ட திட்டமிடும் குழு உறுப்பினர்கள் தேர்தல்) விதிகள் வகுப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 2-12-1999 ஆம் நாளிட்ட 245 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

101. 1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவு விடுதிகள் மற்றும் தங்கும் விடுதிகளில் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிகவரிகள் துறையின் 30-9-1999 ஆம்



2000 மார்ச் 27]

நாளிட்ட 209 ஆம் எண் அரசாணையில் வெளிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகளின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

102. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் இருபத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1998-99) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

103. தமிழ்நாடு கிராபைட் நிறுவனத்தின் இரண்டாவது ஆண்டறிக்கை. (1998-99). (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

104. தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. (1998-99) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

105. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நாற்பத்தி ஒன்றாவது ஆண்டறிக்கை. (1998-99) [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

106. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் இருபத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை. (1998-99) [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 35 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

19. செங்கற்பட்டு, மறைமலை நகரிலுள்ள திருவாளர்கள் ஃபோர்டு இந்தியா நிறுவனம் மூலம் தமிழ்நாடு மாநிலத்திற்குள் தயாரிக்கப்பட்டு பிற மாநிலங்களில் விற்பனை செய்கிற வண்டிகள் (மற்றும் அதன் பாகங்கள்) பதிவு பெற்ற வணிகர்களுக்கு அல்லது அரசுகளுக்கு விற்பனை செய்வதின் மூலம் 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய வரியை 1-11-1999 ஆம் நாளிலிருந்து 14 ஆண்டுகளுக்கு ஒரு சதவீத விலை மதிப்பீட்டின்படி சலுகை முறையில் வரி செலுத்த அனுமதித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டது குறித்து வணிகவரிகள் துறையின் 22-10-1999 ஆம் நாளிட்ட 221 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

[2000 மார்ச் 27

20. 2000-2001 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1 முதல் 61 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள் (61 புத்தகங்கள்)

21. 2000-2001 ஆம் ஆண்டிற்கான கடன் செலவுகள் குறித்த மானியக் கோரிக்கை.

22. 2000-2001 ஆம் ஆண்டிற்கான பொதுக் கடன் திருப்பிச் செலுத்துதல் குறித்த விரிவான மானியக் கோரிக்கை.

23. 2000-2001 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 36-பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்)

24. 2000-2001 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 38-சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்)

25. 2000-2001 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 55-பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு குறித்த விவரங்கள் (ஆங்கிலம்)

26. 2000-2001 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 56-சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு குறித்த விவரங்கள் (ஆங்கிலம்)

27. 2000-2001 ஆம் ஆண்டின் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்

28. 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை.

29. 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு (பகுதி-1)

30. 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு (பகுதி-2)

31. 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.

32. 2000-2001 ஆம் ஆண்டின் திட்டம் (திட்டம்-வரவு செலவுத் திட்ட இணைப்பு) 2000-2001 ஆம் ஆண்டின் விரிவான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு.

33. 2000-2001 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.

34. 2000-2001 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட விளக்க நூல் (தமிழ், ஆங்கிலம்)



2000 மார்ச் 27]

35. 2000-2001 ஆம் ஆண்டின் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

36. 2000-2001 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை குறித்து மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

ஓ ஓ

222773

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 816, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.